T. 1999

# கந்த புராணத் திரட்டு

## யுத்த காண்டம், தேவ காண்டம்

## தக்ஷ காண்டம்

ரா. [illegible] சேதுப் பிள்ளை, [illegible] எல்.,

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர், சென்னை - 4

# வேலும் — வில்லும்

சீர்திருத்தம் 2-ஆம் பதிப்பு

(ரா. பி. சேதுப்பிள்ளை, பி ஏ., பி.எல்., இயற்றியது.)

வேற்படை எடுத்த முருகனும் விற்படை ஏந்தும் ராமனும் வீரத்துக்கும் எழிலுக்கும் தெய்வங்களாக அன்பர்களின் உள்ளத்திலே விளங்குகிறார்கள். அவ்விருவர் வீரத்தையும் கருணைச் சிறப்பையும் விளக்குவன கந்தபுராணமும் கம்பராமாயணமும். அந்த இரண்டு தமிழ்க் காவியங்களும் சொல்லாலும் பொருளாலும் பல ஒப்புமை உடையன.

இந்த ஒப்புமை ஒருவகையான தனிச் சுவையை உண்டாக்கும். அச்சுவையை நுகர இந்த நூல் துணையாக நிற்கும்.

கதைப் போக்கிலே ஒப்புமை, கருத்திலே ஒற்றுமை, சொற்சுவையிலே ஒப்பு — முதலிய பலவற்றை இனிய தமிழ் நடையிலே எடுத்துக்காட்டும் அரிய இலக்கிய விமரிசனம் இது. விலை ரூ. 1-4

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4.

# கந்தபுராணத் திரட்டு

## யுத்த காண்டம், தேவ காண்டம்
## தக்ஷ காண்டம்

(பாட்டும் பயனும்)

C. F. 506—1,64,822—20-1-54.
LIBRARY.

Book No.
Date of purchase
Price

This book should be returned on or before the date last marked below :—

# முகவுரை

ஸ்கந்த சஷ்டித் திருநாளாகிய இப் பெருநாளில் ஸ்கந்த புராணத் திரட்டின் மூன்றும் பாகம் வெளிப்படுகின்றது. யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம் என்னும் மூன்று காண்டங்களினின்றும் திரட்டப்பெற்ற 558-ப் பாடல்களை யுடையது இப்பாகம்.

மூன்றாண்டுகளுக்கு முன்னே தொடங்கிய இம் முருகப்பணி இன்று நிறைவுறுகின்றது. கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணத்தில் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு பாடல்கள் திகழ்கின்றன. அவற்றினின்றும் திரட்டப்பெற்ற பாடல்கள் ஆயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்றாகும். சென்னையம்பதியில் கந்த கோட்டத்தில் அமர்ந்து மெய்யடியார்க்கு அருள் புரியும் முருகவேள் திருவடிகளில் நின்று இதனைக் கையுறையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

வியயஹு }
ஐப்பசிமீ }

ரா. பி. சேதுப் பிள்ளை.

ராஜன் எலெக்ட்ரிக் பிரஸ், சென்னை.
Q: H. M. S. 109—Nov, 46.

உ

முருகன் துணை

# கந்தபுராணத் திரட்டு

## 3. யுத்த காண்டம்

### கடவுள் வணக்கம்

*நாரணன் என்னும் தேவும்*
*நான்முகத் தவனும் முக்கண்*
*பூரணன் தானும் ஆகிப்*
*புவிபடைத் தளித்து மாற்றி*
*ஆரண முடிவும் தேறா*
*அநாதியாய் உயிர்கட் கெல்லாம்*
*காரணன் ஆய மேலோன்*
*கழலிணை கருத்துள் வைப்பாம்,*

### முருகன் போர் புரிய எழுதல்

*இரவிவந்து உதய வெற்பின்*
*எய்திய காலை தன்னின்*
*அரியணை மிசையே வைகும்*
*அறுமுகன் கொண்ட அண்ணல்*

---

2. கதிரவன் உதயகிரியிலே தோன்றினன். அப்போது அரியாசனத்தில் எழுந்தருளியிருந்த அறுமுகப்

பிரமன்மால் மகவான் தேவர்
முனிவரர் பிறரும் கேட்ப
வரமிகு சிறப்பின் வீர
வாகுவை நோக்கிச் சொல்வான். 2

பாவமே பயிலும் சூர
பன்மனும் அவுணர் ஆனோர்
ஏவரும் முடிவார் ஆக
இமையவர் இடும்பை நீங்க
மாவியல் இன்று வீர
மகேந்திர புரத்துக் கின்னே
போவது புரிதும் நம்தேர்
பொள்ளெனக் கொணர்தி என்றான். 3

வள்ளல்மற் றிதனைச் செப்ப
மாலயன் மகவான் ஆதி
உள்ளபண் ணவர்கள் கேளா
உவகையம் கடலின் மூழ்கித்
தெள்ளிதின் எமது துன்பம்
தீர்ந்தது தீர்ந்தது என்னாத்
துள்ளினர் ஆடிப் பாடி
அவனடி சூடல் உற்றார். 4

---

பெருமான் அயனும் அரியும், இந்திரனும் வானவரும், முனிவர்களும் மற்றுமுள்ளோரும் கேட்க, வரம்பெற்றுயர்ந்த வீரவாகுவை நோக்கி,

3. "பாவமே புரியும் சூரனும் அசுரர் அனைவரும் இறந்து படவும், வானவரது துயரம் நீங்கவும், வீர மகேந்திரத்திற்கு இன்றே செல்வோம். விரைவில் நம் தேரைக் கொண்டு வருக" என்றார்.

4. வள்ளலாகிய முருகப் பெருமான் பேசிய வாசகத்தைக் கேட்டபோது அங்கிருந்தவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கினர்; எமது துன்பமெல்லாம் தீர்ந்தது, தீர்ந்தது என்று துள்ளினர்; ஆடினர்; பாடினர்; ஐயன் சேவடியைத் தலையின்மேற் சூடினர்.

அந்தமில் இலக்கத் தோரும்
அவரலா எண்மர் தாமும்
மந்தரம் உறழும் வீர
வாகுவாம் வன்மை யோனும்
எந்திர வயமான் தேரின்
வீற்றுவீற் றேறி யார்க்கும்
சிந்தையி னுனும் எட்டாத்
தேவர்கள் தேவற் சூழ்ந்தார். 5

எழுந்தன அனிக வெள்ளம்
ஈண்டிய எங்கும் விண்ணோர்
பொழிந்தனர் பூவின் மாரி
பூதர்தம் தெழிப்பு விண்ணும்
ஒழிந்திடு திசையும் பாரும்
உற்றன உலைந்தது ஆழி
அழிந்தன கருவி வானம்
அண்டம்நெக குடைந்த மாதோ. 6

இவ்வகை அயில்வேல் அண்ணல்
இராயிரம் பூத வெள்ளம்
கவ்வையின் அமைந்து செல்லக்
கனைகடல் வரைப்பின் ஏகி

---

5. அழிவில்லாத இலக்கவீரர்களும், எட்டுச் சிறந்த வீரரும், மந்திர மலைபோல் திண்மை வாய்ந்த வீரவாகுவும், தனித் தனியே தேர்களில் ஏறித் தேவ தேவனாகிய முருகப்பெருமானைச் சூழ்ந்தார்கள்.

6. பூதப்பெரும்படை எங்கும் நிறைந்தது; வானவர் பூமாரி பொழிந்தார்கள். பூதர் செய்த அட்டகாசம் எட்டுத் திசைகளிலும் சென்று விண்ணிலும் மண்ணிலும் நிறைந்தது. கடல் கலங்கிற்று; கார் மேகம் கலைந்தது; அண்ட கோளமும் உலைந்தது.

7. இவ்வாறு வேற்படை தாங்கிய முருகவேள், ஈராயிரம் பூத வெள்ளம் ஆரவாரத்தோடு தொடர்ந்து வர, ஆகாயவழியே கடல்மீது எழுந்து சென்று, தாது

எவ்வம தடைந்த தொல்லை
　　இலங்கையம் குவடு நீங்கி
மைவரை புரைசூர் மேவும்
　　மகேந்திர புரமுன் போந்தான். 7

## வீரமகேந்திரத்தில் படை வீடு அமைத்தல்

மாடகூட மண்டபம்
　　வளங்கொள் சோலை வாவிகள்
பீடுலாய கோபுரம்
　　பிறங்கு வீதி யோர்திசை
கோடிகோடி ஆக்கி மற்றொர்
　　கோநகர் இயற்றியே
நாடும் ஏம கூட மென்று
　　நாமம் ஒன்று நாட்டினான். 8

வடதிசை அதனிற் போந்து
　　வானவர் புனைவன் கொண்டே
படிபுகழ் தகைமைத் தான
　　பாசறை புரிவித்து ஆங்கே
புடைதனின் அனிக மான
　　பூதவெவ் வீரர் மேவ
நடுவணோர் நகரம் தன்னின்
　　நண்ணிவீற் றிருந்தான் அன்றே. 9

---

சென்ற வீரவாகுவால் துயரமுற்ற இலங்கையைக் கடந்து, கருமலை போன்ற சூரன் வீற்றிருந்த மகேந்திரபுரத்தின் முன்புறம் போந்தார்.

8. (அங்கு, முருகப்பெருமான் ஆணைப்படி) தேவ தச்சன் மாட கூடங்களும், மண்டபங்களும், மணிப்பூஞ் சோலைகளும், தடாகங்களும், அழகிய தெருக்களும், கோடிகளிற் பெரிய கோபுரங்களும் அமைத்து, அச்சிறந்த பாடி வீட்டுக்கு ஏமகூடம் என்று பெயரிட்டான்.

9. "உலகம் புகழத்தக்க படை வீட்டை அமைத்து, அதன் நடுவேயுள்ள நகரத்தில் பூதவீரர் புடைசூழ வீற்றிருந்தார் முருகன்.

## அதை அறிந்த சூரன் சீறுதல்

கண்டனம் இதனை இன்னே
கடவது புரிதி என்றுத்
திண்திறல் வெய்ய தூதர்
செப்பலும் அதனைக் கேளா
அண்டமும் புவனம் யாவும்
அலமர அழலிற் சீறிப்
புண்திகழ்ந் தனைய கண்ணன்
இவையிவை புகலல் உற்றான். 10

கோதை வேலுடைக் குமரனது
ஆற்றலும் கொற்றப்
பூதர் ஆற்றலும் ஏனையர்
ஆற்றலும் போர்செய்
தூதன் ஆற்றலும் தொலைக்குவன்
துண்ணென நீவிர்
ஆதவன்தனிப் பகைஞனைக்
கொணர்திர் என் றறைந்தான். 11

## பானுகோபனைப் போர்செய்யப் பணித்தல்

தேரின் நின்றிழிந்து அண்ணலம் கோயிலுட் சென்று
சூர பன்மனை அணுகியே அவனடி தொழுது

---

10. "நாங்களே இதனைக் கண்டோம். இப்பொழுதே செய்ய வேண்டியதைச் செய்க" என்று ஒற்றர் சூரனிடம் வந்து கூறினர். அந்நிலையில் நெருப்பெனச் சீறினான் சூரன். அவன் கண்கள் குருதியின் நிறங் கொண்டன. அண்டமும் உலகமும் சுழன்றன.

11. வெற்றி வேலுடைய குமரவேளின் ஆற்றலையும், பூதப்படையின் வலிமையையும், மற்றையோர் திறமையையும், போர் செய்த தூதுவன் விறலையும் இன்னே தொலைப்பேன். பானுகோபனை அழைத்து வருக" எனப் பணித்தான்.

12. (அதையறிந்த பானுகோபன் தன் மாளிகையினின்றும் போந்து) தேரை விட்டிறங்கி, சூரன் இருந்த இடம் சென்றான். அடிவணங்கினான். "வீரர் பெருமானே!

வீர வீரனீ எனை இவண் விளித்ததென் என்ன
வார் இருங்கழல் மன்னவன் இன்னன வகுப்பான். 12

முந்து தாரக எம்பியை
வரையொடு முடித்த
கந்த வேள்செந்தி நீங்கியே
அளக்கரைக் கடந்து
நந்தி தன்கணத் தலைவரும்
பூதரும் நணுக
இந்த மாநகர் வடதிசை
வாயில்வந் திறுத்தான். 13

அந்தண் மாமுகில் உயர்த்தவன்
வேண்டலும் அமலன்
தந்த கந்தனைச் சாரதத்
தலைவர்களோடும்
நந்தமைப்பொர விடுத்தனன்
ஆதலின் நானும்
மைந்த நிற்கொடு வென்றி பெற்று
இருந்திடல் வழக்கே. 14

---

என்னை எதற்காக அழைத்தாய்" என வினவினான். அப்போது வீரக்கழலணிந்த அடிகளையுடைய மன்னவன் கூறலுற்றான்.

13. "மைந்தனே! தாரகனைக் கொன்று, அவன் குன்றையும் அழித்த கந்தவேள், திருச்செந்தூரினின்றும் புறப்பட்டு, கடல் கடந்து, நந்தி கணங்களும், பூதப்படைகளும் கொண்டு, இந்நகரின் வடபால் வந்தடைந்தான்.

14. மேகக் கொடியுடைய இந்திரன் வேண்டுகோளுக்கிசைந்து ஈசன் தன் மைந்தனாகிய கந்தனைப் பூதத் தலைவர்களுடன் இங்கு போர்புரிய விடுத்தான். ஆதலால், மகனே! நானும் என் மைந்தனாய உன்னைக் கொண்டு வெற்றி பெறுதலே முறையாகும்.

ஆதலால் இனிப் படையொடும்
அமர்க்களத் தடைந்து
நாதன் மைந்தனை நந்திதன்
கணத்துளார் தம்மைப்
பூதர் தங்களைப் பொருதழித்து
அடல்வயம் புனைந்து
காதல் மைந்தநீ மீடியால்
நம்முனம் கடிதின். 15

## பானுகோபன் படை எடுத்தல்

வடித்ததோர் பெருஞ்சிலை
வயமுண் டாக என்று
எடுத்தனன் விடுத்திடின்
யாவர் தம்மையும்
படுத்திடும் மோகமாம்
படையொன் றேந்தினன்
அடுத்திடு செறுநர்தம்
ஆற்றல் உன்னலான். 16

எழுந்த தானவர் இகற்படை வெள்ளம்
எழுந்த தேர்நிரை எழுந்தன கைம்மா
எழுந்த வாசிகள் எழுந்தன ஓதை
எழுந்த கேதனம் எழுந்தன பூழி. 17

---

15. ஆதலால் அசுரப் படைகளோடு அமர்க்களம் செல்க; ஈசன் மைந்தனையும், அவன் படைகளையும் போரில் வெல்க; வெற்றிமாலை புனைந்து காதல் மைந்தனே! கடிதின் வருக" என்றான்.

16. (தந்தை பணித்தவாறே) பகைவரது ஆற்றலை ஆராய்ந்தறியாத பானுகோபன் வடித்த பெருவில்லைக் கையில் எடுத்தான்; எவரையும் மயக்கும் மோகப்படையும் கைக்கொண்டான்.

17. அசுரரது காலாட்படையும் தேர்ப்படையும் எழுந்தன. கரிப்படையும் பரிப்படையும் எழுந்தன. ஆரவாரமும் எழுந்தது. கொடியும் பொடியும் மேல் எழுந்தன.

## வீரவாகு எதிர்த்தல்

குமரன் நல்குவிடை கொண்டு படர்ந்தே
விமல வாலுணர்வின் மேதகு வீரன்
சிமய மேருநிகர் திண்சிலை ஒன்றை
அமரர் கோன்புகழ அங்கை பிடித்தான். 18

எட்டு வீரரும் இலக்கரும் ஏனை
மட்டில் பூதகண மன்னரும் ஆக
ஒட்டி ஆடமர் உருகெகாடு கொண்மூ
முட்டு தேர்த்தொகையின் மொய்ம்பொடு புக்கார். 19

செறிந்து நேர்ந்து செருச்செயும் எல்லையின்
இறந்த தானவர் எண்ணிலர் ஆவிபோய்த்
தறிந்த தாளும் தலையும் கீழுமாய்
மறிந்த சாரதரும் வரம் பில்லையால். 20

தீரும் செயலை நினைந்து ஆவதென்
சென்று யானே
ஓர் ஒன்று கன்னல் முடிகின்றமுன்
ஒன்னலார்தம்
பேரின் றெனவே அடுவேன் அது
பெற்றிலேனேல்
சூரன் குமரன் அலன் யானெனச்
சூள்மொழிந்தான். 21

---

18. மெய்யறிவால் மேம்பட்ட வீரவாகுதேவர், முருகன் திருவருளைப் பெற்று மேருமலை போன்ற வில்லைக் கையில் எடுத்தார்.

19. வீரர் எண்மரும், இலக்கரும், எண்ணிறந்த பூத கணங்களும் போர்க்கோலம் கொண்டு, வானத்தை முட்டிய தேர்களில் வன்மையுடன் ஏறினார்கள்.

20. இருதிறத்தவரும் நெருங்கிப் போர் நிகழ்த்தினர்; இறந்த அசுரர் எண்ணிறந்தவர்; முறிந்த காலும் தலையுமாய் உயிர் துறந்த பூதரும் அளவிறந்தவர்.

21. அசுரர் சேனை அழியக் கண்ட பானுகோபன் எழுந்தான். "கழிந்த காரியத்தைக் குறித்துக் கவலை கொள்வதிற் பயனில்லை; யானே போர் முனையிற் சென்று,

வாகை மொய்ம்புடை மேலையோன்
மாலயன் தனக்கெட்டா
ஏக நாயகன் திருமகன்
தாளிணை இனி துன்னி
ஓகை யால்நனி வழுத்தியே
போர்த் தொழில் உளங்கொண்டு
சேகு நெஞ்சுடைப் பானுகோ
பன்முனம் செலல் உற்றான். 22

## வீரவாகுவின் வெம்போர்

இகல் கடந்திடு திண்திறல்
வாகுவும் இரவிப்
பகையும் ஆற்றிய பெருஞ்சமர்
வலியை யார் பகர்வார்
மிகுதி கொண்ட பல் கணைமழை
உலப்புறு விடுப்பத்
திகிரி யம் படை போன்றன
அனையர்கைச் சிலைகள். 23

பாயிரும் புனல்போல் ஓடிப்
படியெனப் பரந்து நீடித்
தேயுவின் திறல்மேற் கொண்டு
சேனை என முடிவின்றாகி

ஒரு நாழிகையில் பகைவரது பேரும் இல்லாமல் அழித்திடுவேன். அவ்வாறு செய்யாவிட்டால் நான் சூரன் மகன் அல்லேன் " என்று சூள் உரைத்தான்.

22. அங்கிலையில் வெற்றி வீரனாய வீரவாகு, குமாரவேள் திருவடியை மனத்திற் கொண்டு, மகிழ்ச்சியோடு துதித்து, போர்த்தொழிலைக் கருதினார்; திண்ணிய உள்ளமுடைய பானுகோபனை எதிர்ப்பட்டார்.

23. பெருந்திறல் வாய்ந்த வீரவாகுவும் பானுகோபனும் நிகழ்த்திய போரின் வன்மையை யார் எடுத்துரைக்க வல்லார்? இருவர் கையிலும் அமைந்த விற்படை சக்கரப்படையெனச் சுழன்று சரமாரி பொழிந்தன.

24. வீரவாகுவின் வில்லினின்றும் எழுந்த அம்புகள்

வாயுவின் விரைந்து சென்று
வள்ளல்கை வாளி ஒவ்வொன்று
ஆயிர கோடி சென்னி
அறுக்கினும் வெறுக்கி லாவே. 24

நேருறு தனிவில் லாளி
நின்றது நோக்கி நம்பால்
சாருறும் அனிக மெல்லாம்
தடிந்தனன் இவன்என்று உன்னி
யாரிடை அடங்கிற் றம்மா
ஆண்மைக்கும் அவதி உண்டோ
வீரன்மற் றிவனே யல்லால்
வேறிலை போலும் என்றான். 25

## பானுகோபன் மோகப்படை விடுதல்

கன்னல்ஒன் றளவை தன்னில்
கந்தவேள் ஒற்றன் யாக்கை
சின்னபின் னங்க ளாகச்
செய்குவன் செய்தி டேனேல்

---

ஒவ்வொன்றும் பள்ளத்திற் பாயும் வெள்ளம்போல் ஓடி, நிலவுலகம் போற் பரந்து, தீயின் திறமையுற்று, ஆகாயம் போல் அழிவற்று, காற்றுப்போல் விரைந்து, ஆயிரங் கோடி தலைகளை அறுத்தாலும் வெறுப்படையாமல் வேலை செய்தன.

25. தன் எதிரே தனி வில்லோடு நின்ற வீரனை நோக்கினான் பானுகோபன். இன்று போர் புரிய வந்த அசுரப் பெரும்படையைக் கொன்றவன் இவனே என்று எண்ணினான். "ஆஹா! ஆண்மை யாரிடம் அடங்கிற்று? வீரத்திற்கு வரம்பும் உண்டோ? வீரன் இவனே யன்றி வேறு யாருமில்லை" என்று வியந்துரைத்தான்.

26. "இன்னும் ஒரு நாழிகையில் இவன் உடலைச் சின்ன பின்னமாக்குவேன்; அவ்விதம் செய்யேனாயின்

பின்னுயிர் வாழ்க்கை வேண்டேன்
யான்பிறந் தேனும் அல்லேன்
என்னொரு சிலையும் யானும்
எரியிடைப் புகுவன் என்றான். 26

சிந்தனை கவரும் மோகத்
தீம் படை அவுணன் செங்கை
வந்திட அனைய போழ்தில்
மனத்தினால் வழிபா டாற்றி
வெந்திறல் அனிகத் தோடு
மேவலன் தன்னை எய்திப்
புந்தியை அழித்து விட்டு
வருகெனப் புகன்று விட்டான். 27

அந்தத் திறல் வெம் படையாற் றலுடன்
வந்துற் றுழிமே லவன்மற் றிதுதான்
எந்தப் படையால் அழிவெய் துமெனுச்
சிந்தித் தனன்வே றொருசெய் கையிலான். 28

ஒன்றும் முதலோன் இவையுன் னுதலும்
அன்று லம்வரும் திறனும் எனவே
சென்றார் உணர்வும் சிதைவித் ததுபோர்
வென்றார் புகழ்மோ கவியன் படையே. 29

---

உயிர்வாழ ஒருப்படேன்; நான் இவ்வுலகிற் பிறந்தவனும் அல்லேன். வில்லொடு தீயில் விழுந்திடுவேன்" என்றான்.

27. கருத்தைப் பறிக்கும் மோகப்படையைக் கையில் எடுத்தான். மனத்தினால் அதற்குப் பூசனை புரிந்தான். மாற்றான் சேனையையும் வீரவாகுவையும் பற்றி அவர் அறிவைக் கெடுத்து வருக என்று சொல்லி விட்டான்.

28. திண்ணிய வெப்படை திறலுடன் சென்றது. அப்போது வீரவாகு "எப்படையால் அப்படையை அழிப்பது" என்று திகைத்துச் செயலற்று நின்றார்.

29. முன்னாள் எழுந்த ஆலகாலம்போல் மோகப் படை எங்கும் மண்டிற்று. எல்லோர் அறிவையும் அழித்தது.

## முருகவேள் அமோகப் படையை ஏவி அதை யழித்தல்

தெரிந்தான் முகமா றுருவேசேர்ந் துயிர்தோ
றிருந்தார் அருள்செய் திடும்எம் பெருமான்
விரைந்தாங் கொர்அமோக வியன் படையைப்
புரிந்தான் அதனோ டுபுகன் றிடுவான். 30

நன்றே தெளிவுற் றெமர் நண்ணும் வகை
நின்றே திலன் விட்ட நெடும் படைபால்
சென்றே அதன் வன்மை சிதைத் திவணீ
வென்றே வருகென்று விடுத் தனனே. 31

மிடல் கொண்ட அமோக வியன் படைசென்று
அடுகின் றுழிவெய் யவன் ஏவுபடை
அடல் கொண் டிடும் வீரர் அகத்தில் இருள்
உடையும் படிவல் லையின் ஓடியதால். 32

மோகத் தனிவெம் படைமொய்ம் பிலதாய்
ஏகத் திறல்வா குவும் ஏனையரும்
ஆகத் தினின் மையல் அகன் றமலன்
வாகைப் படை கண்டு மகிழ்ந் தனரே. 33

---

30. உயிர்க்குயிராய் நின்று அருள் புரியும் அறுமுகப் பெருமான் அதனை அறிந்தார். ஓர் அமோகப் படையை விரைந்து ஆக்கினார். அதனை நோக்கி,

31. "எமது வீரரை நன்றாகத் தெளிவித்து எழுப்புக; மாற்றான் விடுத்த படையின் வன்மையைக் கெடுத்து வருக" என்று ஏவினார்.

32. வலிமை சான்ற அமோகப் பெரும்படை சென்று அடித்தது. அந்நிலையில் கொடிய பானுகோபனது மோகப் படை விரைந்து ஓடிற்று. வீரரது மனத்தில் இருந்த மயக்கம் தீர்ந்தது.

33. நிகரற்ற மோகப்படை, நீர்மை யிழந்தபோது வீரவாகுவும் ஏனைய வீரரும், உடலைப் பிணித்த மயக்கம் தெளிந்து, முருகவேளின் வெற்றிப்படை கண்டு மகிழ்ந் தார்கள்.

இம்மெனச் சூர்மகன் இவற்றை நோக்குறு
விம்மிதம் எய்தினன் வீர மொய்ம்புடைச்
செம்மலை எதிர்ந்திலன் செருக்கு நீத்தனன்
கைம்மிகு துயரினன் கருதல் மேயினான். 34

இவ்விடை ஒன்னலர் எண்ணம் யாவையும்
வவ்வினன் மாநில வரைப்பின் வீட்டினன்
உய்வகை பெற்றுடன் உணர்ந்து தோன்றினார்.
செய்வதென் ஐயகோ கடவுள் செய்கையே. 35

எடுத்தனன் மாற்றலன் இறைவன் மாப்படை
தொடுத்திடு வானெனில் துன்னி என்னுயிர்
படுத்திடும் யானது பரித்து வந்திலன்
விடுத்துடன் அப்படை விலக்கும் வண்ணமே. 36

வென்றிடல் அரிதினி வீர வாகுவைச்
சென்றனன் முதுநகர்த் தெய்வ தப்படை
மன்றவும் தந்திவண் வன்மை மாற்றுவன்
நின்றிடல் பழுதென நெஞ்சில் உன்னினான். 37

---

34. இவற்றையெல்லாம் பார்த்தான் பானுகோபன்; வியப்புற்றான். வீரவாகுவைப் பின்னும் எதிர்ப்பட்டான் அல்லன்; செருக்கு அழிந்தான்; துயரம் உற்றான்.

35. "இங்கு மாற்றாரது அறிவை யெல்லாம் கவர்ந்தேன்; மாநிலத்தில் வீழ்த்தினேன்; அன்னார் பிழைத்து அறிவு பெற்று எழுந்துவிட்டார்கள். இனி என்ன செய்வேன்! ஐயோ! இது இறைவன் செயலே!

36. அதோ! வீரவாகு சிவப்படையை எடுத்து விட்டான்; அதை விடுவானாகில் என்னுயிர் போய்விடும். அதைத் தடுப்பதற்கு நான் சிவப்படை எடுத்து வந்தேனில்லை.

37. ஆதலால் வீரவாகுவை வென்றிடல் அரிது; இன்று நகரினுள்ளே சென்று தெய்வப் படைகளை மிகுதியாக எடுத்து வந்து இவனை வெல்வேன், இனி இங்கு நிற்றல் தவறு என்று எண்ணினான். தன் நகரை நோக்கித் திரும்பினான்.

மாயையின் அருவமாய் வஞ்சன் மாநகர்
போயினன் காலையே புகுவன் போர்க்கினி
ஆயவன் தனைவிரைந் தடுதி என்றுபூத்
தூயினர் வீரன்மேல் சுரர்கள் யாவரும். 38

ஆடுறு சமரிடை அழிந்து முன்னரே
ஓடிய அவுணர்கோன் உள்ளம் தன்னிடைப்
பாடுறு துயரமும் பழியும் மானமும்
நீடினன் பெருமித நிலைமை நீங்கினான். 39

## சூரன் போருக்கு எழுதல்

நினைதல் உற்றுழி உளத்திடைப்
பெருஞ்சினம் நீட
இனி அமர்த் தொழிற்கு யாரையும்
விடுகிலன் யானே
அனிக யோடுபோய் மாற்றலர்
வன்மையை அழித்துப்
புனைவன் வாகையென்று உன்னினான்
அழிவிலாப் புகழோன். 40

---

38. "மாயையில் மறைந்து பானுகோபன் மாநகர் சேர்ந்தான். இனி நாளைக் காலையே வருவான். அவனை அப்போது விரைவில் அழித்திடுக" என்று கூறி வானவர் வீரவாகுவின்மீது விரைமலர் தூவினர்.

39. அன்று நிகழ்ந்த போரில் தோற்று ஓடிய பானு கோபன், துன்பமும் பழியும் மானமும் அடைந்தான்; பெருமித நிலை ஒழிந்தான்.

40. பானுகோபன் அடைந்த வசையை நினைந்து பெருஞ்சினம் உற்றான் சூரன். "இனிப் போர் புரிவதற்கு யாரையும் அனுப்ப மாட்டேன்; யானே படையுடன் சென்று பகைவர் வலிமையை அழிப்பேன்; வாகை மாலை சூடுவேன்" என்று எண்ணினான்.

எடுத்தனன் சிலையும் ஏனைப்
படைகளும் இமையோர் தொன்னாள்
கொடுத்திடு படைகள் யாவும்
கொண்டனன் கரத்திற் கோதை
தொடுத்தனன் வெரிநில் தூணி
தூக்கினன் விரல்கள் தோறும்
அடுத்த பொற் புட்டில் சேர்த்தான்
அண்டங்கள் அனைத்தும் வென்றான். 41

அன்ன காலையில் அரிமுகன்
சேய் அதி சூரன்
துன்னு தாரகன் சுதன் அசு
ரேந்திரத் தொல்லோன்
என்ன நின்றிடு மைந்தர்கள்
இருவரும் ஏகி
மன்னர் மன்னனை அடைதலும்
இனையன வகுப்பான். 42

திரைகொள் வேலைபோல் நிறைதரு
கோட்டகம் சிறிதோர்
கரையிலாவழி உடைந்திடும்
அன்னது கடுப்பப்

---

41. வில்லையும் ஏனைய படைக் கலங்களையும் எடுத்தான்: முன்னாள் வானவர் கொடுத்த தெய்வப்படைக் கலங்களும் கைக்கொண்டான். கரத்திலே தோலுறை மாட்டினான்; புறத்தில் அம்பறாத்தூணி தூக்கினான்; விரல்களில் பொன்னாலாகிய புட்டில் பூட்டினான்,

42. அப்பொழுது சிங்கமுகாசுரன் மைந்தனாகிய அதிசூரனும், தாரகன் புதல்வனாகிய அசுரேந்திரனும் போர்க்கோலம் பூண்டு சூரனை அடைந்தார்கள். அவரை நோக்கி,

43. "கடல் போன்ற பெரிய குளமும் சிறு கரையில்லா விடின் உடைந்திடும். அவ்வாறே அரும்போர் புரி

பொருதி றற்படை பலவுள
என்னினும் போற்றும்
அரசர் இல்வழி நின்றிடாது
அன்னவை அழியும். 43

ஆதலால் இனி நீர் இரு
வீர்களும் அமரின்
மேதகும் பெரும் சேனைக்கு
முதல்வராய் மேவிப்
போதிர் முன்னுற என்றலும்
நின்றிடு புதல்வர்
ஈது நன்றென வணங்கியே
ஏகினர் இமைப்பில். 44

கடந்திகழ் கரிதேர் பாய்மாக்
கலந்திடத் தானை வீரர்
படர்ந்திடுகின்ற காலைப்
பருமணி வயிரத் தேர்மேல்
அடைந்திடும் அவுணர் மன்னன்
அளக்கரில் வடவை சுற்ற
விடம்தனி நடந்த தென்ன
விண்ணவர் மருளச் சென்றான். 45

---

யும் பெரும் படைகள் இருப்பினும், காக்கும் தலைவர் இல்லையாயின் அவை கட்டழிந்து விடும்.

44. ஆதலால் நீங்கள் இருவரும் இன்று போர் புரியும் பெருஞ் சேனைக்குத் தலைவராய் முன்னே செல்க" எனப் பணித்தான். அவரும் அப்பணியை வணங்கி ஏற்று விரைந்து சென்றார்கள்.

45. மதக்கரிகளும் தேர்களும் பரிகளும் கலந்து நெருங்கப் படையின் நடுவே, பெருமணிகள் பதித்த வயிரத் தேர்மேல் ஏறிச் சென்றான் சூரன். கருங்கடலில் ஊழித்தீயின் நடுவே ஆலகாலம் எழுந்தாற்போலச் சென்ற அசுரனைக் கண்டு வானவர் மயங்கினர்.

ஆன இயல் பெய்த அவு
ணப் படைக ளோடும்
வானெறி கொடே அவுணன்
வைய மிசை செல்லத்
தானது தெரிந் தமரர்
தம்மிறைவன் ஓடிக்
கானமர் கடம்ப னடி
கைதொழுது சொல்வான். 46

அன்றுபுரி வேள்வியிடை
ஆதியருள் செய்த
துன்று படை ஈட்டமொடு
சூரன் எனும் வெய்யோன்
இன்று பொரு வான் விரைவின்
எகினன் எதிர்ந்தே
சென்று அவனை வென்றெமது
சீர் அருளு கென்றான். 47

## முருகவேள் போரிடப் புறப்படல்

செழுந்தருண மேதகைய
தேரின் மிசை வானோர்
தொழுந்தலைவன் ஆக்கமா
தொன் முருகன் ஏறக்

---

46. இவ்வாறு அசுர சேனையோடு ஆகாய வழியே சூரன் தேர்மீது வருதலை அறிந்தான் இந்திரன். உடனே எழுந்து ஓடினான். ஆறுமுகப் பெருமான் அடிகளை வணங்கி,

47. "ஐயனே! முன்னாட் செய்த வேள்வியில் முதல்வன் அளித்த பெரும் படைகளோடு சூரன் என்னும் கொடியவன் இன்று போர்புரிய விரைந்து வருகின்றான். அவனை எதிர்த்து வென்று எங்களுக்கு ஏற்றம் தரல் வேண்டும்" என்று விண்ணப்பித்தான்.

48. உடனே செழுமையான செந்நிறப் பெருந்தேர் மீது ஏறியமர்ந்தார் முருகவேள். செந்தலைப் பூதர்கள் கடலினும் பெரிய ஆரவாரத்தோடு எழுந்தனர்.

கொழுந்தழல் முடித்தலைய
குஞ்சிகெழு பூதர்
எழுந்தனர் தெழித்தனர்
இருங்கடலும் அஞ்ச. 48

சண்முகன தேவல் கொடு
தாவில் இளையோனும்
எண்மரும் இலக்கர்களும்
ஈண்டிய கணத்தின்
வண்மைகெழு மன்னவரும்
வையமிசை யாகித்
திண்மை படை ஊக்கமொடு
சேனையிடை சென்றார். 49

மொய்ம்பு மலி படைத் தலைவர்
முந்தியுறு தானை
இம் முறையி னால் ஒழுக
ஈசனருள் மைந்தன்
செம்மணியில் வீசியமர்
தேரினிடை ஏகிப்
பொம்மலுறு தானவர்கள்
போர் முனை அடைந்தான். 50

வளைந்திடு காலையில் வயவெம் பூதர்கள்
கிளர்ந்தனர் தெழித்தனர் கெழுவு தானவர்

---

49. ஆறுமுகப் பெருமான் பணித்தவாறே அழிவற்ற வீரவாகுவும், அவர் தம்பியரான எட்டு வீரர்களும், நூறாயிரவரும், பூதகணங்களின் தலைவரும் தேர்மீது ஏறித் திண்ணிய சேனையின் நடுவே ஊக்கமாகச் சென்றார்கள்.

50. வீரம் நிறைந்த படைத்தலைவரை முன்னிட்டுச் சேனைகள் இவ்வண்ணம் செல்ல, ஈசன் அருளிய குமரவேள் அசுரப்படை நெருங்கி நின்ற போர்க்களத்தை அடைந்தார்.

51. அசுரன் சேனை குமரன் சேனையை வளைந்தது: பூதர்கள் கிளர்ந்தெழுந்தனர்; ஆரவாரம் செய்தனர்;

தளந்தனை அடர்த்தனர் அவரும் தாக்கினார்
விளைந்தது பெருஞ்சமர் விண்டது அண்டமே. 51

மக்கள் ஆயினர் இருவரும்
இறந்ததும் மலைந்து
பக்கமமையின தானைகள்
இரிந்ததும் பாராத்
தொக்க பேரழல் உலகட
எழுந்தோற் றம்போல்
மிக்க சீற்றமேற் கொண்டனன்
அண்டங்கள் வென்றான். 52

வேதன் அஞ்சினன் மால்முடி
துளக்கினன் விண்ணோர்
நாதன் அஞ்சினன் மறலியும்
அஞ்சினன் நடுங்கிக்
கோதில் நல்லறம் அஞ்சின
ஐவகை கொண்ட
பூதம் அஞ்சின உயிர்த்தொகை
அஞ்சின பொருமி. 53

---

அசுரரை உதைத்தனர். அவரும் இவர்களை எதிர்த்துத் தாக்கினர். பெரும்போர் மூண்டது. அண்டகோளம் பிளந்தது.

52. சூரனது தம்பியரின் புதல்வரான படைத்தலைவர் இருவரும் இறந்தனர். அது கண்ட அசுர சேனை சிதறி ஓடிற்று. அண்டங்களை வென்ற சூரன் இவற்றைக் கண்டான்; ஊழித் தீயென உருத்து எழுந்தான்.

53. அன்னான் சீற்றத்தைக் கண்டு அயன் அஞ்சினன்; திருமால் தலை துளக்கினன்; இந்திரன் அஞ்சினன்; கூற்றுவனும் கலங்கினன்; நல்லறம் நடுங்கிற்று; ஐம்பெரும் பூதங்களும் அச்சம் கொண்டன. மன்னுயிரெல்லாம் ஏங்கி நடுங்கின.

அன்ன வேலையில் பத்து நூறு
ஆயிர கோடி
பொன்னின் வெங்கணை அவுணர்கோன்
முறைமுறை போக்கித்
தன்னு டைப்புகும் வரையொடு
தருக்களைத் தடிந்து
துன்னு பாரிடத் தலைவர்தம்
யாக்கையைத் துளைத்தான். 54

நெஞ்ச ழிந்தனர் மாலியும்
நீலனும் நெடுங்கண்
பஞ்ச டைந்தனர் கும்பனும்
நிகும் பனும் பதைப் புற்று
அஞ்சி ஏங்கினர் சண்டியும்
தண்டியும் ஆவி
துஞ்சல் கூடினர் வாமனும்
சோமன் என்பவனும். 55

## சூரன் வீரவாகுவைத் தாக்குதல்

அரிகள் அச்சுறும் வீரவா
குப்பெயர் அறிஞன்
இரதம் ஊர்ந்துவந் தேற்றலும்
ஆங்கவன் எழில்சேர்

---

54. அவ்வேளையில் பல்லாயிர கோடி அம்புகளைச் சூரன் அடுக்கடுக்காக விடுத்தான். மாற்றார் வீசிய மலைகளையும் மரங்களையும் தடுத்தான். பூதப்படையின் தலைவருடலைத் துளைத்தான்.

55. சூரன் விளைத்த போரின் கொடுமையைக் கண்டு நீலனும் மாலியும் நெஞ்சழிந்தார்கள்; கும்பன் நிகும்பன் என்னும் இரு வீரர் கண்ணும் பஞ்சடைந்தது. சண்டியும் தண்டியும் அஞ்சி ஏங்கினர்; வாமனும் சோமனும் வீழ்ந்து மடிந்தார்கள்.

56. பகைவரை நடுங்கச் செய்யும் வீரவாகு தேரூர்ந்து வந்து சூரன் எதிரே தோன்றினார்; அவரது அழகிய

உருவம் நோக்குறு ஒற்றனும்
 இவனென உன்னிப்
பெரிது வெஞ்சினம் எய்தியே
 அவுணர் கோன் பேசும். 56

எமது வீரமா மகேந்திரம்
 சாடி எண் ணில்லாத்
தமரை அட்டனை தானைகள்
 அளப்பில தடிந்தாய்
குமரர் தங்களைக் கொன் றனை
 நின் னுயிர் கொண்டே
அமரின் ஆற்றலை இன்றொடே
 முடிக்குவன் அம்மா. 57

வில் வன்மைகொள் சரவன்மையும்
 விண்ணோர் படைக் கலத்தின்
பல் வன்மையும் பிறவாகிய
 படை வன்மையும் இயல்பாம்
தோல் வன்மையும் கண்டே உனைத்
 தொலைவில் படை ஒன்றால்
கொல்வன் எனக் காலந்தெரி
 கூற்றுப் என நின்றேன். 58

---

உருவத்தைக் கண்டபொழுது முருக தூதன் என்றறிந்து கடுங்கோபங் கொண்டான் அசுரர் கோமான்.

57. அந்நிலையில் வீரவாகுவை நோக்கி, "நீ எமது வீரமகேந்திரத்திலே சாடினாய்; அளவிறந்த சுற்றத்தாரை அழித்தாய்; கணக்கற்ற சேனையைச் சிதைத்தாய்; என் மைந்தரையும் கொன்றாய்; இன்று உன் உயிரை எடுப்பேன்; போரை முடிப்பேன்.

58. உனது வில்லின் வன்மை அறிவேன்; அம்பின் திறம் தெரிவேன்; தெய்வப் படைக்கலத் திறனும் தெரிவேன். மற்றைய படை வன்மையும் உன் உடல் வன்மையும் உணர்வேன். தப்பாத ஓர் படைக்கலத்தால் உன்னை முடிப்பதற்குக் காலம் கருதி இருந்தேன்.

துன்புறு வடிக்கணை சூரன் சிந்தலும்
தன்பெரும் சிலையினைத் தானும் வாங்கியே
முன்புற நெடுஞ்சரம் முகிலில் தூவினான்
பொன்புனை அலங்கலம் புயத்து வள்ளலே. 59

அத்தகும் எல்லையில் அவுணர்மன் னவன்
முத்தலை நெடுங்கணை மூவைந்து ஏவியே
வித்தக மொய்ம்புடை வீரவாகு வின்
கைத்தலை வில்லினைக் கண்டமாக்கினான். 60

சிலையது துணிதலும் சீறி வீரனோர்
இலையுடை வேலினை எடுத்து வீசலும்
தொலைவறு வரம்பெறு சூரன்மார் பெனும்
மலையிடைக் குறுகியே மற்றது இற்றதே. 61

இற்றுழி அவுணர்கள் இறைவன் மாலயன்
மற்றுள கடவுளர் வலியும் கொள்வதோர்
கற்றையம் கதிர்மணிக் கதையொன்று ஓச்சினான்
வெற்றிகொண் டுலவிய வீரவாகு மேல். 62

மேக்குயர் பெருஞ்சின வீர வாகுவின்
மாக்கிளர் அகலமேல் வயிர மாக்கதை

---

59. (என்று சொல்லிச்) சூரன் கூரிய அம்பு தொடுத்தான். வீரவாகுவும் தமது வில்லை வளைத்து அம்பு மாரி பொழிந்தார்.

60. அப்பொழுது சூரன் பதினைந்து முத்தலையம்புகள் விடுத்து அவர் கையிலிருந்த வில்லை முறித்தான்.

61. வில் ஒடிந்தபோது வீரவாகு சீறினார்; வேற்படை யொன்றை எடுத்து வீசினார்: அது அழியா வரம் பெற்ற சூரன் மார்பிற் பட்டு ஒடிந்தது.

62. அது கண்ட சூரன், திருமால் முதலிய தேவர் திறமை யெல்லாம் ஒருங்கே கவரவல்ல தண்டாயுதத்தை எடுத்து வீரவாகுவின் மேல் வீசினான்.

63. அது விரைந்து சென்று அவர் மார்பில் தாக்கிற்று. மார்பு இருகூறாகப் பிளந்தது. குருதி வெள்ளம் ஆறாகப் பாய்ந்து ஓடிற்று.

தாக்கலும் விண்டது தாரைச் செம்புனீர்
தேக்கிய நதிகளில் திரைத்துச் சென்றதே. 63

ஆழ்ந்திடு சோரியன் அவுணன் தண்டினுல்
போழ்ந்திடும் மார்பினன் புகையும் நெஞ்சினன்
தாழ்ந்திடும் விறலினன் தளரும் யாக்கையன்
விழ்ந்தனன் அமரர்கள் வெருவி ஓடவே. 64

## போர் முனையில் முருகன் தோற்றம்

ஆயது காலை தன்னில்
அவுணர் கோன் அனந்த கோடி
ஞாயிறு திரண்டொன் ருகி
ஞாலமேல் இருளை ஓட்டிச்
சேயுயர் விசும்பை நீங்கச்
செரு நிலந் துற்ற தென்னத்
தூயதோர் குமரன் போரில்
தோன்றிய தோற்றம் கண்டான். 65

முண்டகம் மலர்ந்த தன்ன
மூவிரு முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன்
மவுலியும் கோல மார்பும்
எண்தரு கரம் ஈராறும்
இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பும் ஆர்க்கும்
சரணமுந் தெரியக் கண்டான். 66

---

64. பெருகிய குருதியும், பிளந்த மார்பும், புகைந்த மனமும், குறைந்த வலிமையும் உடையரான வீரவாகு உடல் தளர்ந்து விழுந்தார். தேவர்கள் அஞ்சி ஓடினர்.

65. அப்பொழுது கோடிக்கணக்கான சூரியர்கள் ஒருங்கே திரண்டு, ஓர் உருவாகி, விண்ணினின்றும் இழிந்து போர்க்களத்தில் வந்தாற் போன்று குமரவேள் தோன்றினர். அவரைக் கண்டான் சூரன்.

66. அலர்ந்த செந்தாமரை போன்ற ஆறுமுகமும் அழகிய கண்ணும், காதில் அசைந்த குண்டலமும், நல்ல

பூவுல கண்ட மெல்லாம்
புரந்திடும் சூரன் தன்னைத்
தீவினை யாளன் என்றே
செப்புவர் சிறப்பின் மிக்க
மூவிரு முகத்து வள்ளல்
முன்னர்வந் தெய்தப் பெற்றான்
ஆ இவன் தவத்திற் கன்றி
அறத்திற்கும் முதல்வன் அன்றோ. 67

இன்னமும் முனிவர் தேவர்
யாவரும் இனையன் என்றே
உன்னரும் தலைமைத் தாகும்
ஒருதனிக் குமரன் தன்னைத்
தன்னிரு விழியாற் கண்டான்
தானவர்க் கிறைவன் என்றால்
அன்னவன் தவத்தின் பேற்றை
யார் அறிந் துரைக்கற் பாலார். 68

சிந்தையால் அறிதற் கொண்ணாத்
திருவுரு விழியாற் கண்டு
முந்துதான் நின்ற சூரன்
முழுதுல கடுவான் நின்றோன்

---

யில் அணிந்த திருமுடியும், மணி மார்பும், பன்னிரு கைகளும், படைக் கலங்களின் ஒளியும், தண்டையும் சிலம்பும் ஒலிக்கும் திருவடியும் தெரியக் கண்டான்.

67. அண்டங்கள் ஆயிரத்தெட்டும் ஆளும் சூரனைத் தீவினையாளன் என்றே பலரும் சொல்லுவர். ஆயினும் அறுமுக வள்ளலை நேராகக் காணும் பேறு பெற்றானே அவன்! தவத்திற்கு மட்டுமா அவன் தலைவன்; அறத்திற்கும் அவன் முதல்வன் அன்றோ?

68. இன்றளவும் முனிவரும் தேவரும் எண்ணி எண்ணிக் காணாத இறைவனாய முருகனைச் சூரன் தன்னிரு கண்ணால் கண்டான் என்றால் அவன் இயற்றிய தவத்தின் பயனை யார் அறிந்து சொல்லவல்லார்?

மைந்தனும் இவன்என் றுன்னி
மனத்தினில் வெகுளி தூண்டக்
கந்தவேள் தன்னை நோக்கி
இனையன கழறல் உற்றான். 69

முந்தை நாள்வலி இல்லதோர்
அடுக்கலும் முன்யான்
தந்த செல்வத்தின் மயங்கிய
தாரகா சுரனும்
புந்தி நீங்கிய அவன்படைத்
தலைவரும் போல
மைந்த என்னையும் நினைந்தனை
போலும் நின் மனத்தில். 70

கமல மேலுறை பகவனும்
மாயனும் ககனத்து
அமரர் செம்மலும் மாதிரக்
கிழவரும் அழுங்கச்
சிமய மங்கையும் இறங்குற
என்ஒரு கலையால்
இமை யொடுங்கு முன் நின்வலி
அழிக்குவன் என்றான். 71

---

69. தன் முன்னே நின்ற பெருமான் சங்கார காரண ராகிய சிவனார் திருமகனே என்று உணர்ந்தான் சூரன். உள்ளத்தில் கோபமுற்றுக் கந்தவேளை நோக்கி,

70. "பாலனே! (என்னை நீ இன்னான் என்று அறிந் திலை போலும்) அன்று நீ அழித்த கிரவுஞ்சகிரி என்னும் வலியற்ற மலையெனக் கருதினையா? நான் அளித்த செல்வத் தில் மயங்கிக் கிடந்த தாரகன் என்று எண்ணினையா? அவன் படைத்தலைவரென மதித்தாயா?

71. பிரமதேவனும், மாயவனும், விண்ணவர் வேந் தனும், எண்திசைப் பாலரும், இமயவல்லியும் இரக்க முற்று வருந்த இமைப்பொழுதில் என் வில்லால் உன் வன்மையை அழிப்பேன் என்றான்.

சூரன்என் றுரைபெற் றுள்ள
    தொல்லையோன் இளைய தன்மை
வீரமும் திறலும் சீரும்
    வெகுளியும் கொண்டு செப்ப
ஆரருள் உருவாய் நின்ற
    ஆதியம் குமரன் கேளா
மூரலும் சிறிது தோன்ற
    இத்திறம் மொழியல் உற்றான். 72

வெற்றியும் உடையம் ஆற்றல்
    மிகுதியும் உடையம் மேன்மை
பற்றியும் உடையம் எண்ணில்
    படைகளும் உடையம் வீயாப்
பெற்றியும் உடையம தானைப்
    பெருங்கடல் உடையம் என்று
மற்றினி அகந்தை கொள்ளேல்
    மாற்றுதும் எல்லை மன்றோ. 73

## சூரனும் முருகனும் பொருதல்

என்னும் முன்வெகுண்டு அவுணர்கோன்
    இருநிலம் தன்னை
முன் அளந்தவன் போல் அண்ட
    முகடு தோய் வுற்

---

72. இவ்வாறு சூரன் என்று பேர்பெற்ற கொடிய வன் வீரமும், வலிமையும், பெருமையும் சினமும் கொண்டு பேசினான். அப்போது கருணை வடிவாய் நின்ற குமரவேள் முன்முறுவல் தோன்றிய முகத்தோடு சூரனை நோக்கி,

73. "வெற்றி யுடையோம் வீரமுடையோம்; பெருமையுடையோம்; படைக்கல முடையோம்; அழியா வரம் உடையோம்: அரும் பெருஞ் சேனை யுடையோம் என்று அகந்தை கொள்ளாதே அவற்றையெல்லாம் விரைவில் மாற்றுவோம்,

74. என்று சொல்லு முன்னே மண்ணளந்த மாய

கொல் நெடுஞ்சிலை ஒன்றினைக்
கரத்தொடு குனிப்ப
அன்ன பான்மையைக் கண்டனன்
ஆதியம் குமரன். 74

குருதி வேற்படை கொண்டவன்
தன்புடை சூழும்
பொரு திறற்பெரும் தானையைப்
பொள்ளென அடுவான்
கருதி ஆங்கொரு கரத்தினில்
இருந்திடு கடவுள்
பரிதி யப்படை தொட்டனன்
இரவியிற் படர. 75

வெஞ்ச மர்த்தொழில் புரிதரும்
அவுணரை வீட்டி
வஞ்ச கத்தொடு மாயமாம்
பேரிருள் மாற்றி
எஞ்சல் உற்றிடுங் குருதியம்
பெருநிறம் எய்திச்
செஞ்சு டர்க்கதிர் ஆயதால்
அறுமுகன் திகிரி. 76

---

வளைப் போல் பெரிய வில்லை எடுத்து வளைத்தான் சூரன். அதனைக் கண்டார் ஆறுமுகப் பெருமான்.

75. எங்கும் நெருங்கிச் சூழ்ந்து நின்ற அசுரப் பெரும் படையின் மீது தெய்வப் படைக்கலமாகிய சக்கரா யுதத்தை விட்டார்.

76. அப்படை கொடுந் தொழில் புரியும் அசுரரைக் கொன்றது; அவர் மாயையாகி இருளை மாற்றியது; குருதியின் நிறம் கொண்டு செங்கதிரோன் போல் விளங்கிற்று.

இனைய எல்லையில் எம்பிரான்
எரிகதிர்ப் பரிதி
முனையில் வந்தடல் செய்ததை
உணர்ந்திலன் முன்சூழ்
கனை யிருங்கடல் படையெலாம்
பட்டவா கண்டு
மனம் மருண்டொரு தமியனாய்
நின்றனன் வலியோன். 77

தேர் இழந்தனன் சிலையதும்
இழந்தனன் திறல்சேர்
பேர் இழந்தனன் தானைகள்
இழந்தனன் பெரும்பூண்
ஏர் இழந்தனன் மவுலியும்
கவிகையும் இழந்தான்
பார் இழந்திடு மன்னர் போல்
நின்றனன் படிமேல். 78

நின்றிடும் திறல் அவுணர்கோன்
நெடுஞ்சின நெஞ்சில்
துன்று மார்பகம் வியர்த்திட
முடித்தலை துளக்கி

---

77. முருகப்பெருமான் விளைத்த திகிரிப்படை போர்க்களம் போந்து செய்த கொலையைச் சூரன் கண்டானல்லன். கருங்கடல்போல் நின்ற பெருஞ்சேனை விழுந்து ஒழிந்ததை அறிந்தான். மனம் மருண்டான். தனியனாய் நின்றான்.

78. தேர் இழந்தான்; வில் இழந்தான்; வீரன் என்னும்பேர் இழந்தான்; படை இழந்தான்; அணி இழந்தான்; மணி முடி இழந்தான்; குடையும் இழந்தான்; நாடிழந்த மன்னர்போல் நிலத்திடை நின்றான்.

79. அவன் நெஞ்சில் நெடுஞ்சினம் மூண்டது; உடம்பில் வேர்வை எழுந்தது: முடியணிதற்குரிய தலையை அசைத்தான்; பாலகன் வலிமை நன்று நன்று என்று

நன்று நன்றொரு பாலகன்
வலியெனா நகையா
வென்றி நான்முகன் படைக்கலம்
எடுத்துமேல் விடுத்தான். 79

சூர்ப்புயல் அன்னதொர் சூரன் விடுக்கும்
மாற்படு போதன் வயப்படை சென்று
பாற்படும் எல்லை பரஞ்சுடர் செங்கை
வேற் படை சென்று விழுங்கிய தன்றே. 80

முப்புரம் நீறெழ மூரல் விளைத்தோன்
மெய்ப்படை தன்னை விடுப்பது தேற்றி
அப்படை ஏந்தி அருச்சனை நீரால்
ஒப்பறு சீர்த்தியன் ஒய்யென உய்த்தான். 81

படித்தலம் நெக்கது பல்வகை மேகம்
இடித்தொகை சிந்தி இரிந்தன பானு
துடித்தது திங்கள் சுழன்றது மேரு
வெடித்த திடந்தொறும் விண்டதிவ் அண்டம். 82

எந்தை தன் மாப்படை ஈதென ஐயன்
சிந்தை புரிந்தொரு செங்கையை நீட்டி

---

நகைத்தான். வெற்றி தரும் பிரமாஸ்திரத்தை எடுத்து முருகன்மேல் விடுத்தான்.

80. அப்படை நெருங்கியபொழுது பரஞ்சுடராகிய குமரவேள் தம் கரத்திலிருந்த வேற்படையை எதிராக விட்டார். அது சென்று அப்படையை விழுங்கிற்று.

81. அது கண்டு வியப்புற்ற சூரன் திரிபுரமெரித்த சிவபெருமானது மெய்ப்படையைக் கையிலெடுத்து முறைப்படி அர்ச்சனை செய்து வேகமாக விட்டான்.

82. அப்போது மண்ணுலகம் நடுங்கிற்று; விண்ணிலுள்ள மேகம் இடியுமிழ்ந்து சிதறிற்று. சூரியன் துடித்தான்; சந்திரன் சுழன்றான்; மேருமலை வெடித்தது; அண்டம் பிளந்தது.

83. இங்ஙனம் வந்த சிவப் பெரும்படையைக் கண்டார் முருகவேள். அகத்திலே அன்பு கொண்டார்,

வந்திடும் அப்படை பற்றினன் மாதோ
தந்தவன் வாங்கிய தன்மைய தென்ன. 83

மான வேற்படை வன்மையும்
விற்ருெழில் வலியும்
ஏனை யாயுள வன்மையும்
கண்டனன் இனிமேல்
பானல் வாய்மைந்தன் செய்வது
பார்ப்பன்என் றுன்னி
மோன மாகியே நின்றனன்
அவுணர்கள் முதல்வன். 84

## முருகன் கருணை காட்டுதல்

ஈண்டு நின்புடை ஈண்டிய
இலக்கம்வெள் ளத்து
நீண்ட தானையும் நின்னிலை
வன்மையும் நின்ருல்
தூண்டல் உற்றிடு தெய்வதப்
படைகளும் தொலைந்து
மாண்டு போயது கண்டனை
வறியனுய் நின்ருய். 85

---

இது என் தந்தையின் படை என்று தன் செங்கையை நீட்டி வரவேற்ருர். கொடுத்தவர் வாங்கும் தன்மைபோல் அப் படையைப் பற்றினர்.

84. அந்நிலையில் சூரன், 'இன்று வேற் படையின் வன்மை கண்டேன்; வில்லாண்மையும் கண்டேன்; மற்றைய படைக் கலங்களின் திறமையும் கண்டேன். இன்னும் பால் மணம் மாருத வாயையுடைய பாலன் செய்கையைப் பார்ப்பேன் என்று யாதும் பேசாமல் நின்ருன்.

85. (அப்போது ஆறுமுகப் பெருமான் அசுரனை நோக்கி) இங்கு உன்பால் நிறைந்து நின்ற பெருஞ்சேனை அழிந்தது. உன் வில்லாற்றலும் ஒழிந்தது; தெய்வப் படைகளும் தொலைந்தன. இவை யெல்லாம் இழந்து எளியனுய் நின்ருய்;

நெடிய தாரகன் செற்றவேல்
    இருந்தது நின்னை
அடுதல் இங்கொரு பொருளுமன்று
    அரிதுமற் றன்றால்
படையி ழந்திடு நின்னுயிர்
    உண்டிடல் பழியாய்
முடியும் என்றுதாழ்க் கின்றனம்
    தருமத்தின் முறையால. 86

பன்னு கின்றதென் பற்பல
    விண்ணு ளோர் பலரும்
துன்னு தொல்சிறை விடுத்தியேல்
    உன்னுயிர் தொலையேம்
அன்ன தன்மையை மறுத்திடின்
    ஒல்லைநாம் அடுதும்
என்னை சொல்உன தெண்ணங்கள்
    உரைத்தியால் என்றான். 87

படை இழந்தனன் இவனென
    உன்னிய பாலன்
இடை தெரிந்தனன் போலவே
    இமையவர் யாப்பை

---

86. தாரகனைக் கொன்ற நெடுவேல் ஆயுத்தமாக இருக்கின்றது, உன்னைக் கொல்வது பெரிதன்று; அரிதும் அன்று. படையிழந்த நிலையில் உன்னைக் கொல்லுதல் பழியாகும். அறப்போர் முறைப்படி உன்னை முடிக்கக் கருதிப் பொறுத்திருக்கின்றோம்.

87. 'பல பல பேசுதலாற் பயனென்ன? வானவரைச் சிறையினின்றும் விடுவாயாகில், உன்னுயிரைக் கவராமல் விடுவோம். அதற்கு இணங்காவிடின் உன்னை விரைவில் அழிப்போம்; உன் கருத்தென்ன? கூறுக" என வினவினார்.

88. (அம்மொழி கேட்ட சூரன்) "நான் படையிழந்து விட்டேன் என்று எண்ணியன்றோ இப்பாலன் சமயம் அறிந்தவன்போல, வானவரைச் சிறையினின்று

விடுதி என்னவும் வல்லன்
ஆயினன் விளி வில்லேன்
அடலும் ஆற்றலும் தெரிந்திலன்
பிள்ளைமை யதனால். 88

மன்றல் அந்தொடை அறுமுகன்
வரம்பிலா வைகல்
நின்று பேரமர் புரியினான்
வறிதுநின் றிடினும்
கொன்றிடும்படி தாழில் வல்லனே
தந்தைமுன் கொடுக்க
என்றும் மாய்ந்திடா ஒருவரம்
பெற்றிடும் என்னை. 89

என்னை அங்கவன் முடித்திடல்
அரியதால் யானும்
அன்ன வன்தனை இத்துணை
வெல்வதும் அனைத்தே
தொன்னகர்ப்பெரு வளத்தொடும்
படையொடும் துன்னிப்
பின்னர் வந்தமர் இயற்றியே
பெருந்திறல் பெறுவேன். 90

---

விட்டுவிடு என்று சொல்லத் துணிந்துவிட்டான்? சிறு பிள்ளைத்தனத்தால் இவ்வாறு செப்பினான். சாகாவரம் பெற்ற என் வெற்றியும் சக்தியும் இவன் உணர்ந்தானில்லை.

89. மலர் மாலை யணிந்த இம் முருகன் படைக்கல மற்ற என்னெதிரே நின்று எண்ணிறந்த காலம் பெரும் போர் புரியினும் என்னைக் கொல்ல வல்லனோ? இவனுடைய அப்பன் கொடுத்த அழியாத வரமுடையவன் அல்லனோ யான்?

90. என்னை அவன் கொல்லுதல் அரிது; யானும் அவனை வெல்லுதல் அரிது. ஆதலால் என் நகரினுள்ளே சென்று போருக்கேற்ற சிறும் சேனையும் கொண்டு பின்னர் வந்து போர் செய்து வெற்றிபெறுவேன்.

என்று பற்பல சூழ்ச்சிகள்
மனத்திடை எண்ணி
ஒன்றோர் மாயையின் மந்திரம்
தன்னையுள் உறுத்தி
நின்ற மன்னவன் ஒல்லையில்
மறைந்தவண் நீங்கிப்
பொன்றி கழ்ந்திடும் மகேந்திரக்
கோயிலுட் போனான். 91

மறைந்து போயசூர் முயற்சியை
மன்னுயிர் தோறும்
உறைந்த நாயகன் கண்டனன்
ஒருதனிச் செவ்வேல்
எறிந்து மற்றவன் உயிர்கொள
நினைந்திலன் இன்னும்
மறிந்து தீயவன் உய்யுமா
எனும்திரு அருளால். 92

பாச றைப்புகு குமரவேள் பாரிடப் டகுதி
ஆச றப்புனை ஆவணச் சூழல்போய் அமர
வாச வத்தனிக் கடவுளா தியர்புடை வழுத்த
ஈச னிற்சிறந் தரியணை தன்னில்வீற் றிருந்தான். 93

---

91. என்று பல வகையான சூழ்ச்சிகளை மனத்திற் கொண்டு, மாயா மந்திரத்தை உள்ளத்தில் உன்னினான்; திடீர் என மறைந்தான்; பொன்மயமான மகேந்திர மாளிகையிற் புகுந்தான்.

92. மறைந்து சென்ற சூரன் செய்கையை உயிர்க்குயிராய் உறையும் முருகன் உணர்ந்தார். ஆயினும் வேற்படையை விடுத்து அவனுயிரை வாங்கக் கருதினாரல்லர். இன்னும் தீயவன் மனந்திரும்பி உய்ந்தால் உய்க என்னும் திருவருளால் பொறுத்திருந்தார்.

93. (போர்க்களத்தினின்றும் போந்து) பாடி வீட்டை அடைந்தார் முருகவேள். பூதப்படை தெருக்களில் சென்று அமர்ந்தது. இந்திரன் முதலாய தேவர்கள் போற்ற அரியாசனத்தில் அறுமுகப்பெருமான் ஈசனைப் போல் வீற்றிருந்தார்.

ஒருவரும் உளத்தினும் உணர்வு ருவகை
அருவம தாகியே அகன்று சூர்முதல்
பொருவரு மகேந்திர புரத்துக் கோயிலுள்
திருமகள் மணமனைச் சேறல் மேயினன். 94

பஞ்சடி நூபுரப் பதுமை கோயில் போய்
அஞ்சியல் அடுத்தமெல் அமளி மேலுறுத்
துஞ்சலன் யாரொடும் சொல்லும் ஆடலன்
வெஞ்சமர் வினையமே உன்னி மேவினன். 95

## சூரனும் பானுகோபனும்

ஆனதோர் எல்லையில் அரசன் போர்செயப்
போனதும் பொருததும் புறந்தந் தோமென
மாநகர் அதனிடை வறியன் வந்ததும்
பானுவின் பகைஞனுக் கொற்றர் பன்னினர். 96

அமரருக் காக்கமும் அவுணர்க் கேக்கமும்
இமையவர் முதல்வனுக் கின்பும் நல்கினை
குமரனைக் கணங்களைக் குறித்து மன்னநீ
சமரினுக் கேகுதல் தலைமை யாகுமோ. 97

---

94. எவரும் அறியாவண்ணம் உருமறைந்து சென்ற சூரன் திருமகள் போன்ற பதுமையின் மணமாளிகை அடைந்தான்.

95. பஞ்சுபோன்ற பாதங்களில் சிலம்பணிந்த பதுமையின் மாளிகையில் மெல்லிய மஞ்சத்தில் உறங்கினன் அல்லன்; யாரோடும் பேசினன் அல்லன்; வெம்போருக் குரிய வினையங்களையே நினைத்துக் கொண்டிருந்தான்.

96. அசுரர் கோமான் போர் செய்யச் சென்றதும், போர் புரிந்ததும் புறங்காட்டினன் என்று சொல்லும் வகையில் வெறுங்கையனாய் மீண்டு வந்ததும் ஒற்றர் சென்று பானுகோபனுக்கு அறிவித்தார்கள்.

97. (அப்போது அவன் தந்தையிடம் போந்து) "அரசே! இன்று நீ அமர்க்களம் சென்று அமரருக்கு ஊக்கமும், அசுரருக்கு ஏக்கமும் உண்டாக்கினாய்; இந்திரனுக்கு மனமகிழ்ச்சி யளித்தாய்! பாலனோடும் பூதகணங்களோடும் தலைவனை நீ போர்புரியச் செல்லுதல் தகுமா?

சென்றது கிடந்திடச் சிறியன் என்னினும்
ஒன்றிவண் மொழிகுவன் உள்ளம் கோடியால்
இன்றிரவு அகன்றபின் ஏகி யாரையும்
வென்றிகொண் டேகுவன் விடுத்தி யாலெனை 98

என்பது கேட்டலும் எவ்வுல கிற்கும்
துன்பு புரிந்திடு சூரபன் மாவாம்
முன்பன் மகிழ்ந்து முகத்தெதிர் நிற்கும்
தன்புதல் வற்கிது சாற்றுதல் உற்றான். 99

பன்னிரு செங்கை படைத்துள சேயோன்
தன்னொடு டெதிர்ந்து சமர்த்தொழில் செய்வார்
என்னல திலை இவன்சிறி யோன்என்று
உன்னலை வன்மையில் ஒப்பில னேகாண். 100

குன்றம் எறிந்திடு கூரிய வேற்கை
வன்திற லாளனை வன்மையில் யானே
வென்றிடு கின்றனன் மேலது நிற்க
ஒன்றுள தைய உரைப்பது கேண்மோ. 101

98. போனது போகட்டும். நான் சிறியனாயினும் என் சொல்லைச் சிந்தையிற் கொள்ளவேண்டும். இந்த இரவு ஒழிந்ததும் யான் சென்று அனைவரையும் வென்று வருவேன்; என்னை அனுப்புக''

99. என்று பானுகோபன் சொல்லியபொழுது சூரன் மனமகிழ்ந்தான்; எதிரே நின்ற புதல்வனை நோக்கி,

100. "அப்பா! பன்னிரு கை படைத்த குமரனைப் பாலன் என்றெண்ணாதே. அவன் வன்மையில் ஒப்பற்றவன். அவனை எதிர்த்துப் போர் செய்ய வல்லவர் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை.

101. குன்றைப் பிளந்த கூரிய வேற்படை தாங்கிய வீரனை யானே வென்றிடுகின்றேன். உனக்கு ஒன்று சொல்வேன்.

ஒற்றென வந்துநம் ஊரலை வித்துப்
பற்றலர் நீடு படைக்கிறை ஆகும்
கொற்ற வனைத்தனி கூவி மலைந்து
செற்றனை ஏகுதி சேனையொ டென்றான். 102

இரவிவந் துற்றுழி எழுந்து சூர்மகன்
மரபுளி நாட்கடன் வழாமல் ஆற்றியே
செருவினில் உடைந்திடும் சிறுமை சிந்தியாப்
பொருவரும் மாயையைப் போற்றல் மேயினான்.

போற்றினன் மூன்று பொழுதின் மாயவள்
கோற்றொழில் கன்றிய குமரன் முன்னரே
தோற்றினள் நிற்றலும் தொழுத கையினன்
பேற்றினை முன்னியே இனைய பேசுவான். 104

தாதைதன் அவ்வைகேள் சண்முகத் தவன்
தூதுவ னோடுபோர்த் தொழிலை ஆற்றினேன்
ஏதமில் மானமும் இழந்து சாலவும்
நோதக உழந்தனன் நோன்மை நீங்கினேன். 105

---

102. நாளையே சேனையொடு சென்று, முருக தூத னாக வந்து நம் நகரத்தின் பதங்குலைந்த படைத்தலைவனைப் போருக்கு அழைத்து அவனைக் கொன்று வருக' என்றான்.

103. சூரியன் உதித்தவுடன் எழுந்தான் பானு கோபன். முறைப்படி நித்திய கருமங்களை முடித்தான். முதல்நாட்போரில் புறங்காட்டிய சிறுமையை நினைந்து ஒப்பற்ற மாயையை மனத்திலே தியானித்தான்.

104. அப்பொழுது மாயை அவன் முன்னே தோன்றி னாள்; அவள் அருளைப்பெறக் கருதிக் கைதொழுது,

105. "என் தந்தையை ஈன்ற தாயே! முருக தூத னோடு போர் செய்தேன்; மானம் இழந்தேன்; மனம் இடிந்தேன்; வன்மையும் கெட்டேன்.

நின்றமர் இயற்றியே நென்னல் என்தனை
வென்றனன் ஏகிய வீர வாகுவை
இன்றனி கத்தொடும் ஈறு செய்திட
ஒன்றொரு படையினை உதவு வாய் என்றான். 106

அடல்வலி பிழைத்திடும் அவுணன் சொற்றன
கெடல்அரு மாயவள் கேட்டுத் தன் ஒரு
படையினை விதித்துஅவன் பாணி நல்கியே
கடிதினில் ஒருமொழி கழறல் மேயினாள். 107

மற்றிது விடுத்தியால் மறையிற் கந்தவேள்
ஒற்றனைப் பிறர்தமை உணர்வை வீட்டியே
சுற்றிடும் வாயுவின் தொழிலும் செய்யுமால்
இற்றையில் சயமது எகுவாய் என்றாள். 108

காற்படை அழற்படை காலன் தொல்படை
பாற்படு மதிப்படை பரிதி யோன்படை
மாற்படை அரன்படை மலர் அயன்படை
மேற்படு சூர்மகன் எடுத்தல் மேயினான். 109

---

106. நேற்றுப் போர்புரிந்து என்னை வென்ற வீர வாகுவை இன்று நான் வென்றிடல் வேண்டும். அதற்கு ஏற்ற படைக்கலம் தருவாயாக' என்று வேண்டினான்.

107. ஆண்மை தவறிய அசுரன் சொன்ன சொற்களைக் கேட்டாள் மாயவள். ஒப்பற்ற மாயப்படையொன்றை உண்டாக்கி அவன் கையிற் கொடுத்தாள்.

108. 'மைந்தனே! இப்படையை மறைந்து நின்று மாற்றாரை நோக்கி ஏவுக. இது முருக தூதனையும் மற்றையோரையும் வளைந்து அவர் அறிவை மயக்கிவிடும். காற்றின் தொழிலையும் செய்யும். இதனால் இன்று வெற்றி உனதே; செல்க'' எனப் பணித்தாள்.

109. (மாயவள் மறைந்த பின்னர்) பானுகோபன், காற்றுப்படை, கனற்படை, கூற்றுப்படை, மதிப்படை, கதிர்ப்படை, மாற்படை, அரன் படை, அயன் படை முதலியவற்றை எடுத்தான்.

இன்ன தன்மை இயன்றிடத் தானைகள்
துன்னு பாங்கரில் சூழ்ந்து படர்ந்திட
மன்னன் மாமகன் மாநகர் நீங்கியே
பொன்ன வாம்பரி சைப்புறம் போயினான். 110

நென்னல் ஓடு நிருதன் தனிமகன்
உன்னை முன்னி உரனொடு போந்துளான்
துன்னு தானைத் துணைவர்கள் தம்மொடும்
முன்னை வைகலின் ஏகுதி மொய்ம்பினோய், 111

போய் எதிர்ந்து பொருதி படைகளால்
ஏய வற்றிற் கெதிர் எதிர் தூண்டுதி
மாயை வஞ்சன் புரிந்திடின் வந்துநம்
தூய வேற்படை துண்ணென நீக்குமால். 112

போதி என்று புகன்றிட அப்பணி
மீது கொண்டு விடை கொண்டு புங்கவன்
பாதம் வந்தனை செய்து படர்ந்தனன்
தூது போயமர் ஆற்றிய தொன்மையோன். 113

---

110. இப் படைக்கலங்களை ஏந்தி, அசுரசேனை சூழ்ந்து வர, மகேந்திர மாநகரை விட்டு, அழகிய மதிலைக் கடந்து சென்றான்.

111. (இதை யறிந்த முருகவேள் வீரனாகிய வீரவாகுவை நோக்கி) நேற்றுத் தோற்று, ஓடிய சூரன் மகன் இன்று உன்னைக் கருதித் திண்மையோடு வந்துள்ளான். நீ படைத் தலைவர்களோடு நேற்றுப்போலவே செல்க,

112. மாற்றானை எதிர்த்துப் போர் புரிந்திடு; அவன் ஏவும் படைகளுக்கு எதிர் எதிராகவுள்ள படைக்கலங்களை விடுத்திடு; அவ்வஞ்சகன் மாயம் புரிவானாயின் நமது வேல் விரைந்து வந்து அவன் மாயையை அழிக்கும்.

113. இப்பொழுதே சென்றிடு" என்றார் முருகவேள் அப்பணி தலைமேற் கொண்ட வீரவாகு விடைபெற்று அவர் பாதம் பணிந்து புறப்பட்டார்.

எண்ணில்பல கோடியுரும்
　　ஏறுருவம் ஒன்றாய்
வண்ணமிகு மின்னிடை
　　மறைந் தொலிசெய் தென்ன
விண்ணுற நிவந்த வியன்
　　மொய்ம் புடைய வீரன்
நண்ணலர் துணுக்கமுற
　　நாணிசை எடுத்தான். 114

முன்னை வைகலின் முரிந்தனன் என்றே
பன்னும் ஓர்வசை பரந்ததும் அன்றிப்
பின்னும் இப்பகல் பிழைத்தனன் என்றால்
என்னை யாவர்களும் எள்ளுவர் மாதோ. 115

என்று சிந்தைதனில் இன்னன உன்னி
அன்று மாயவள் அளித்திடு கின்ற
வன்றிறல் படையை வல்லை எடுத்தே
புன்றொழிற் குரிசில் பூசனை செய்தான். 116

நெறி கொள் முப்புலனில் நெஞ்சினில் யாரும்
அறிவ ரும்பரிசின் அண்டலர் தம்பால்
குறுகி மெய் உணர்வு கொண்டுயிர் மாற்றி
எறிபுனற் கடலுள் என்று விடுத்தான். 117

---

**114.** கோடி கோடியான இடிகள் ஒன்றாய் மின்னல் இடையே மறைந்து ஒலித்தாற் போன்று, வான் அளாவிய தோள்களையுடைய வீரவாகு பகைவர் நடுங்கும்படி வில்லினின்றும் நாணொலி எழுப்பினார்.

**115.** அது கண்ட பானுகோபன், "நான் அன்று போர்க்களத்தினின்று மறைந்து ஓடினேன் என்னும் வசை எங்கும் பரவிற்று. இன்றும் தப்பியோடுவேனாயின் எல்லோரும் என்னை இகழ்வர்"

**116.** என்று மனத்தில் எண்ணி மாயவள் தந்த கொடும் படையை எடுத்தான்; அதற்குரிய பூசனை புரிந்தான்.

**117.** அப்படையை நோக்கி, "முறைமையான முப்புலன்களாலும் மனத்தினாலும் யாவரும் அறியாவண்ணம்

இருங் கணத் தரை இலக்கரை ஒள்வாள்
மருங்கு சேர்த்திய வயத்துணை யோரை
நெருங்கு தார்ப்புய நெடுந்திற லோனை
ஒருங்கு சூழ்ந்துணர் வொழித்தது மன்னோ. 118

வெள்ளம் ஆயிரம தென்னும்
வியனுரை படைத்த பூத
மள்ளரைத் தலைவர் தம்மை
வயங்கெழு துணையி னோரை
நள்ளலர்க் கடந்த துப்பின்
நம்பியை உம்பர் ஆற்றல்
பொள்ளென எடுத்து மாயப்
படைக்கலம் போயிற் றம்மா. 119

போயது சூரன் மைந்தன்
புந்தியின் கதிமேற் கொண்டு
மாயிரு நேமி ஆறும்
வல்லையில் தப்பி அப்பால்
தூயதெண் புனலாய் ஆன்ற
தொல்கடல் அழுவம் நண்ணி
ஆயவர் தொகையை இட்டே
அகன்றிடா தோம்பிற் றன்றே. 120

---

நீ பகைவரிடம் போந்து, அவர் அறிவை மயக்கி, உயிரைக் கவர்ந்து நன்னீர்க் கடலில் எறிந்துவிடு'' என்று கூறி விடுத்தான்.

118. அவ்வாறே அப்படைக்கலம் சென்று பூதகணங் களையும், நூறாயிரம் வீரரையும், வாள் அணிந்த வயவீரர் எண்மரையும், பெருந்திறல் வாய்ந்த வீரவாகுவையும் ஒருங்கே வளைத்து அவர் அறிவை மயக்கியது.

119. ஆயிரம் வெள்ளம் என்று சொல்லப்பட்ட பூத வீரர்களையும், அவர் தம் தலைவர்களையும், வீரத் தம்பியரை யும், வீரவாகுவையும், நொடிப்பொழுதில் எடுத்து ஆகாய வழியாகச் சென்றது.

120. பானுகோபனது மனோவேகத்தைக் கைக் கொண்டு, அம்மாயப்படை பெரும் கடல்கள் ஆறும் கடந்து,

நின்றிடு சூரன் மைந்தன்
நிலைமை மற்றிதனை நோக்கிப்
பொன்றினன் வீர வாகு
பூதரும் பிறரும் வீந்தார்
குன்றம தன்றால் மீளக்
குரைபுனல் வேலை ஆழ்ந்தார்
நன்றுநம் சூழ்ச்சி என்று
நகையெயி றிலங்க நக்கான். 121

அண்டரும் களிப்பின் மேலோன்
அவ்விடை அகன்று வல்லே
விண்தொடர் நெறியிற் சென்று
வியன் மகேந் திரத்தின் எய்தி
எண்திசை உலகம் போற்ற
இறைபுரி தாதை தன்னைக்
கண்டனன் இறைஞ்சி நின்றாங்கு
இனையன கழறல் உற்றான். 122

இன்றுயான் சென்று பல்வேறு
இருஞ்சமர் இயற்றிப் பின்னர்
வன்தொழில் புரிந்த வீர
வாகுவை அவன்பா லோரை

---

அப்பால் நின்ற நன்னீர்க் கடலின் நடுவே, எடுத்துச் சென்ற வரை எறிந்து அங்கேயே காவல் செய்து நின்றது.

121. இத்தன்மை கண்ட பானுகோபன் இன்பம் எய்தி "ஒழிந்தான் வீரவாகு; பூதரும் பிறரும் தொலைந்தார்; கடலிலே ஆழ்ந்தார். நமது சூழ்ச்சி நன்றாயிற்று" என்று எயிறு தோன்ற நகைத்தான்

122. பெருமகிழ்ச்சியுற்றுப் போர்க்களத்தினின்று புறப்பட்டான்; ஆகாய வழியே விரைந்து சென்றான்: திக்கெலாம் புகழ அரசு வீற்றிருந்த தந்தையைக் கண்டு, வணங்கி நின்று,

123. "ஐயனே! இன்று யான் போர்க்களம் சென்றேன்; பெரும்போர் புரிந்தேன்; வெம்போர் நிகழ்த்திய வீரவாகுவையும், அவனைச் சார்ந்தாரையும், ஆயிரம்

அன்றியும் பூத வெள்ளம்
ஆயிரம் தன்னை எல்லாம்
வென்றுயிர் குடித்து யாக்கை
வியன்புனற் கடலுள் உய்த்தேன். 123

சிறிதும் நீ கவலை கொள்ளேல்
சேனையும் யானும் ஏகி
மறிகடல் எறியும் கால்போல்
வளைந்து பாசறையைச் சிந்தி
அறுமுகன் தனையும் வென்றே
அரி அய னோடும் விண்ணோர்
இறைவனைப் பற்றி நாளை
ஈண்டு தந் திடுவன் என்றான். 124

என்னும் வேலையில் எழுந்தன
உவகை யாப் புடைய
பொன்னின் அங்கதம் மூட்டற
நிமிர்ந்தன புயங்கள்
மின்னும் மாமணிக் கடகங்கள்
நெரிந்து வீழ் கின்ற
துன்னும் மாமயிர் பொடித்தன
முறுவல் தோன் றியதே. 125

---

வெள்ளமான பூதப்படையையும் வென்றேன்; எல்லோரையும் கொன்றேன்; நன்னீர்க்கடலிற் கொண்டு தள்ளி விட்டேன்.

124. இனிச் சிறிதும் உனக்குக் கவலை வேண்டாம் நாளையே சேனையோடு நான் சென்று, கடலை அலைக்கும் கடுங்காற்றைப்போல் கந்தன் பாசறையைச் சுற்றி வளைந்து அதனைத் தகர்ப்பேன்; அவனையும் வெல்வேன்; மாயவனையும் பிரமனையும் இந்திரனையும் பிடித்து இங்குக் கொண்டு வருவேன்'' என்று கூறினான்.

125. அப்பொழுது சூரன் மனத்தில் இன்பம் பொங்கி எழுந்தது; தோள் நிமிர்ந்து உயர்ந்தது; புயத்திற் பூட்டிய வாகு வலயம் மூட்டறுந்தது; கையிலணிந்திருந்த

அன்று நோற்றதும் பற்பகல்
உண்டரோ அதற்காக்
கொன்றை வேணியன் கொடுத்தனன்
என்பது கொள்ளாச்
சென்ற வார்த்தைகள் நிற்க இவ்
அரசும் இத் திருவும்
இன்று நீதரப் பெற்றனன்
ஐய யான் என்றான். 126

முன்னம் நீசொற்ற தன்மையே
மூவிரு முகத்தோன்
தன்னை வென்றுவெம் சாரதப்
படையினைத் தடிந்து
பின்னர் நின்றிடும் அமரரைச்
சிறையிடைப் பிணித்தே
என்னுடைப் பகை முடிக்குதி
காலையே என்றான். 127

சூரன் மாமகன் கரந்துமா
யப்படை துரந்து
வீர வாகுவும் துணைவரும்
வெங்கணத் தவரும்

---

கடகம் தெரித்தது; மெய்ம்மயிர் சிலிர்த்தது; புன்சிரிப்புத் தோன்றிற்று.

126. (வீரப் புதல்வனைக் கட்டி அணைத்து) "என் ஐய! அந்நாளில் நெடுந்தவம் செய்தேன்; அதற்கு ஈசன் பேரரசும் பெருந்திருவும் தந்தான்; அச்செய்தி எல்லா வுலகங்களிலும் சென்று சேர்ந்தது. அது ஒருபுறம் இருக்க, நான் ஆளும் அரசும் செல்வமும் இன்று நீயே தந்தாய்; நான் பெற்றேன்" என்று மெச்சினான்.

127. "முன்னம் நீ சொல்லியவாறே அறுமுகப் பகைவனையும் நீயே வென்று, பூதப்படைகளைக் கொன்று, எஞ்சியுள்ள தேவரையும் சிறையிலே செறித்து, என் பகையை முடித்திடு; நாளைக் காலையே செல்க" எனப் பணித்தான்.

128. இஃதிவ்வாறாக, பானுகோபன் மறைந்து நின்று

ஆரும் மால்கொள வீட்டியே
அன்னதால் அவரை
வாரி நீர்க்கடல் உய்த்தனன்
சூழ்ச்சியின் வலியால். 128

என்று நாரத முனிவரன்
புகறலும் இமையோர்
சென்று சென்றுவேள் பதங்களை
இறைஞ்சியே திருமுன்
நின்று வீரர்கள் அழிந்திடு
செயல்முறை நிகழ்த்த
வென்றி வேலினை நோக்கியே
எம்பிரான் விளம்பும். 129

கங்கை அன்னதோர் வாலிதா
கியபுனற் கடல்போய்
அங்கண் வைகிய மாயமாப்
படையினை அழித்து
வெங்கண் வீரர்மால் அகற்றியே
அனையவர் விரைவில்
இங்கு வந்திடத் தந்து நீ
செல்கென இசைத்தான். 130

---

மாயப்படைதொடுத்து, வீரவாகு, தம்பியர், பூதர், தலைவர் ஆகிய எல்லோரையும் மயக்கி மாய்த்து, அப்படைக்கலத்தால் நன்னீர்க்கடலில் தள்ளினான்

129. என்று நாரத முனிவன் முருகப்பெருமானிடம் கூறினான். பின்பு வானவர் வகை வகையாகச் சென்று அவர் திருவடிகளை வணங்கிப் படைவீரர் அழிந்த பான்மையை அறிவித்தனர். அப்போது பெருமான் தம் கையில் அமைந்த வெற்றி வேலை நோக்கி,

130. "கங்கை போன்ற தூய நீர்க் கடலிற் போந்து அங்குள்ள மாயப் படையை அறுத்து, நம் வீரரது மயக்கம் தீர்த்து, அவர்களை விரைவில் இங்கே கொண்டு வருக" எனப் பணித்தார்.

செய்ய வேலினுக் கின்னதோர்
பரிசினைச் செப்பி
ஐயன் அவ்விடை விடுத்தலும்
நன்றெனஅகன்று
வெய்ய தீங்கதிர் ஆயிர
கோடியின் விரிந்து
வைய மேல்இருள் முழுதுண்டு
வல் விரைந் ததுவே. 131

இத்தி றத்தினால் அயிற் படை
முப்புரத் திறைவன்
உய்த்த தீநகை போலவே
வல் விரைந் தோடி
முத்தி றத்திரு நேமியும்
பிற்பட முந்திச்
சுத்த நீர்க்கடல் புகுந்தது
விண்ணு ளோர் துதிப்ப. 132

செய்ய வேற்படை ஆயிடை
புகுதலும் தெரிந்து
வெய்ய மாயவள் படைக்கலம்
ஆற்றவும் வெருவி

---

131. அப்பணிபூண்ட வெற்றிவேல் வேகமாகப் புறப்பட்ட போது ஆயிரம் கோடி கதிர்கள் எழுந்து மண்ணுலகின் இருளை மாய்த்தன.

132. முப்புரத்தை எரிப்பதற்கு இறைவன் விடுத்த நெருப்புப் போல் விரைந்து ஓடி, அறு வகைப்பட்ட கடல்களும் கடந்து, விண்ணவர் போற்றத் தண்ணீர்க் கடலிற் புகுந்தது.

133. வேற்படை வந்தவுடன் மாயப் படைக்கலம் மிக நடுங்கிற்று; மயங்கிக் கிடந்த வீரரை விட்டு ஒழிந்தது; வன்மையும் தன்மையும் இழந்து முடிந்தது.

மையல் வீரரை நீங்கியே
தொலைந்து போய் மறிந்து
மொய் இழந்தது தன்செயல்
இழந்தது முடிந்தே. 133

அன்னதோர் அமைதி தன்னில்
ஆறுமா முகத்து வள்ளல்
மின்னிவர் குடுமிச் செவ்வேல்
விண்ணிடை வருதல் காணூஉப்
பன்னரும் உவகை பொங்கப்
பன்முறை பணிந்து போற்றிச்
சென்னியில் தொழுத கையார்
எதிர்கொடு சென்று சூழ்ந்தார். 134

சூழ்ந்திடு கின்ற காலைச்
சூர்மகன் மாயை தன்னால்
தாழ்ந் துணர் வழிந்த வாறும்
தடம் புனல் புணரி உய்ப்ப
வீழ்ந்ததும் ஐயன் வேலால்
மீண்டதும் பிறவும் எல்லாம்
ஆழ்ந்த தொல் அறிவால் தேறி
அறிஞர்க்கும் அறிஞன் சொல்வான். 135

---

134. அந் நிலையில் மயக்கம் தெளிந்து எழுந்த வீரர்கள் அறுமுகப் பெருமானது செவ்வேல் ஆகாய வழியே வரக் கண்டார்கள். அவருள்ளத்தில் இன்பம் பொங்கிற்று. பன்முறை பணிந்து போற்றினார்கள். உச்சிமேற் கூப்பிய கையராய் எதிர் சென்று வரவேற்று அதனை வளைந்து கொண்டார்கள்.

135. பானுகோபன் இழைத்த மாயையால் நிலையழிந்து, உணர்விழந்து, நெடுங்கடலுள் விழுந்ததும், ஐயன் வேலால் மீண்டு எழுந்ததும், பிறவும் அறிந்தார் அறிஞர்க்கும் அறிஞரான வீரவாகு.

குன்றிடை எம்மை வீட்டிக்
கொடியவன் புணர்ப்புச் செய்த
அன்றும்வந் துணர்வு நல்கி
அளித்தனை அதுவும் அல்லாது
இன்றும் வந் தெம்மை ஆண்டாய்
ஆதலின் யாங்கள் உய்ந்தேம்
உன்தனக் குதவும் கைம்மாறு
உண்டு கொல் உலகத் தென்றான். 136

தூயவன் அனைய மாற்றம்
சொற்றலும் அயில்வேல் கேளா
நீயிர்கள் விளிந்த தன்மை
நேடியே நிமலன் என்னை
ஏயினன் அதனால் வந்தேன்
யான் வரும் தன்மை நாடி
மாயமது இறந்தது அங்கண்
வருதிர் என்று உரைத்த தன்றே. 187

நன்றெனத் தொழுது வீரன்
நகையொளி முகத்தன் ஆகிப்
பின்தொடர் துணையி னோரும்
பெருங்கணத் தவரும் சூழச்

---

136. காலத்தில் வந்து காத்தருளிய வேற்படையை நோக்கி, "அந்நாள் கொடிய அசுரனாகிய தாரகன் வஞ்சனையால் எங்களை மலையில் அடைத்து மயக்கம் செய்தான். அன்றும் நீ எழுந்தருளி வந்து அறிவு தந்தாய்! அவ்வாறே இன்றும் இங்கு வந்து எம்மை ஆட்கொண்டாய்; ஆதலால் நாங்கள் பிழைத்தோம். உனக்குச் செய்யத்தக்க கைம்மாறும் இவ்வுலகில் உண்டோ?" என்றார்.

137. வீரவாகு சொல்லிய நல்லுரையைக் கேட்ட பொழுது வேற்படை தன் வரலாற்றைக் கூறுவதாயிற்று. "நீங்கள் அறிவிழந்த தன்மையை எம்பெருமான் உணர்ந்தார்; என்னை இங்கே விடுத்தார்; நான் இங்கு வரும் தன்மையை அறிந்து மாயப் படை மாய்ந்தது. ஆதலால் இனி என்னோடு வருக" என்றது அப்படை.

சென்றனன் அனைய காலைச்
சிறந்த வேற் படைமுன் ஏகி
வென்றி கொள் குமரன் செங்கை
மீமிசை அமர்ந்த தன்றே. 138

முன்னுறச் செவ்வேல் ஏக
மூவிரு முகத்து வள்ளல்
தன்னடிக் கமலம் உன்னித்
தரங்கநீர் உவரி வைப்பின்
மின்னெனக் கடிது போந்து
விறல்மிகு தடந்தோள் அண்ணல்
தொன்னிலைத் திருவின் மேவும்
சூரன்மூ தூரைக் கண்டான். 139

வெஞ் சமர்க் காற்றல் இன்றி
வெருவிப் போய் விண்ணின் நின்று
வஞ்சனை புரிந்து நம்மை
மாயத்தால் வென்று மீண்டும்
உஞ்சனன் இருந்த கள்வன்
உயிர் குடித் தன்றி ஐயன்
செஞ்சரண் அதனைக் காணச்
செல்லுவ தில்லை யானே. 140

---

138. நல்லது என்று கைதொழுதார் வீரன். முக மலர்ந்தார்; தம்பியரோடும் பூதப் படை வீரர்களோடும் வேலின் பின்னே சென்றார். அப்படை அவர் முன்னே சென்று அறுமுகன் கரத்தை அடைந்தது.

139. செவ்வேலின் பின்னே சென்ற வீரவாகு அறு முகப் பெருமானது திருவடியையே தியானித்துக்கொண்டு உவர்க் கடலின் இடையே வீரமகேந்திரம் விளங்கக் கண்டார்.

140. வெம்போர் புரியும் ஆண்மையின்றி அஞ்சிச் சென்று, ஆகாயத்தில் மறைந்து நின்று, வஞ்சனை செய்து மாயப்படையால் நம்மை வென்று பிழைத்திருக்கும் பானு கோபனைக் கொன்றாலன்றி எம்பெருமான் சேவடியைக் காணச் செல்வதில்லை.

நன்னகர் அழிப்பன் இன்று
    நண்ணலன் மதலை நேரின்
அன்னவன் தனையும் யானே
    அடுவனால் அஃதி லேனேல்
பின்னுயிர் வாழ்க்கை வேண்டேன்
    யான்பிறந் தேனும் அல்லேன்
என்னொரு சிலையும் யானும்
    எரியிடைப் புகுவன் என்றான். 141

ஆரியன் தனது மாற்றம்
    அனைவரும் வியந்து செல்ல
ஓரிமை ஒடுங்கு முன்னம்
    உவெரியின் நடுவண் ஆன
வீரமா மகேந்தி ரத்தின்
    மேற்றிசை வாயில் போந்தான்
பாரிடர்க் கணங்கள் ஆர்த்த
    பரவைகள் அழிந்த தேபோல். 142

நீக்கமில் மாளிகை நிரைகள் யாவையும்
மேக்குயர் பூதர்கள் விரைந்து தம்பதத்
தாக்கினில் அழித்தனர் தவத்தின் மேலவர்
வாக்கினில் அகற்றிய வண்ண மேயென. 143

---

**141.** இந்நன்னகரை இன்னே அழிப்பேன்; சூரன்; மைந்தன் வந்து எதிர்த்தால் அன்னவனையும் ஒழிப்பேன். அவ்விதம் செய்யாவிடில் இவ்வுயிர் வாழ்க்கை வேண்டேன்; நான் பிறந்தவனும் அல்லேன்; வில்லொடு நானும் தீயில் விழுவேன்' என்று சபதம் செய்தார்.

**142.** அவ்வாசகத்தைக் கேட்டவர் பூதப் படைவீரர் வியந்தனர்; கிளர்ந்து எழுந்தனர்; நொடிப் பொழுதில் மகேந்திர நகரின் மேற்றிசை வாயிலை அடைந்தார் வீரவாகு. பெருங்கடல் உடைந்தாற் போலப் பூதகணம் ஆர்த்தது.

**143.** நெருங்கி நின்ற மாடமாளிகைகளை யெல்லாம் நெடிய பூதர்கள் தம் காலால் [illegible] தகர்த்தார்கள்; பெரியோர் சாபத்தால் அழிந்தாற் போல அவை வீழ்ந்தன.

அன்னதோர் அமைதியின் ஆடல் மொய்ம்பினன்
வன்னியின் படையொடு மருத்தின் மாப்படை
பொன்னெடும் சிலைதனில் பூட்டி நீவிர் போய்
இந்நகர் அழித்திர் என்று இமைப்பில் ஏவினன்.

ஏவிய அப்படை இரண்டும் ஒன்றியே
மூவுல கிறுதியின் முடிக்கும் தம்உரு
மேவின நகரெலாம் விரவிச் சூழ்ந்தன
தீவிழி அவுணரும் இரிந்து சிந்தவே. 145

போரினை இழைத்துவெம் பூதர் தங்களை
வீரர்கள் தொகையினை வீட்டிப் பின்னுறச்
சாருறு சிவன்மகன் தன்னை வென்றிவண்
சேருதும் கொணர்திர் நம் தேரை என்றனன்.

ஒற்றரை நோக்கியே உணர்வில் மன்னவன்
சொற்றது கேட்டலும் துளங்கி ஏங்கினன்
மற்றவன் அளித்திடும் மதலை மாரிநாள்
புற்றுறை அரவெனப் புழுங்கும் நெஞ்சினன்.

---

144. அப்போது வீரவாகு தீப்படையையும் காற்றுப் படையையும் எடுத்து வில்லிற் பூட்டி அந்நகரின் மீது விடுத்தார்.

145. அப்படைக்கலம் இரண்டும் ஒன்றாய்க் கலந்து ஊழிக்காலம் போல் நகரமெங்கும் விரிந்து வளைந்தன. நெருப்புக் கண்ணராகிய அசுரரும் அஞ்சியோடினர்.

146. அது கண்ட சூரன் 'இப்பொழுது நானே போர் செய்து பூத கணங்களைக் கொல்வேன்; வீரர் அனைவரையும் அழிப்பேன்; சிவகுமாரனையும் வெல்வேன்; வருக; தேர் தருக என்றான்.

147. அறிவிழந்த மன்னன் இவ்வாறு தன் தூதரை நோக்கிக் கூறிய மொழிகளைக் கேட்டான் அவன் பெற்ற மைந்தருள் ஒருவன். கார்காலத்து இடியோசை கேட்டுப் புற்றிலே நடுங்கும் பாம்பு போன்றான்.

ஆயிரம் மறையுணர்ந்து ஆன்ற கேள்வியான்
தூயநல் லறத்தொடு முறையும் தூக்கினோன்
மாயமும் வஞ்சமும் மரபிற் கற்றனன்
தீயதோர் அவுணருள் திறலும் பெற்றுளான்.

தரணியின் கீழுறை அரக்கர் தங்கள்மேல்
விரணம தாகிமுன் வென்று மீண்டனன்
முரணுறு சென்னியோர் மூன்று கொண்டுளான்
இரணியன் என்பதோர் இயற்கைப் பேரினான்.

இருந்தனன் ஒருபுடை எழுந்து தாதைதன்
திருந்தடி இணையினைச் சென்னி சேர்த்திடாப்
பொருந்துவ தொன்றுள புகல்வன் கேள்எனாப்
பரிந்துநின் றினையன பகர்தல் மேயினான். 150

அறுமுகத் தொருவன் ஆகும்
    அமலனை அரன்பால் வந்த
சிறுவன் என்று இகழல் மன்னா
    செய்கையால் பெரியன் கண்டாய்

---

148. அவன் ஆயிரம் வேதங்களை உணர்ந்தவன்; செவிச் செல்வம் வாய்ந்தவன்: அறத்தையும் முறையையும் ஆராய்ந்தவன்; மாயமும் வஞ்சமும் குலவித்தையாகக் கற்றவன்; கொடிய அசுரரது திறமையும் பெற்றவன்.

149. பாதலத்தில் வசிக்கும் அரக்கர்மீது பாய்ந்து வென்று மீண்டவன்; வலிய தலைகள் மூன்றுடையவன்; இரணியன் என்னும் இயற்பெயர் உடையவன்.

150. ஒரு பக்கத்தில் இருந்த இரணியன் எழுந்தான்; தந்தையாகிய சூரனது அடிகளில் விழுந்து வணங்கினான்; 'ஐயனே! நாம் செய்யத் தக்கதோர் செயல் உண்டு; அதனைச் சொல்வேன்' என அன்புடன் கூறுவரனாயினான்.

151. அறுமுகப் பெருமானாகிய பரமனைச் சிறுவன் என்று இகழல் ஆகாது; உருவிலே சிறியவன் ஆயினும் செயற்கரிய செய்யும் பெரியவன் முருகன். ஊழிக்காலத்தில் ஈசனிடம் தோன்றும் புன்னகையாகிய சிறு பொறியன்றோ உலகை யெல்லாம் அழிப்பது?

இறுதிசேர் கற்பம் ஒன்றின்
ஈறிலா தவன்பால் தோன்றும்
முறுவலின் அழலும் அன்றோ
உலகெலாம் முடிப்ப தம்மா. 151

வாசவன் குறையும் அந்தண்
மலரயன் குறையும் மற்றைக்
கேசவன் குறையும் நீக்கிக்
கேடிலா வெறுக்கை நல்க
ஆசிலோர் குழவி போலாய்
அறுமுகம் கொண்டான் எண்தோள்
ஈசனே என்ப தல்லால்
பிறிதொன்றை இசைக்க லாமோ. 152

கங்கைதன் புதல்வன் என்றும்
கார்த்திகை மைந்தன் என்னும்
செங்கண்மால் மருகன் என்றும்
சேனையின் செல்வன் என்றும்
பங்கயன் முதலோர் தேருப்
பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவும் சொல்வது
ஏழைமைப் பால தன்றோ. 153

---

152. வாசவன் துயரமும், பிரமன் துயரமும், கேச வன் துயரமும் நீக்கி அழிவற்ற செல்வத்தை அன்னார்க்கு அருளும் வண்ணம் ஈசனே பாலன் வடிவம் கொண்டு அறு முகனாய்த் தோன்றினார். அதனை வேறு ஒன்றாகச் சொல்லலாமோ ?

153. காங்கேயன் என்றும், கார்த்திகேயன் என் றும், திருமால் மருகன் என்றும், தேவ சேனாபதி என்றும், பிரமன் முதலிய தேவரும் அறியாத பரம்பொருளைக் குறித்தல் அறிவின்மை யன்றோ ?

தாரகன் செற்ற தென்றால்
தடவரை பொடித்த தென்றால்
வார் புனற் கடலுள் உய்த்த
வலியரை மீட்ட தென்றால்
கூருடைத் தனிவேல் போற்றிக்
குமரன்தாள் பணிவ தல்லால்
போரினைப் புரிதும் என்கை
புலமையோர் கடனா தாமோ. 154

இப்பகல் வந்து வீரன்
இருஞ்சமர் இயற்ற எம்முன்
தப்பினன் மறைந்து மாயைப்
படைதொட உணர்ச்சி தள்ளி
அப்புனல் அளக்கர் உய்ப்ப
அறுமுகன் வேலால் மீண்டுன்
மெய்ப்பதி அடுவான் என்றால்
அவ்வனையார் வெல்லற் பாலார். 155

கருணை கொண் டிருந்த வள்ளல்
கருத்திடைத் தொலைவில் சீற்றம்
வருவதன் முன்னம் இன்னே
வானவர் சிறையை மாற்றி

---

**154.** குமரவேளின் கையிலமைந்த வேற்படை தாரகாசுரனைக் கொன்றது; அவன் மாய மலையைத் தகர்த்து நொறுக்கியது; நன்னீர்க் கடலுள் நாம்தள்ளிய சேனையை மீட்டது; இத்தகைய ஒப்பற்ற வடிவேலைத் தொழுது, வேலுடைய பாலனைப் பணிவதை விட்டு, அமர் புரியத் துணிதல் அறிவுடையோர் செயலாகுமோ?

**155.** இன்று வந்து போர்புரிந்தான் வீரனாகிய வீரவாகு; என் தமையன் அவன் முன்னே நிற்க மாட்டாமல் தப்பி மறைந்தான்; மாயைப்படையை விட்டு மாற்றார் அறிவை மயக்கிக் கடலிலே தள்ளினான். அன்னார் அனைவரும் அறுமுகன் வேலால் மீண்டு வந்தார்கள். தலைவனான வீரவாகு வீரமகேந்திரத்தை அழிக்கத்தலைப்பட்டான் என்றால் அவனையார் தடுக்கவல்லார்?

உரியநம் தமரும் யாமும்
ஒல்லையின் ஏகி ஐயன்
திருவடி பணிந்து தீயேம்
செய்தன பொறுத்தி என்று. 156

பணிந்துழி அமல மூர்த்தி
பலவும் நாம் புரிந்த தீமை
தணிந்தருள் செய்து தானும்
தணப்பிலா வரங்கள் நல்கி
அணிந்ததன் தானை யோடும்
அகலுமால் உய்தும் யாமும்
துணிந்திது புகன்றேன் ஈதே
துணிவென மதலை சொற்ருன். 157

பரிந்துதனக் குறுதியிவை தெருட்டுதலும்
அது கேளாப் பகுவாய் கால
விரிந்தபுகைப் படலிகைபோய்த்திசையனைத்தும்
விழுங்கியிட வெகுளி மூளக்

---

156. கருணை கொண்ட வள்ளல் முருகவேள். அவர் கருத்தில் அளவிறந்த சீற்றம் வருவதன் முன்னே வான வரைச்சிறையினின்றும் விடுவித்துச் சுற்றத்தோடு நாமும் விரைந்து சென்று அவர் திருவடி பணிந்து கொடிய வராய நாங்கள் செய்த குற்றங்களைப் பொறுத்தருள்க என்று,

157. பணிந்து வேண்டினுல் அவர் நாம் செய்த தீமையெல்லாம் பொறுப்பார்; அருள் புரிவார்; அழி வற்ற வரங்களை அளிப்பார்; படையோடு திரும்பிச் செல் வார்; அதனுல் நாமும் பிழைப்போம்; உன் முன்னே இதனைத் துணிந்து கூறினேன்; இது முடிவாக நாம் கொள்ளத்தக்கது" என்று கூறினுன்.

158. இவ்வாறு இரணியன் பரிவுடன் சொல்லிய கட்டுரை கேட்டான் சூரன். அவன் வாயினின்றும் புகைப் படலம் எழுந்து பரந்தது; சீற்றக் கனல் பொங்கிற்று; உடலம் வியர்த்தது; பெரு மூச்சுப் பிறந்தது, வாயிதழ் துடித்தது; கண் சிவந்தது; மனம் எரிந்து பதைத்தது;

கரிந்ததன துடல் வியர்ப்ப உயிர்ப்புவர
இதழ் துடிப்பக் கண்கள் சேப்ப
எரிந்து மனம் பதை பதைப்ப உரும் எனக்கை
எறிந்து நகைத் தினையன சொல்வான். 158

அரி அயனும் புரந்தரனும் விண்ணவர்கள்
எல்லோரும் அகிலந் தன்னில்
விரவுகணத் தவர் எவரும் யார்க்கும் முதல்
ஆகும் முக்கண் விமலன் தானும்
பொரு சமரின் ஏற்றிடினும் எனக்கழிவ
தன்றி வென்று போவதுண்டோ
ஒரு சிறிதும் புந்தியிலை மைந்தயான்
பெற்ற வரம் உணர்கிலாயோ. 159

ஆற்றல் விட்டனை குலமுறை
பிழைத்தனை அரசின்
ஏற்றம் நீங்கினை ஒன்னலர்க்கு
அஞ்சினை இசைத்தாய்
மாற்றம் ஒன்றினி உரைத்தியேல்
உன்தனை வல்லே
கூற்று வன்புரத் தேற்றுவன்
யான் எனக் கொதித்தான். 160

---

இடிபோல் இரு கரங்களையும் கொட்டி இரணியனை நோக்கி,

159. "பேதை மைந்தா! மாயவனும் பிரமனும், இந்திரனும் ஏனைய வானவரும், அண்டத்தில் உள்ளார் அனைவரும், எல்லார்க்கும் முதல்வனாகிய ஈசன் தானும் என்னை எதிர்த்தால் தோல்வியடைவரே யன்றி வெற்றி பெறுவதுண்டோ? யான் பெற்ற வரங்களை அறியாயோ?

160. நீ ஆண்மை இழந்தாய்; நம் குல முறை பிழைத்தாய்; அரசின் பெருமை துறந்தாய்; மாற்றுரைக் கண்டு அஞ்சினாய்; ஆதலால் இவ்வாறு பேசினாய்; இன்னொரு மொழி பேசினால் உன்னை இன்னே எமபுரத்தில் ஏற்றுவேன்" எனக் கொதித்து உரைத்தான்.

கொதித்த வேலையில் மைந்தனும்
நம்முரை கொடியோன்
மதித்தி லன் இவன் மாய்வது
சரதமே வான்மேல்
உதித்த செங்கதிர்ப் பரிதியம்
கடவுள் சூழ் உலகில்
விதித் திறந்தனை யாவரே
வன்மையால் வென்றோர். 161

வெஞ்சி னம்தனை ஆற்றி இத்
தாதை தான் விரைவில்
துஞ்சும் முன்னர் யான் இறப்பது
நன்றெனத் துணியா
எஞ்சல் இல்லவன் தாளிணை
வணங்கி நீ இசைத்த
வஞ்சி னம் தனை முடிப்பன் யான்
என்றனன் மைந்தன். 162

தாதை அன்னதோர் வேலையின்
மைந்தனைத் தழீஇக் கொண்டு
ஈது நன்று நன்று உன் பெரும்
தானையோடு எழுந்து

161. அது கேட்ட மைந்தன், 'இக்கொடியவன் என்னுரையைக் கொண்டானல்லன்; இவன் மாண்டுபோவது திண்ணம்; இவ்வுலகில் விதியின் திறத்தினை யாவரே வெல்ல வல்லார்?

162. வெஞ்சினம் கொண்டு போர்புரிந்து விரைவில் விழுந்திடுவான் என் தந்தை; அதற்கு முன் யான் இறத்தலே நன்று' எனத் துணிந்து, சூரனது அடிகளில் விழுந்து வணங்கினன். "ஐயனே! நீ இறுதியாகச் சொல்லிய சபதத்தை நானே முடிப்பேன்" என்றான்.

163. அப்போது சூரன் மைந்தனைத் தழுவினன். நன்று நன்று என்று மெச்சினன். பெருஞ் சேனையோடு

போதி என்றலும் விடை கொடு
புரந்தனில் போந்து
மாதிரம்புகழ்கின்றதன்
உறையுளில் வந்தான். 163

அறம் தலைப்படும் இரணியன்
அனிக நால் வகையும்
புறம் தலைப்படத் துயரமும்
தலைப்படப் போந்து
மறம் தலைப்படு பூதர்கள்
ஆர்ப்பொலி வழங்கும்
பறந் தலைக்களம் புக்கனன்
அமரர் மெய் பனிப்ப. 164

அனைய எல்லையில் வீரவா
குப் பெயர் அறிஞன்
கனகன் முன்வரும் சேனைமாப்
பெருங்கடல் கண்டு
முனிவு கொண்டுதன் பாணியின்
முரிவெஞ் சிலையைக்
குனிவு செய்தனன் அறத்தனிக்
கடவுளும் குனிப்ப. 165

போர்க்களம் செல்க எனப் பணித்தான். இரணியனும் விடைபெற்று எழுந்து தன் மாளிகையை அடைந்தான்.

164. அற நெறியில் நின்ற அவ்வீரனது நால்வகைப் படையும் எழுந்தது; உள்ளத்தில் துயரமும் உயர்ந்தெழுந்தது; ஆண்மை நிறைந்த பூதர்கள் ஆரவாரம் செய்து நின்ற அமர்க்களம் புகுந்தான். அவனைக் கண்டு வானவர் நடுங்கினர்.

165. இரணியன் முன்னே எழுந்துவந்த சேனைப் பெருங்கடலைக் கண்டார் வீரவாகு. சீற்றம் உற்றார்; வெஞ்சிலையை வளைத்தார்; அறக்கடவுள் ஆனந்த நடனம் புரிந்தது.

விடுத்த வாளிகள் வெவ்விறல் ஆடகன்
எடுத்த வாளி இருஞ்சிலை பின்னுறத்
தொடுத்த தூணிமுன் தூண்டிய பாகுதேர்
படுத்து மார்பகம் பல்துளை செய்தவே. 166

இந்த வேலை இடர்ப்படும் என் தனக்கு
அந்தம் எய்திய தன்னவ னால்உயிர்
சிந்தும் என்னொடு தீர்வது வோஇனித்
தந்தை யாரும் இறத்தல் சரதமே. 167

இற்ற காலை இருங்கடன் செய்திட
மற்று யாவரும் இல்லையிம் மாநகர்ச்
சுற்ற மானவ ருமதெலந் தார்இனி
உற்று ளோரும் இறப்பர் இதுண்மையே. 168

மைந்தனைப் பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
அந்த மில்கடன் ஆற்றுதற் கேயன்றோ. 169

---

166. அவர் விடுத்த அம்புகள், இரணியன் எடுத்த அம்பையும் வில்லையும் ஒடித்தன; அம்பறுத் தூணியை அழித்தன; தேரையும் பாகனையும் தீர்த்தன; அசுரன் மார்பைப் பலவிடங்களில் துளைத்தன.

167. அந்நிலையில் இரணியன் "இந்த வேளையில் எனக்கு அந்தம் வந்தது; ஆயிலும் என்னோடு நிற்குமோ? என் தந்தையும் இறந்து தீர்வான்.

168. அவன் இறக்கும் பொழுது இறுதிக்கடன் செய்வதற்கு யாரும் எஞ்சி இருக்க மாட்டார். சுற்றத் தார் இற்று ஒழிந்தார்; மற்றுமுள்ள உறவினரும் இனி இறப்பர். இஃது உண்மை.

169. பிள்ளையைப் பெறுவதும், அன்போடு போற்றி வளர்ப்பதும், தந்தைக்கு முறைப்படி அந்திக் கடன் செய் தற்கே யன்றோ?

ஆவ துன்னிஎன் ஆருயிர் போற்றியே
போவதே கடன் என்று பொருக்கெனத்
தாவி வான்முகில் தன்னிடைப் போயொரு
தேவ மந்திரம் சிந்தையில் உன்னினான். 170

உன்ன வோடும் உருவரு ஆதலும்
தன்னை யாரும் தெரிவரும் தன்மையால்
பொன் உலாய புணரியுள் போயினான்
மின்னு தண்சுடர் மீனுரு ஆகியே. 171

நீங்கு சூர்மகன் நீர்மையை நோக்கியே
வீங்கு தோளுடை வீரன்நம் மாற்றலன்
ஓங்கும் ஆழியுள் ஓடினன் தோற்றென்று
ஏங்கு சங்கம் எடுத்திசைத் தான்அரோ. 172

கருவாய் உறு இன்றதொர் காலைமுதல்
திருமாதுடல் முற்றழல் சிந்திடலும்
பெருமாயவள் வந்து பிறந்திடுவோன்
எரிமாமுகன் என்ற இயற்பெயரான். 173

---

170. இனிமேல் விளைவதை எண்ணி, என்னுயிரை இன்று காத்தலே கடன்’’ எனக் கருதி விரைவில் விண்ணிலே மறைந்தான்; ஒரு மந்திரத்தை மனத்திலே நினைத்தான்.

171. அப்போது அவன் உருவம் அருவமாயிற்று. யாரும் அறியாமல் மீன் வடிவம் கொண்டு கடல் நீரினுள்ளே மறைந்தான்.

172. போர்க்களத்தை விட்டு நீங்கிய இரணியன் தன்மை கண்டார் வீரவாகு. மாற்றான் தோற்று முந்நீரில் மறைந்தான்’’ என்று வெற்றிச் சங்கம் ஊதினார்.

173. சூரன் மனைவியாகிய பதுமை ஒருகால் கருவுற்ற நாள் முதல் உடல் எரிவுற்றாள். அப்போது மாயவள் அவ்விடம் போந்து இக்கருவில் இருப்பவன் எரிமுகன் என்றாள். அவன் பிறந்தவுடன் எரிமுகன் என்னும் இயற்பெயர் பெற்றான்.

தெய்வப்படை தாங்கிய செங்கையினான்
ஐவர்க்குள தாகிய ஆற்றலுளான்
மைவைத்திடும் வஞ்சனை மாயம்வலான்
எவ்வெப்படை தன்னையும் ஈறுசெய்வான். 174

மிடல் கொண்டிடு தூதனை மிக்கவரைப்
புடை கொண்டமர் செய்திடு பூதர்தமை
அடல் கொண்டிவன் நின்னை அடைந்திடுவன்
விடைதந்தருள் என்று விளம்பினனே. 175

நன்றேயிது செப்பினை நண்ணலனை
வென்றேவரு கென்று விடுத்திடலும்
நின்றே தொழு தவ்விடை நீங்கினனால்
குன்றே நிகர் தோள்வலி கொண்டுடையோன்.

ஆன காலையில் அங்கி முகாசுரன்
மான மேற்கொடு மாற்றலர் யாரையும்
யானொர் கன்னல்முன் ஈறுசெய் வேன்எனாச்
சேனை தன்னொடுஞ் சென்றிடல் மேயினான். 177

---

174. அவன் தெய்வப்படை தாங்கிய கையன்; ஐவர்க்குரிய ஆற்றல் உடையவன்; கரிய வஞ்சமும் மாயை யும் வல்லவன்; எப்படையையும் அழிக்கும் வீரன்.

175. அவன் சூரனிடம் சென்றான், "ஐயனே" வலிமை சான்ற வீரவாகுவையும், தலைவரையும், பூத கணங்களையும் நானே வென்று வருவேன்; விடை தருக" என்று வேண்டினான்.

176. 'நன்று கூறினாய், வென்று வருக' என்றான் சூரன். குன்று போன்ற தோள் வலி படைத்த எரிமுகன் தந்தையைத் தொழுது சென்றான்.

177. சேனையோடு செருக்குற்று எழுந்தான். மாற் றாரை ஒரு நாழிகையில் அழிப்பேன் என்று போர்க்களம் சென்றான்.

வீரமொய்ம் புடையவன் வெருவ லீர்எனப்
பாரிடக் கணங்களைப் பாணி யால்அமைத்து
ஓரிறை முன்னரே ஒருதன் தேரொடும்
ஆரழல் முகத்தன் அணுகப் போயினன். 178

ஆராரும் வியக்கும் திறல்
அடல் பொய்ம்பினன் அங்கண்
ஓராயிரம் வடிவாளிகள்
ஒருங்கே தொடுத் துய்த்துச்
சூராகிய அவுணன் தரு
தொல்லைத்தனி மைந்தன்
தேரானதும் பரியானதும்
சிலையானதும் சிதைத்தான். 179

மொழிபட்டிடு திறல்மாற்றலர்
முனை வெஞ்செருத் தனில்யான்
அழிபட்டிடின் வருவாய் என
அந்நாள்சிறு காலைப்
பழிபட்டிடும் வெறி யாட்டினைப்
பயின்றேபலி யூட்டி
வழிபட்டதன் நகர்க்காளியை
மனத்தின்மிசை நினைத்தான். 180

---

178. அவன் விளைத்த வீரத்தைக் கண்டு பூதர்கள் வெருவி ஓடினர். 'அஞ்சாதீர்' என்று கையமர்த்திக் கொண்டு நொடிப்பொழுதில் தேர்மீது ஏறி வந்தார் வீரவாகு.

179. ஆயிரம் அம்புகளை யாவரும் வியக்கும் வகையில் எரிமுகன் மீது ஒருங்கே விடுத்தார். அவன் தேரையும் குதிரையையும் வில்லையும் சிதைத்தார்.

180. இளமையிலேயே காளிதேவியை வழிபட்டு ஒரு வரம்பெற்றிருந்தான் எரிமுகன். போர்க்களத்தில் மாற்றாருடன் பொருது இளைத்த வேளையில் படைத்துணையாக வரவேண்டும் என்று கேட்டதற்கு இசைந்து வரம் தந்த மகேந்திர நகர்க் காளியை இப்போது தியானித்தான்.

சூலம் கொண்டல் அமர்ந்து தோன்றுவாள்
சூலம் கொண்ட மைந்த தோளினள்
கோலம் பெற்ற குலிங்க வேணியாள்
கோலம் பெற்ற குறுங்கொ லைக்கணள். 181

விரைவொடு பறந்தலை மேவி வீழ்ந்தயர்
எரிமுக மதலையை எய்தி நோக்கியான்
உரமிகும் ஒன்னலர் உயிரை உண்பல் நீ
பரிவுறல் என்றனள் அமைத்த பாணியாள். 182

அத்திறன் நோக்கியே ஆடற் பூதர்கள்
எத்திறத் தவரையும் ஈறு செய்கெனக்
கைத்தலத் திருந்ததோர் கழுமுள் வீசினள்
பத்திரை தன்னருள் படைத்த காளியே. 183

சண்டிகை விடுபடை தனது வன்மையைக்
கண்டனன் இளையவன் கணங்கள் ஆருயிர்
உண்டிடும் இஃதென உன்னி ஏழிரு
புண்தரு சிலீமுகம் பொள்ளென் றேவினன். 184

---

181. கரு மேகம் போன்ற நிறமும், சூலப்படை தாங்கிய தோளும், குலிங்கச் சடையும், கொலைக் கண்ணும்,

182. உடைய காளி அமர்க்களத்திலே தோன்றினாள்; எரிமுகன் நிலைமையை நோக்கினாள். 'மாற்றார் உயிரை வாங்குவேன்; மயங்காதே' என்று அபயம் அளித்தாள்.

183. பத்திரகாளியின் அருள் பெற்ற அக்காளி பூத கணங்களையும் மற்றையோரையும் அழித்திடும் வண்ணம் சூலப்படையை வீசினாள்.

184. அதன் வன்மையைக் கண்ட வீரவாகு 'இப்படை பூதகணங்களின் உயிரைப் போக்கிவிடும்; ஆதலால் தடுத்து முறித்திடல் வேண்டும்' என்று கருதிப் பதினான்கு வலிய பாணங்களைக் கணப்பொழுதில் ஏவினார்.

துண்டென யான்விடு சூலம் தன்னையும்
அண்ணலம் பகழியால் அறுத்தென் ஆற்றலை
எண்ணலன் நிற்பனால் இன்னும் அங்கவன்
உண்ணிகழ் உயிரினை உண்குவேன் என்றாள். 185

இடித்தென உரப்பினன் எண்கை தன்னையும்
ஒடித்தனன் ஆமென ஒருகை யால்உறப்
பிடித்தனன் மற்றொரு பெருங்கை யால்உரத்து
அடித்தனன் காளிவீழ்ந் தவசம் ஆயினாள். 186

அந்தமில் அறுமுகத் தமலன் ஏவலால்
வந்தவ னொடுபொரின் வாகை எய்துமோ
புந்தியி லாதிவண் புக்க னன்எனாச்
சிந்தைசெய் தெழுந்தனள் வன்மை தீர்ந்துளாள்.

இத்திறம் யோகினி இசைத்து வெஞ்சமர்
வித்தகன் விடைகொடு மீண்டு கோளரிச்
சித்திர எருத்தமேற் சேர்ந்து தொல்படை
மொய்த்திடப் போயினள் முந்து வந்துழி. 188

---

185. அதைக் கண்டாள் காளி. "யான் விட்ட சூலத்தைச் சிறந்த பாணத்தால் அறுத்தான். என் ஆற்றல் அறியாது இன்னும் எதிரே நிற்கின்றான். இவன் உயிரை உண்பேன்" என்று எழுந்தாள்.

186. அப்பொழுது இடிபோல் அதட்டினார் வீரவாகு; காளியின் எட்டுக் கைகளையும் ஒரு கையால் வளைத்துப் பிடித்தார்; மற்றொரு கையால் அவள் நெஞ்சில் ஓங்கி அடித்தார். அவள் கீழே விழுந்து மயக்கமுற்றாள்.

187. மயக்கம் தெளிந்தவுடன் "அந்தோ! என்ன அறிவற்ற செயல் செய்தேன்! அறுமுகப் பெருமான் ஆணையால் போர் செய்ய வந்த வீரவாகுவை வெல்லலாகுமோ? இங்கு வந்தது பேதைமை"

188. என்று கூறி வீரவாகுவிடம் விடைபெற்றுச் சிங்கத்தின் மீதேறி யோகினிப் படைகளோடு வந்த வழியே போயினாள்.

சண்டிகை போந்த காலைத்
தழல்முகன் அனைய எல்லாம்
கண்டனன் வெகுண்டு நன்றிக்
கள்வனை தாற்றல் என்னாத்
திண்திறல் ஆற்றல் சான்று
சேண்கிடந் துருமுக் கான்று
கொண்டல தெழுந்தால் என்னக்
கொம்மென எழுந்து சொல்வான். 189

இன்னினிக் கணம தொன்றின்
இளவல் ஆருயிரை வௌவி
முன்னுற அகன்ற ஒற்றன்
முரண்வலி யதனைச் சிந்தி
அன்னவன் ஆவி கூற்றுக்கு
அடிசிலா அளிப்பன் அல்லால்
மன்னன்முன் போவ தில்லை
வஞ்சினம் இஃதே என்றான். 190

வில்லது முறிந்திடலும்
வேறொர்சிலை வாங்கிக்
கல்லென எயிற்றணி
கறித்திவனை இன்னே

189. காளி சென்றதைக் கண்டான் எரிமுகன்; சீற்றம் கொண்டான்; வீறுற்று எழுந்தான்; மேகத்தினிடையே அதிரும் இடிபோல் முழங்கினன்.

190. "முன்னே எம் நகரில் வந்து என் தம்பியின் உயிர் கவர்ந்து சென்ற தூதனாகிய வீரவாகுவின் வலிமையைச் சிதைத்து, அவனுயிரைக் காலனுக்கு விருந்தளிப்பேன். அப்படிச் செய்யாமல் மன்னன் முன்னே செல்வதில்லை" என்று வஞ்சினம் கூறினன்.

191. கையில் வில்லெடுத்துப் போர் தொடுத்தான். அவ்வில் ஒடிந்தது. வேறொரு வில்லை வளைத்து, பற்களைக் கடித்து, வீரமொழி பேசி, பிரமாஸ்திரத்தை விடுத்தான்.

கொல்வ னெனும் வெய்யமொழி
கூறிமணம் நாறும்
அல்லிமல ரோன் படையை
அண்ணல் மிசை உய்த்தான். 191

அத்தகைமை நோக்கினன்
அயன்படையை யானும்
உய்த்திடின் எனக்குவரும்
ஊதியம்என் என்னாச்
சித்தமுறு பூசனை
செலுத்தி விறல் வீர
பத்திர நெடும்படையோர்
பாணிகொடு விட்டான். 192

அன்னமிசை யோன்படை
அழிந்திடலும் வீரன்
தன்னது நெடும்படை
தடுப்பில்வகை ஏகி
வன்னிமுகன் ஆவிகொடு
மாமுடிகள் தள்ளி
மின்னுவென வீரனிடை
மீண்டு படர்ந் தன்றே. 193

---

192. மாற்றான் ஏவிய படைக்கலத்தைக் கண்டார் வீரவாகு. "இப் பிரமாஸ்திரத்திற்கு எதிராக நானும் ஒரு பிரமாஸ்திரத்தை விட்டாற் பயனில்லை" என்று எண்ணி வீரபத்திரப் படையை எடுத்து, மனத்தாற் பூசனை செய்து விடுத்தார்.

193. அது பிரமாஸ்திரத்தை அறுத்தெறிந்து, தடையின்றிச் சென்று எரிமுகாசுரன் முடிகளைத் தள்ளி, அவன் உயிரைக் கவர்ந்து மின்னலைப்போல வீரவாகுவினிடம் மீண்டது.

நின்று மற்றிவை நாடிய
ஒற்றர்நீள் நகரில்
சென்று சூரனைத் தொழுதுநின்
மதலைபோர் செய்து
வென்றி மொய்ம்பினன் விடுத்திடு
வீரன்யாப் படையால்
பொன்றி னன்பொடி யாகிவீழ்ந்
தனன் எனப் புகன்றார். 194

ஆயதோர் காலைமூ வாயிரத் தொகை
மேயின மைந்தர்கள் வினவி ஈதெலாம்
மாயிரு விசும்பினை அளாவும் மன்னவன்
கோயிலை அடைந்தனர் குழுவொ டேகினார். 195

தீமுகன் ஒருவனுக் கிரங்கித் தேம்பலை
யாமுளம் இரணியன் இன்னும் உற்றுளான்
தாமரை மகிழ்நனைத் தளைப் படுத்திய
கோமகன் உளன் ஒரு குறையுண் டாகுமோ. 196

பன்னுவ தென்பல பணித்தி யாங்கள்போய்
முன்னுறு பூதரை முரண்கொள் வீரரைப்
பின்னுறு கந்தனைப் பிறரை ஈண்டொரு
கண்ணலின் வென்றுநின் கழல்கள் காண்டுமால்.

---

194. போர்க்களத்தின் ஒரு சார் நின்று இவற்றை யெல்லாம் கண்ட ஒற்றர்கள் சூரனிடம் சென்று எரிமுகன் போர் செய்து இறந்த செய்தியை அறிவித்தார்கள்.

195. அப்பொழுது சூரனது மைந்தர் மூவாயிரவரும் நிகழ்ந்ததை அறிந்து மன்னன் மாளிகையை அடைந்தார்கள்.

196. (சூரனைத் தொழுது நின்று) 'எம் ஐயனே! எரிமுகன் ஒருவனுக்காக இரங்கலாகுமோ? நாங்கள் மூவாயிரவர் இருக்கின்றோம்; இரணியனும் உயிரோடு இருக்கின்றான்; சூரியனைச் சிறைப்படுத்திய பானுகோபன் இருக்கின்றான்; உனக்கு என்ன குறை.

197. பல பல சொல்வதிற் பயன் என்னை? எம்மைப் போர் செய்ய ஏவினால், பூதரையும், வீரரையும், கந்த

என்றிவை புகறலும் இடுக்கண் நீங்கியே
நன்றிது மைந்தர்காள் நடமின் போர்க்கென
வன்திறல் முதல்வனை வணங்கிக் கைதொழா
நின்றவர் ஏவரும் நீங்கினார் அரோ. 198

கலக்கித்தட மலர் சிந்திடு
களிறும்என அடல்செய்
விலக்கற்கரும் மூவாயிரர்
வில்லாண்மையும் வல்லார்
அலக்கட் படு கணவீரர்கள்
அழிகின்றதும் நோக்கி
இலக்கத்தரில் ஓராயிரர்
எரியாமெனச் செயிர்த்தார். 199

விசயன் சயன் இடபன்கர
வீரன் அதி கோரன்
அசலன் அதி குணன் வாமனன்
அனந்தன் அக ளங்கன்

---

னையும் பிறரையும் ஒரு கணப்பொழுதில் வென்று வருவோம்''

198. என்று கூறினர். அம்மொழி கேட்ட சூரன் துன்பம் துறந்தான்; "நல்லது; மைந்தர்காள்; போர் புரியச் செல்க' என்றான். மூவாயிரவரும் தந்தையை வணங்கி விடைபெற்றுச் சென்றனர்.

199. போர்க்களம் புகுந்து தாமரைக் குளத்தைக் கலக்கி மலர்களைச் சிதைக்கும் யானைபோல் மாற்றாரைக் கலக்கினர் மூவாயிரவரும். அவர் வில்லாண்மைக்கு ஆற்றாது அவதியுற்ற பூதரைக் கண்டு, அவர்க்குதவியாக நூறாயிரம் வீரருள் ஓராயிரவர் நெருப்பெனச் சீற்றமுற்று வந்தார்.

200. விசயன், சயன், இடபன், கரவீரன், அதிகோரன், அசலன், அதிகுணன், வாமனன், அனந்தன், அகளங்கன், அனகன், சதுவலி, மாருதன், வருணன், சுகண்டகன் முதலிய ஆயிரம் பேர்கள் போர் முனையிற் புகுந்தார்கள்.

வசையில் புகழ் அனகன்சத
வலிமாருதன் வருணன்
சுசிகண்டகன் முதல்ஆயிரர்
சமரின்தலை புகுந்தார். 200

கொடுந்தொழி லாரொடு
கொற்ற வீரர்கள்
அடைந்தனர் இவ்வகை
ஆண்மைப் போரினைத்
தொடர்ந்துவின் றியற்றியே
தொல்லை வன்மைபோய்
உடைந்தனர் விசையன் அங்
கொருவன் அன்றியே. 201

இசையுறு தமர் எலாம்
இரிந்து போதலும்
விசையனே எனப்படும்
வீரன் சீறியே
வசையுறும் அவுணர் கோன்
மகாரைக் கூற்றுவன்
திசையுறு நகரிடைச்
செலுத்துவேன் என்றான். 202

கரதலத் தெடுத்திடு
கார்மு கந்தனை
விரைவொடு கோட்டியே
விசையன் என்பவன்

---

**201.** கொடுந்தொழில் புரியும் அசுரரோடு அவ் வீரர் செய்த போரில் விசையன் ஒருவனே எஞ்சி நின்றான். ஆயிரவருள் ஏனையோர் ஆண்மையிழந்து அழிந்தனர்.

**202.** தன்னைச் சேர்ந்த வீரர் அனைவரும் அழிந்த போது விசையன் சீறினான்; "சூரன் மைந்தர்களாகிய மூவாயிரம் பேரையும் காலன் நகருக்கு அனுப்புவேன்" என்று கடுஞ் சூள் உரைத்தான்.

ஒருதனி மாருதத்
தேரடிச் சூழ்வுறச்
சரமழை பொழிந்தனன்
அவுணர் தங்கள்மேல். 203

கையொடு சென்னியும்
கழலும் மார்பமும்
கொய்யுமுன் தொன்மை போல்
கூட மைந்தர்கள்
ஒய்யென எழுந்தனர்
உலகில் தேர்வுறின்
செய்யுறு தவத்தினும்
சிறப்புண் டாம் கொலோ. 204

ஆறுமா முகப்பிரான்
அன்றி இவ்விடை
வேறொரு துணையிலை
மெய்மை ஈதெனத்
தேறினன் அவனடி
சிந்தை செய்தனன்
மாறிழி அருவிநீர்
வழியும் கண்ணினான். 205

---

203. வில்லைக் கையில் எடுத்து வளைத்தான்; காற்றின் வேகத்தில் சரமாரி பொழிந்தான்.

204. அவன் விடுத்த அம்பு அசுர வீரரின் கையையும் தலையையும், தாளையும் தோளையும் கொய்தது; ஆயினும் அறுந்த உறுப்புக்கள் உடனே பொருந்திக் கொண்டன; முன்போலவே மூவாயிரவரும் நின்றனர். இஃது அன்னார் தவத்தினால் பெற்ற பேறு என்றால் இவ்வுலகில் தவத்தினும் சிறந்தது ஒன்றுண்டோ?

205. அந்நிலையில் அறுமுகப் பெருமானை யன்றி. வேறு யாரும் துணையில்லை என்றுணர்ந்தான் விசையன். அவர் திருவடியைத் தியானித்தான்; அன்பினால் அகம் உருகிக் கண்ணீர் சொரிந்தான்.

அண்ணலம் குமரனை
அகத்துள் கொண்டுழி
எண்ணிய எண்ணியாங்கு
எவர்க்கும் நல்குவோன்
விண்ணிடை ஒல்லையில்
விசையன் என்பவன்
கண்ணிடைத் தோன்றியே
கழறல் மேயினன். 206

கேள் இது விசைய ஒன்னார்
கிளையினை முடிப்பான் உன்னித்
தாளொடு முடியும் கையும்
தடிந்தனை தடிந்த தெல்லாம்
மீளவும் தோன்றிற் றன்றே
யேவலர் பெற்ற தோராய்
நீளமர் வயமின் றாகி
நின்றனை தளரேல் நெஞ்சம். 207

என்றிவை உரைத்து வள்ளல்
இம்பரை அளித்தோன் சென்னி
ஒன்றினை வாங்கி ஏனோர்
உளமயல் அகற்றும் எந்தை

---

206. எண்ணிய வெல்லாம், எண்ணியபடியே அன்பர் எல்லோர்க்கும் அளிக்கும் புண்ணிய மூர்த்தி யாகிய முருகவேள் விண்ணிலே தோன்றினர் விசையன் கண்ணெதிரே நின்று,

207. "வீரனே, நீ அசுர குலத்தை அழிக்கக் கருதி, அவ்வீரரின் அங்கங்களை அறுத்தாய். அறுத்த அங்கம் அப்படியே மீண்டும் தோன்றிற்றன்றோ; மாற்றார் பெற்றுள்ள வரத்தை நீ அறிந்தாயல்லை; நெடும்போரில் வெற்றி பெறாது நின்றாய்! ஆயினும் மனந்தளராதே!

208. என்று சொல்லி வைரவ அம்பை எடுத்து விசையனிடம் அளித்தார். மாற்றாரை அழிப்பதற்கு இதனை இப்பொழுதே விடுக' எனப் பணித்து மறைந்தார்.

வென்றிகொள் படையை நல்கி
விசையனுக் களித்து மேவார்
பொன்றிட இதனை இன்னே
விடுகெனப் புகன்று போனான். 208

ஒருகணப் பொழுதின் முன்னர்
ஓராயிர முப்பா லோரும்
செருநிலத் தவிந்தார் அன்ன
செய்கையை விசையன் காணு
முருகனைப் பரவி நின்றான்
முழுமதி தன்னைக் கண்ட
பொருதிரைப் புணரி என்ன
ஆர்த்தனர் பூதர் எல்லாம். 209

முடிவுறு புதல்வரை முன்னி முன்னியே
இடரினை உழந்திடும் இறைவன் தன்முனம்
படியறு நல்லறப் பகைஞன் போந்திடா
அடிமுறை பணிந்துநின் றறைதல் மேயினான். 210

மன்னவர் மன்ன நீ மனத்தில் இவ்வகை
இன்னல்செய் தாற்றவும் இரங்கு வாயெனில்
துன்னலர் மகிழுவர் சுரர்கள் யாவரும்
நன்னகை செய்குவர் நமரும் வெள்குவார். 211

---

209. அவ்வம்பை விட்டான் விசையன். ஒரு நொடிப்பொழுதிற்கு முன்னே மூவாயிரவரும் செருக்களத்தில் இறந்துவிழுந்தார்கள். அதுகண்ட விசையன் முருகப் பெருமானைப் போற்றி நின்றான். முழுமதியைக் கண்ட கடல்போல் பூதகணம் பொங்கி எழுந்து ஆர்த்தது.

210. மைந்தர் மூவாயிரவரும் முடிந்தார் என்று துன்புற்றான் சூரன். அப்போது அவன் முன்னே தரும கோபன் என்னும் அமைச்சன் சென்று அடிபணிந்து,

211. "அரசர்க்கரசே! நீ இவ்வாறு துன்புற்று வருந்தினால் மாற்றார் மகிழ்ச்சியடைவர்; தேவர் எல்லோரும் சிரிப்பர்; நம்மவர் நாணுவர்;

அந்தமில் வெறுக்கையும் அழிவில் ஆயுளும்
நந்தலில் வன்மையும் நடாத்தும் ஆணையும்
இந்திர ஞாலமும் இருக்க எந்தைநீ
புந்தியில் அமரர்போல் புலம்பல் ஆகுமோ. 212

ஆற்றிடு தருமம் நீத்த
அமைச்சன்வந் தினைய வாற்றால்
தேற்றிடு கின்ற காலைச்
சிறிதுதன் அவலம் நீத்துக்
கூற்றென யானே சென்று
கூடலர் தொகையை விண்மேல்
ஏற்றுவன் என்று சீறி
அவுணர்கோன் எழுந்து சென்றான். 213

சென்றிடும் மன்னர் மன்னன்
சேவடி முறையில் தாழா
இன்றிவண் இருந்தி யானும்
அனிகமும் இன்னே ஏகி
வன்திறல் பகைவர் தம்மை
வளைத்துவல் விரைந்து சாடி
வென்றியுற் றிடுவன் என்னா
வேண்டினன் அமைச்சர் மேலோன். 214

---

212. உனக்கு அளவிறந்த செல்வம் உண்டு; அழிவற்ற ஆயுள் உண்டு; மங்காத வீரம் உண்டு; எங்கும் செல்லும் ஆணை யுண்டு; இந்திரஞாலத் தேருண்டு; இவை யெல்லாம் இருக்க, என் ஐயனே! அறிவற்ற தேவரைப் போல் அரற்றல் ஆகுமோ? என்று தேற்றினான்.

213. தருமகோபன் சொல்லிய மொழிகளால் சிறிது துன்பம் நீங்கினான் சூரன். "யானே சென்று மாற்றாரை யெல்லாம் வீட்டுவேன்" என்று வீறுற்று எழுந்து நடந்தான்.

214. புறப்பட்ட மன்னன் அடிகளில் குறுக்கிட்டு விழுந்தான் தருமகோபன். "இன்று யானும் சேனையும் சென்று பகைவரை வளைத்துச் சிதைத்து வெற்றி பெற்றிடுவோம். விடை தருக" என வேண்டினான்.

அறம்தவிர் அமைச்சன் வேண்ட
அவுணர்கள் முதல்வன் மீண்டு
சிறந்திடும் மடங்கல் ஆற்றும்
செம்பொன்செய் பீடம் மேவி
உறைந்தனன் அனைய காலை
ஒல்லையில் விடைகொண் டேகிப்
புறந்தனில் வந்து வல்லே
போர்ப்பெருங் கோலம் கொண்டான். 215

புந்தியில் குறிப்பில் செல்லும்
புண்டரீ கப்பேர் பெற்ற
தந்தியந் தலைவன் மீது
தருமத்தை வெகுளும் வெய்யோன்
அந்தமில் படைகள் ஏந்தி
அமைச்சர்கள் பலரும் சூழ
இந்திரன் இவன்கொல் என்ன
ஏறினன் எழிலி போல்வான். 216

கண்ணுறு படையை நோக்கிக்
கருத்திடைக் கவலை எய்தி
எண்ணிநின் றயர்தல் வீரர்
இயற்கைய தாமோ பின்னர்

---

215. அந்நிலையில் திரும்பி அரியாசனத்தில் ஏறி அமர்ந்தான் சூரன்; தருமகோபனுக்கு விடை தந்தான். அவன் உடனே புறப்பட்டுப் போர்க்கோலம் கொண்டான்.

216. குறிப்பறிந்து ஏவல் புரியும் புண்டரீகம் என்னும் பேர் பெற்ற வேழத்தின்மீது ஏறினான்; எல்லையற்ற படைக்கலங்களை ஏந்தினான்; அமைச்சர் பலரும் சூழ்ந்து வர இந்திரன்போலச் சென்றான்.

217. போர்க்களத்தில் நின்ற பூதப்படையின் பெருக்கத்தைக் கண்ணுற்றான். கருத்திலே கவலை மூண்டது.

நண்ணிய வாறு நண்ணு
நான் இனித் தளரேன் என்னாத்
துண்ணெனத் தேறிச் சென்றான்
சூரனுக் கமைச்சன் ஆனோன். 217

நொந்தனர் இலக்கரும் நோன்மை நீங்கினார்
முந்துறும் அமைச்சர் போர் முயன்று நின்றனர்
அந்தில்அவ் வேலையில் அதனை நோக்கியே
வெந்திறல் வெய்யவன் வெகுண்டு சென்றனன். 218

வானவர்கள் கோமகன் வயக்களிறு தென்னத்
தானவர்கள் போற்றுதரு மப்பகைஞன் ஊர்ந்த
ஆனையது பூதர்தமை அங்கையொடு வாரி
ஊனொடுயிர் சிந்திட உடற்றியதை அன்றே. 219

முந்துற்றிடு கரிதிண்திறல்
மொய்ம்பன் இரதத்தைத்
தந்தத் தொகை கொடு தாக்குபு
சமரத்திடை யிட்ட
கந்தொத்ததொர் எழுவொன்றது
கைக்கொண்டவன் வல்லன்
சிந்தப் புடைத் ததுகாண்டலும்
செந்தீயெனக் கனன்றான். 220

---

ஆயினும் இனி எண்ணி மயங்குதல் வீரர்க்கு அழகன்று; நடந்தது நடக்கட்டும் என்று துணிந்து சென்றான்.

218. தருமகோபனது படைக்கலங்களால் நூறாயிர வீரர்களும் நலிந்து நொந்தார். அசுர அமைச்சர் முன்னேறினர்; அதுகண்டு வீரவாகு சீற்றங்கொண்டு எதிர்த்தார்.

219. அப்போது இந்திரனது யானையாகிய ஐராவதம் போன்ற புண்டரீகம் பூதப்படைகளைத் துதிக்கையால் வாரியெடுத்து அறைந்தது; உடலும் உயிரும் சிதற அடித்தது.

220. முனைந்து வந்து, வீரவாகுவின் தேரைத் தன் கொம்புகளால் இடித்தது; போர்க்களத்தில் வீரர் எறிந்திருந்த தூண் போன்ற தடியொன்றை எடுத்துத்

எறிந்தான் எடுத் ததுகாலையில்
இபம் விண்ணிடை ஏகிப்
பிறிந்தாகவம் இயற்றெல்லையில்
பெயர்காலையின் அமைச்சன்
அறிந்தான் கயம் இழந்தேன்கொலென்று
அயரா அத னோடும்
மறிந்தான்புனை கலம் தன்னொடும்
மணிமாமுடி சிந்த. 221

வீழ்கின்ற தோர் களிறுற்றவும்
வெருவிட்பதை பதைத்து
மாழ்கின்றது புடைபோகிய
மதியில்லவன் எழுந்தே
காழ்கொண்டதோர் கதையொன்றுதன்
கைக்கொண்டுரத் தெறியத்
தாழ்கொண்டதோர் கரத்திற்கடுத்
தலைகொண்டது தறித்தான். 222

வலிகொண்டதோர் தனித்தண்டது
மடிவாதலும் மற்றோர்
குலிசந்தனை விட ஆங்கெதிர்
குறுகக்கரம் பற்றிப்

---

தேர்ப்பாகனை அடித்துக் கொன்றது. அது கண்ட வீரவாகு நெருப்பெனக் கொதித்தார்.

221. தரையில் நின்றுகொண்டு யானையைப் பிடித்து மேலே எறிந்தார். அது தரையை நோக்கி வரும்பொழுது தருமகோபன் 'யானையை இழந்தேனோ' என்று அஞ்சி அயர்ந்து, நகையும் முடியும் சிதற விழுந்தான்.

222. தரையில் விழுந்த யானை நடுங்கித் துடித்து மயங்கிற்று; அதனருகே சென்ற அறிவற்ற தருமகோபன் கோபம் கொண்டு தண்டாயுதத்தை எடுத்து, வீரவாகுவின்மீது எறிந்தான். அவ்வீரன் அதனைத் தன் கையிலிருந்த வாளால் வெட்டி முறித்தான்.

223. பின்னும் ஒரு வச்சிரப்படையை விட்டான் தருமகோபன்; அப்படையை வீரவாகு கையாற் பிடித்துக்

புலிகண்டதோர் கலைமான் எதிர்
புக்கால் என அவுணர்
தலைவன்தனை அடல்மொய்ம்பினன்
தடமார்பிடைப் புடைத்தான். 223

மூளாஉருத் தறைகின்றுழி
முதலற்றிடு தருப்போல்
வாளாபுவி மிசை வீழ்தலும்
வயம் மிக்கவன் ஒருகால்
தாளால்உதைத் தனன் அத்துணை
தருமப் பகை வீளிந்தான்
கேளாகிய அவுணப்படை
கெட்டோடிய தன்றே. 224

விழுந்தயர் புண்டரீக
வெங்கரி உயிர்த்து மெல்ல
எழுந்தது தருமகோபன்
இறந்தபாடதனை நோக்கி
அழுந்திடும் இன்னல் வேலைக்கு
அகன்கரை கிடைத்தால் என்னத்
தொழுந்திறல் வீரவாகுத்
தலைவனை நேர்ந்து சொல்லும். 225

---

கலைமானை அறையும் புலிபோல் அசுரன் மார்பில் அடித்தார்.

224. அறைபட்ட தருமகோபன் அடியற்ற மரம் போற் படியில் விழுந்தான்; அவனை ஒரு தாளால் உதைத்தார் வீரவாகு; அந்நிலையில் உயிர்துறந்தான் தருமகோபன். அசுரப்படை சிதறி ஓடிற்று.

225. மயங்கிக்கிடந்த யானை மெல்லத் தெளிந்து எழுந்தது. தருமகோபன் இறந்ததை அறிந்து; துன்பக் கடலைக் கடந்து கரையேறினாற் போன்று இன்பமுற்றது. மற்றுரும் போற்றுதற்கரிய வீரவாகுவை நோக்கி,

செய்யலை வெகுளி எந்தாய்
சிறியனை அருளிக் கேண்மோ
பொய்யென நினையல் வாழி
புண்டரீ கப்பேர் உள்ளேன்
வையகம் போற்றும் சீரேன்
மாதிரம் காவல் கொண்டேன்
கையன் இத் தருமகோபன்
கடுஞ்சிறைப் பட்டேன் பன்னாள். 226

புந்தியில் அறத்தைக் காயும்
புரைநெறி அமைச்சன் தன்னை
வந்துநீ அடுத வாலே
வானவர் கவலை தீர்ந்தார்
உய்ந்தனன் சிறந்தேன் எற்கும்
ஊதியம் இதன்மேல் உண்டோ
மூந்துறு தளையின் நீங்கி
முத்தி பெற்றாரை ஒத்தேன். 227

புண்டரீ கத்தின் வாய்மை
பொருக்கெனு வினவு வீரன்
அண்டரும் உவகை பொங்க
அகலுதி இருக்கைக் கென்ன

---

226. 'என் அப்பனே! சிறியேன்மீது சீற்றம் கொள்ளாதே! என் கதையைக் கருணைகூர்ந்து கேட்கவேண்டும்; யான் புண்டரீகம் என்னும் பெயருடையேன்; உலகம் போற்றும் உயர்வுடையேன்; திக்கஜங்களுள் ஒருவன்; இத்தகைய யான் கயவனாகிய இத்தருமகோபனது கடுஞ் சிறையில் அகப்பட்டு நெடுங்காலம் வருந்தினேன்.

227. மனமார அறநெறியை வெறுக்கும் தருமகோபனை இன்று நீ அழித்தாய்; இனி வானவர் கவலை தீர்ந்தார்; யானும் பிழைத்தேன்; சிறுமை ஒழிந்து சிறப்புற்றேன்; இதனினும் சிறந்த ஊதியம் எனக்கு வேறுண்டோ? பழவினைப்பாசத்தின் நீங்கி முத்தி பெற்றவரை ஒத்தேன்.

228. (என்று வீரவாகுவை வணங்கிற்று) அதன் வரலாற்றைக் கேட்டு வீரவாகு மகிழ்ச்சியுற்றார். இப்

விண்டொடர் நெறியிற் சென்றங்கு
அவுணர்க்கு வெருவல் இன்றிப்
பண்டமர் திசையின் நண்ணிப்
பரிவற வைகிற் றன்றே. 228

போந்து கோநகர் அணுகியே
துன்பொடு புணர்ந்த
வேந்தன் மாமலர் அடிகளை
உச்சியின் மிலேச்சி
ஆந்த ரங்கமாம் அளியொடு
முந்து நின்று அவுணர்
ஏந்தல் இம்மொழி கேண்மியா
நன்கென இசைப்பான். 229

மாயை தந்ததொல் படையினுல்
செறு நரை மயக்கித்
தூய நீர்க்கடல் இட்டனன்
சுரர் அது புகல
ஆய காலையில் வேல் விடுத்து
அவர்தமை மீட்ட
சேயை வெல்வது கனவிலும்
இல்லையால் தெரியின். 230

---

பொழுது நின் இருப்பிடம் செல்க' என்று விடை கொடுத்தார். ஆகாய வழியே எழுந்தது யானை; அசுரரைக் கண்டு அஞ்சாது முன்னிருந்த திசையை அடைந்து துன்பமற்று வாழ்ந்தது.

229. அன்று போர்க்களத்தில் நிகழ்ந்ததையெல்லாம் தூதுவர் வாயிலாக அறிந்த பானுகோபன், மன்னனது மாளிகையை அடைந்து, துன்பத்திலே தோய்ந்திருந்த தந்தையின் அடிகளைத் தன் முடியிற் சூடி மெய்யன்போடு அவன் முன்னே நின்று

230. 'ஐயனே! மாயவள் தந்த படைக்கலத்தால் பகைவரை மயக்கினேன். நன்னீர்க் கடலில் அவரைத் தள்ளினேன்; அதனைத் தேவர் வாயிலாகத் தெரிந்தான் முருகன். உடனே தன் வேற்படையை விடுத்து அவர்

தெரிந்த மற்றுனக் குரைப்பதென்
முற்பகல் செவ்வேல்
பொருந்து கைத்தலத் தாறுமா
முகனொடு பொருது
வருந்தி வன்படை ஆற்றலும்
இழந்தனை வறிதாய்
இரிந்து மற்றிவண் வருதலால்
உய்ந்தனை எந்தாய். 231

வெஞ் சமஞ்செய வல்லவர்
கிடைத்திடின் மிகவும்
நெஞ் சகம் தளிர்ப் பெய்துவன்
நேரலர் சமருக்கு
அஞ்சி னேன் என்று கருதலை
அரசநீ இன்னும்
உஞ்சு வைகுதி யோ எனும்
ஆசையால் உரைத்தேன். 232

உறுதி ஒன்றினி மொழிகுவன்
பொன்னகர் உள்ளார்
சிறை விடுக்குதி நம்மிடைச்
செற்றம தகற்றி

---

அனைவரையும் மீட்டுக் கொண்டான். இத்தகைய குமரனை வெல்வ தென்பது கனவிலும் இல்லை.

231. அவன் திறமையை நேரில் தெரிந்த உனக்கு மேலும் தெரிவித்தல் வேண்டுமோ? முந்தை நாள் நீயே வேலேந்திய கந்தனோடு போர் செய்து வருந்தினாய்! பெரும் படைத் திறனும் இழந்தாய்! எளியனாய் நின்றாய்! இங்கு ஓடி வந்தாய்; ஆதலால் உய்ந்தாய்.

232. தந்தையே! வெம்போர் செய்ய வல்ல வீரர் கிடைத்தால் நான் மகிழ்வேன். மாற்றாரோடு போர் புரிய அஞ்சினேன் என்று மனத்திற் கொள்ளாதே. மன்னவா இன்னும் பல்லாண்டு நீ வாழ்ந்திருத்தல் வேண்டும் என்னும் ஆசையாற் பேசினேனே யன்றி அச்சத்தால் உரைத்தேன் அல்லேன்.

அறு முகத்தவன் வந்துழி
மீண்டிடும் அதன் பின்
இறுதி யில்பகல் நிலைக்கும் நின்
பெரு வளம் என்றான். 233

என் இவை உரைத்தாய் மைந்த
இன்று யான் எளியன் ஆகிப்
பொன்னுல குள்ள தேவர்
புலம்பு கொள் சிறையை நீக்கின்
மன்னவர் மன்னன் என்றே
யார் எனை மதிக்கற் பாலார்
அன்னதும் அன்றி நீங்கா
வசையும் ஒன் றடையும் மாதோ. 234

தேவரும் மலர்மே லோனும்
செங்கண்மால் முதலா வுள்ள
ஏவரும் ஆணை போற்ற
இருந்தர சியற்றல் உற்றேன்
மூவரின் முதலாம் முக்கண்
மூர்த்தி தன் வரம்கொண் டுள்ளேன்
மேவலர் சிறையை இன்று
விடுவனோ விறல் இலார் போல். 235

---

233. உறுதி பயக்கும் மொழி யொன்று கூறுவேன். சிறையினின்றும் வானவரை விட்டு விடு. முருகவேள் சிற்றம் தீர்வான்; வந்த வழியே சென்றிடுவான்; அப்பால் எல்லையற்ற காலம் நின் பெருஞ் செல்வ மெல்லாம் நிலைத்து நிற்கும்" என்றான்.

234. அது கேட்ட சூரன் கோபம் தலைக் கொண்டான். "மைந்தா! என்ன பேச்சுப் பேசினாய்; நீ சொன்னவாறு யான் எளியனாய் இன்று வானவரைச் சிறையினின்றும் விட்டேனாயின் மன்னர் மன்னன் என்று என்னை யார் மதிப்பார்? மதிப்பு ஒழிந்தது மன்றி மாயாப் பழியும் வந்தடையும்.

235. தேவரும் பிரமன்மால் முதலிய தலைவரும் பதிக்க அரசு வீற்றிருந்து ஆள்கின்றேன்; மூவருக்கு

பேரெழில் இளமை ஆற்றல்
  பெறலரும் வெறுக்கை வீரம்
நேரறு சுற்றம் யாக்கை
  யாவையும் நிலைய அன்றே
சீரெனப் பட்ட தன்றோ
  நிற்பது செறுநர் போரில்
ஆருயிர் விடினும் வானோர்.
  அருஞ் சிறை விடுவ துண்டோ. 236

இறந்திட வரினும் அல்லால்
  இடுக்கண் ஒன் றுறினும் தம்பால்
பிறந்திடும் மானம் தன்னை
  விடுவரோ பெரியர் ஆனோர்
சிறந்திடும் இரண்டு நாளைச்
  செல்வத்தை விரும்பி யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை
  சூரன் என் றொருபேர் பெற்றேன். 237

இன்னு மோர் ஊழி காலம்
  இருக்கினும் இறப்ப தல்லால்
பின்னும் இங் கமர்வ துண்டோ
  பிறந்தவர் இறக்கை திண்ணம்

---

மேலாகிய முழுமுதற் பெருமானிடம் வரம் பெற்றுள்ளேன். இத்தகைய யான் ஆற்றல் அற்றவர் போல் மாற்றாரைச் சிறை விடுவேனோ?

236. பேரழகும், இளமையும், பெருந்திருவும் வீரமும், சுற்றமும் உடலும், மற்று யாவையும் நிலையற்ற இவ்வுலகத்தில் புகழ் என்னும் ஒன்றுதானே அழியாது நிற்கும்? ஆதலால் அமர்க் களத்தில் ஆவியை விட்டாலும் விடுவேன்; அமரரைச் சிறையினின்றும் விடமாட்டேன்.

237. சாக்காடு வந்தாலும், சஞ்சலம் வந்தாலும் மானம் துறப்பரோ பெரியோர்? இரு நாள் சிறந்து இலங்கும் இச் செல்வத்தைப் பெரிதாக மதித்து, சூரன் என்று பெயர்பெற்ற யான் பிடித்த கொள்கை விடுத்திட மாட்டேன்.

மின்னெனும் வாழ்க்கை வேண்டி
விண்ணவர்க் கஞ்சி இந்த
மன்னுயிர் சுமக்கிலேன் யான்
மாயவன் தனையும் வென்றேன். 238

அஞ்சினை போலும் மைந்த
அளிய நின் இருக்கை போகித்
துஞ்சுதி துஞ்சல் இல்லா
வரத்தி னேன் தொலைவ தில்லை
நெஞ்சிடை இரங்கி யாதும்
நினையலை நேர லார்மேல்
வெஞ்சமர் புரியப் போவேன்
என்றனன் வெகுளி மேலான். 239

இவ்வகை தாதை கூற
இரவிதன் பகைஞன் கேளா
உய்வகை இல்லைப் போலும்
உணர்ந்திலன் உரைத்த தொன்றும்
மெய்வகை விதியை யாரே
வென்றவர் வினையிற் கேற்ற
செய்வகை செய்வேன் என்னாச்
சிந்தை செய் தினைய சொல்வான். 240

---

238 இன்னும் ஓர் ஊழிக்காலம் வாழ்ந்திருப்பினும் இறந்துதானே ஆகவேண்டும்? இவ்வுலகிற் பிறந்தவர் எல்லாம் இறந்தே தீர்வர் என்பது திண்ணம். மின்னல்போல் தோன்றி மறையும் இவ்வாழ்க்கையை மதித்து மாயவனையும் வென்ற யான் விண்ணவர்க்கு எளியனாய் இம் மண்ணுலகில் வாழமாட்டேன்.

239. பிள்ளாய்! நீ போருக்கு அஞ்சினை போலும்! உன் மாளிகையிற் போய் உறங்கு; யான் பெற்ற வரத்தால் எனக்கு அழிவில்லை. இதற்காக நீ வருந்தாதே: பகைவர்மீது யானே போர் புரியப் போவேன்" என்று கொதித்துப் பேசினான்.

240. தந்தை சொல்லிய கடுமொழிகளைக் கேட்டான் பானுகோபன். "என் ஐயனுக்கு உய்யும் வகை இல்லைப்

அறிவொரு சிறிதும் இல்லேன்
அடியனேன் மொழிந்த தீமை
இறையதும் உள்ளம் கொள்ளாது
எந்தைநீ பொறுத்தி கண்டாய்
சிறியதோர் பருவப் பாலர்
தீமொழி புகன்றாரேனும்
முறுவல் செய் திடுவ தன்றி
முனிவரோ மூப்பின் மேலோர். 241

அத்தநீ வெகுளல் நம்மூர்
அலைத்திடும் கணங்கள் தம்மை
வித்தக வன்மை சான்ற
விறற் புய னோடும் அட்டுன்
சித்தமும் மகிழு மாறு
செய்குவன் விடுத்தி என்னாக்
கைத்தலம் முகிழ்த்துத் தீயோன்
கழலிணை பணிதல் செய்தான். 242

---

போலும்! நான் உரைத்த மொழிகளின் உண்மையை உணர்ந்தானல்லன். மெய்யாகிய விதியை வென்றவர் உண்டோ? விதிக்கேற்ற செய்கையை இனிச் செய்வேன்" என்று எண்ணிச் சூரனை நோக்கி,

241. "தந்தாய்! அடியேன் சிறிதும் அறிவில்லாதவன்; பேதைமையாலே பேசிய மொழிகளை மனத்திற் கொள்ளாது பொறுத்தருளல் வேண்டும். சிறியவர் அறியாமல் தீயமொழி பேசினால் பெரியவர் சிரிப்பரே யன்றிச் சீற்றம் கொள்வரோ?

242. என் அப்பனே! நீ கோபம் கொள்ளாதே. நமது நகரத்தை அலைக்கும் பூதகணங்களையும், வித்தக வீரனுப வீரவாகுவையும் கொன்று உன் சித்தத்தை மகிழ்விப்பேன். எனக்கு விடை தருக" என்று கை குவித்து அடி வணங்கினான்.

பணிந்திடு கின்ற காலைப்
பதுமை தன் கேள்வன் செற்றம்
தணிந்தனன் உவகை பெற்றான்
தனயனின் உள்ளம் போர் மேல்
துணிந்தது போலும் நன்றால்
துன்னலார் தம்மை வெல்வான்
அணிந்திடு தானை யோடும்
அகலுதி ஐய என்றான். 243

தேரிடைப் புகுந்து நின்றான்
இப் பெரும் சேனை வெள்ளம்
பாரிடைக் கொண்டு நின்ற
புணரியின் பாங்கர் சூழச்
சூரிடைக் கொண்ட அன்பும்
துயரமும் உளத்தை உண்ணப்
போருடைத் திசையை நோக்கிப்
பொள்ளெனப் போதல் உற்றான். 244

மலைக் குலக்கொடி வாமத்தன் மைந்தராம்
இலக்க வீரருள் ஏனைய மைந்தருள்
தலைக் கணின்ற சயம்கெழு மொய்ம்பினான்
விலக்கில் தேரொடும் வெய்தென ஏகினான். 245

---

243. அப்போது சூரன் சீற்றம் தீர்ந்தான். இன்பம் உற்றான். "மைந்தா! நின் மனம் போரிலே படிந்தது போலும். நல்லது; பகைவரை வெல்லுமாறு படையெடுத்துச் செல்க" என்றான்.

244. தேர்மேல் ஏறினான் பானுகோபன். சேனை வெள்ளம் கடல் போல் பரந்து நின்றது. தந்தையிடம் கொண்ட அன்பும், அவன் முடிந்திடுவானே என்ற துயரமும் உள்ளத்தை அலைத்தது. போர்க்களம் நோக்கிச் சென்றான்.

245. ஈசன் அருளால் தோன்றிய நூறாயிரம் வீரருக்கும், ஏனைய மைந்தர் எண்மருக்கும் தலைமைபெற்ற வீரவாகு, பெருந் தேர்மீது ஏறிப் போர் புரிய வந்தார்.

ஆதி தந்த அறுமுகத் தெம்பிரான்
பாதம் உன்னிப் பரவிக் கடிதுபோய்
மேத கும்கதிர் வெம்பகை தானையாம்
ஓதம் உட்கக் குனித்தனன் ஓர் சிலை. 246

நீரொடு கனலும் மாறாய்
நெடுஞ்சினம் திருகி நின்று
போரினை இழைப்ப தென்ன
இருவரும் பொருது நின்றார்
ஓரிறை அளவை தன்னில்
ஓராயிர நூறு கோடி
சாரிகை திரிந்த அம்மா
அனையவர் நடம்பொன் தேர்கள். 247

பொடியோங்கிய திறல்மொய்ம்புடைப்
புலவன்விடு சரத்தை
வடியோங்கிய கணைமாரியின்
அருக்கன்பகை மாற்றும்
கொடியோன் மகன் விடுவாளியைக்
குறைதை வெங்கணை மழையால்
நெடியோன்தனித் துணையானவன்
அறுத்தேயுடன் நீக்கும். 248

---

246. சிவகுமாரனாகிய முருகப் பெருமானது சேவடியைச் சிந்தித்து வணங்கினார். பின்னர் விரைந்து சென்று பானுகோபனது சேனைப் பெருங்கடல் நடுங்கத் தன் வில்லை வளைத்தார்.

247. பஞ்ச பூதங்களில் நீரும் நெருப்பும் ஒன்றோடொன்று மாறுபட்டுச் சிற்றமுற்றுப் போர் புரிந்தாற் போல வீரவாகுவும் பானுகோபனும் வெம்போர் நிகழ்த்தினர். ஒரு கணப் பொழுதில் இருவரும் ஏறியிருந்த தேர்கள் பல சாரிகை சுற்றின.

248. வீரவாகு விட்ட பாணங்களைப் பானுகோபன் அழித்தான்; பானுகோபன் விடுத்த அம்புகளை வீரவாகு சரமாரியால் ஒழித்தார்.

ஏற்று எதிர்ந்திடும் எல்லையின் இரவியம் பகைஞன்
காற்றெ னச்சென்று நேர்ந்தனன் இருவரும் கலந்து
சீற்ற நீர்மையால் வாளமர் உழந்தனர் செங்கண்
கூற்றும் அங்கியும் சமர்புரி கின்ற கோட் பென்ன. 249

அங்கவ் எல்லையில் வீரவா குப்பெயர் அறிஞன்
திங்கள் சூடிய உலகடும் தாதையிற் சிறித்
துங்கம் மக்கதன் வாளுரீஇக் கறங்கெனச் சுற்றி
எங்கண் ஏகுதிஎன்றுபோய் அவுணனை எதிர்ந்தான் 250

இன்ன தன்மையில் இருவரும் வாளமர் இயற்றி
மன்னு காலையில் சூர்மகன் விஞ்சையின் வலியால்
தன்னை நேரிலா இளையவன் தடக்கைவாள் அகற்றி
அன்னவன் திருத்தோள்மிசை எறிந்தனன் அன்றே. 251

மாற்றலன்கர வாளினால்
எறிதலும் வள்ளல்
ஆற்றல் மொய்ம்பிடைக் குருதியாறு
இழிதர அதுகண்டு
ஏற்றம் எய்திலன் சூர்மகன்
இவன் தனக்கு இளையோன்
தோற்றி டும்கொல்என் றிரங்கினர்
வானவர் துளங்கி. 252

---

249. அங்கிலையில் சங்கார மூர்த்தி போல் சீற்ற முற்ற வீரவாகு தன் வாட் படையை எடுத்துக் கறங்கு போற் சுழன்று பானுகோபனை எதிர்த்தார்.

250. பானுகோபனும் காற்றுப் போல் விரைந்து வந்து வாட் போர் தொடுத்தான். காலனும் கனலியும் கடும் போர் புரிந்தாற்போல இருவரும் வாட்போர் செய்தனர்.

251. அப்பொழுது பானுகோபன் தான் கற்ற வித்தையின் திறத்தால் வீரவாகுவின் வாட்படையை விலக்கி அவர் தோளில் வெட்டினான்.

252. வெட்டுண்ட தோளினின்றும் குருதி பொங்கி வடிந்தது. அது கண்டு மகிழ்ந்தான் பானுகோபன் வீரவாகு தோற்றிடுவாரோ என்று வானவர் அஞ்சித் தளர்ந்தார்கள்.

அன்ன காலையின் இளையவன்
அறுமுகத் தமலன்
பொன்னின் சேவடி புந்தியில்
உன்னியே புகழ்ந்து
மின்னு வானதன் வாட்படை
வீசியே விரைந்து
துன்ன லன்வலத் தோளினை
வலியொடு துணித்தான். 253

துணித்த காலையில் வலதுகை
தன்னொடு தொடர்ந்த
பணித் தனிச்சுடர் வாளினை
இடக்கையாற் பறித்து
மணித் தசும்புகொள் மொய்ம்புடை
அவுணர்கோன் மற்றும்
தணிப் பருஞ்சினம் தன்னொடு
முயன்றனன் சமரே. 254

தீய வன்தனி முயற்சியை
நோக்கியே திறலோன்
தூய வாள்கொடே அன்னவன்
இடக்கையைத் துணிப்ப

---

253. அவ்வேளையில் வீரவாகு அறுமுகன் திருவடியைக் கருத்திற் கொண்டு போற்றினர். வாட்படையை வீசினர். பானுகோபனது வலது தோளை வன்மையுடன் அறுத்தார்.

254. அப்போது அசுரன் அறுந்த வலக்கையில் இருந்த வாளை இடக்கையால் எடுத்தான். பின்னும் பெருஞ் சினமுற்று வாட்போர் புரிந்தான்.

255. மாற்றான் முயற்சியை கண்ட வீரவாகு அவன் இடக்கையையும் துணித்தார். அந்நிலையில் மாயப்படை

மாயை தொல்படை விடுத்திடு
வேன்என மதித்தான்
ஆய காலையில் அறிஞனும்
அவன்தலை அறுத்தான். 255

வாளில் அங்கவன் அடுதலும்
சென்னியும் வரைநேர்
தோளும் யாக்கையும் வீழ்ந்தன
சூரியன் பகைஞன்
நாள் உலந்தனன் அவனுயிர்
வெளவியே நடுவன்
ஆளி மொய்ம்பனை வழுத்தியே
தென்புலத் தடைந்தான். 256

சூரன் மாமகன் முடிந்ததும் முனிவரும் சுரரும்
ஆரும் நோக்கியே ஆடினர் பாடினர் ஆர்த்தார்
வீர வீரன்நீ யாமென இளவலை வியந்து
மாரியாமென அவன்மிசை பொழிந்தனர் மலர்கள். 257

சோதி நீடிய பாசறை புகுந்திடு தூயோன்
பூதர் தம்மொடும் துணைவர்கள் தம்மொடும் போந்து
காதல் ஆகியே அறுமுகத் தையனைக் கண்டு
பாதபங்கயம் தன்னிடைப்பன்முறைபணிந்தான். 258

---

தொடுக்க நினைத்தான் பானுகோபன். அவன் தலையை அறுத்துத் தள்ளினார் வீரவாகு.

256. அவன் தலையும், மலை போன்ற தோளும் உடலும் மண்மேல் விழுந்தன; பானுகோபனது வாழ்நாள் முடிந்தது; அவனுயிர் கவர்ந்த கூற்றுவன், வீரவாகுவின் திறமையைப் புகழ்ந்து தென்புலம் சேர்ந்தான்.

257. முனிவரும், தேவரும், பிறரும் ஆடினர்; பாடினர்; ஆர்த்தனர்; வீரருள் வீரன் நீயே என்று வீரவாகுவைப் புகழ்ந்தனர்; அவர் மீது மழைபோல் மலர்களைச் சொரிந்தனர்.

258. பூதர்களோடும் தம்பியரோடும் பாடி வீட்டை அடைந்தார்! வீரவாகு; காதலாகிக் கசிந்துருகிக் கந்த வேளின் கமல பாதம் பன்முறை பணிந்தார்.

மைந்தனோ என் தன்
மதகளிறே வல்வினையேன்
சிந்தையோ சிந்தை
தெவிட்டாத தெள்ளமுதோ
தந்தையோ தந்தைக்குத்
தந்தையிலான் கொன்றனனோ
எந்தையோ நின்னை
இதற்கோ வளர்த்தனனே. 259

நந்தா அவர் குலத்து
நாயகமே நண்ணினர்க்கோர்
சிந்தா மணியே
திருவேஎன் தெள்ளமுதே
எந்தாய் தனியே போய்
எங்கிருந்தாய் அங்கே யான்
வந்தாலும் உன் தன்
மதுரமொழி கேட்பேனே. 260

என்று இரங்கி இறைவன் வருந்துதலும்
அன்றான் உழையில் அவுணர் சிலர்ஓடித்
துன்றார் களத்தில் துணிவுற்ற சீர்மதலை
பொன்றார் உடலம் கொடுபுலம்பிப் போந்தனரால். 261

---

259. பானுகோபன் இறந்தான் என்று அறிந்த சூரன் அழுது புலம்பினான். "மைந்தா! மதகளிறே! தீவினையேன் உள்ளமே; உள்ளத்தில் அமைந்த தெள்ள முதே! என் அப்பனே! உன்னைத் தந்தைக்கு தந்தையிலான் கொன்றானோ? ஐயனே உன்னை இதற்கோ வளர்த்தேன்?

260. அசுரகுல நாயகமே! அடைந்தவரை ஆதரிக்கும் சிந்தாமணியே! என் செல்வமே! தெள்ளமுதே! நீ தனியே போய் எங்கிருந்தாய்? அங்கே நான் வந்தாலும் உன் அமுதமொழி கேட்பேனோ?

261. என்று சூரன் புலம்பி அழும்பொழுது, பானு கோபனது உடலை அசுரர்கள் அங்கே எடுத்துவந்தார்கள்.

அற்ற மைந்தன் சிரத்தை அங்கையால்
பற்றும் நல்லெழில் பார்த்திடும் கண்களில்
ஒற்றும் முத்தம் உதவும் உரனிலாப்
புற்ற ராவின் உயிர்க்கும் புரளுமால் 262

சிரத்தை மார்பினைச் செங்கையைத் தொன்மைபோல்
பொருத்தி நோக்கிப் புரளும் என் புந்தியை
வருத்தும் ஆகுலம் மற்றது கண்டு நீ
இருத்தி யோஉயி ரேஇன் னும் என்றிடும். 263

மன்னர் மன்னவன் மற்றிது பான்மையால்
இன்னல் எய்தி இரங்கலும் அச்செயல்
கன்னி மாநகர்க் காப்பினுள் வைகிய
அன்னை கேட்டனள் ஆகுலம் எய்தினாள். 264

இந்தி ரைக்கு நிகர்வரும் ஏந்திழை
அந்த மில்லதொர் ஆயிழை மாரொடு
முந்தி ஏகி முடிந்து துணிந்திடும்
மைந்தன் மீமிசை வீழ்ந்து மயங்கினாள். 265

---

262. (துண்டமுற்ற மைந்தனது உடலைக் கண்டு துடித்தான் சூரன்) அவன் தலையைக் கையிலெடுப்பான்; அதன் அழகைப் பார்ப்பான்; அத்தலையைக் கண்களில் ஒற்றுவான்; முத்தம் தருவான்; பெருமூச் செறிவான்; பூமியில் விழுந்து புரளுவான்.

263. அறுந்த தலையையும் தோளையும் உடம்பிலே பொருத்திப் பார்ப்பான். நிலத்தில் விழுந்து புரளுவான். என் துன்பத்தைக்கண்டும் உயிரே நீ இன்னும் இருக்கின்றயோ என்பான்.

264. இவ்வாறு மன்னர் மன்னன் துன்புற்று வருந்தும் செய்தியைக் கேட்டாள் பானுகோபன் தாயாகிய பதுமை; துன்பமுற்றாள்.

265. இந்திரை போன்ற அம்மாது சேடியர்க்கு முன்னே சென்று, வெட்டுண்டு கிடந்த மைந்தன்மீது விழுந்தாள்; மயங்கினாள்.

பாபத் தாலோ விண்ணவர் ஆனோர் பலர் கூறும்
சாபத் தாலோ யாரினும் மேலாம் தனிமூவர்
கோபத் தாலோ எவ்வகை யாலோ குறியேன் யான்
சோபத் தியால் வாடினன் நின்னைத் தோற்றேனே.

பொன்போல் மேனிக் கந்தனை
இவ்வூர் புகுவித்துக்
கொன்போர் மூட்டி மைந்தரை
எல்லாம் கொல்வித்துத்
துன்போ டிந்நாள் நீயும்
இறப்பச் சூழ்ந்தாரே
என்போல் ஆக வானவர்
மாதர் எல்லோரும். 267

கையா நிற்கும் தேவர் தமக்கு நனிதுன்பம்
செய்யா நிற்றல் நன்றல என்றேன் அதுதேராது
ஐயா நின்னைத் தோற்றனன் மன்னவன் அவனும் தான்
உய்வான் கொல்லோ தன்னுயிர் தானும் ஒழியாதே.

---

266. "என் மகனே! இது நான் செய்த பாவமோ? வானவர் விடுத்த சாபமோ? மூவர் கோபமோ? மற்று ஏதோ அறியேன்; ஐயா! நின்னை இழந்தேன்; துயரத்தால் வாடினேன்.

267. அந்தோ! வானவர் இந்நகரில் பொன்னார் மேனிக் கந்தனை வருவித்தார்; கடும் போர் மூட்டினார்; என் மைந்தரை யெல்லாம் கொல்வித்தார்; இன்று உன்னையும் இறப்பித்தாரே; இக்கேடு சூழ்ந்த வானவரின் மாதர் எல்லாம் என்னைப்போல் ஆகுக.

268. ஐயனே! வானவர்க்கு மேன்மேலும் துன்பம் செய்தல் நன்றன்று என்று உன் தந்தையிடம் அன்றே சொன்னேன்; அவர் உணர்ந்தாரில்லை. ஐயோ! இன்று உன்னை இழந்தேனே! இனி மன்னன் தான் உயிர் வைத்திருப்பானோ? என்று அழுது சோர்ந்தாள்.

அன்னது காலை தன்னில்
அவுணர்கோன் இரக்கம் நீங்கிப்
பன்னரும் சிறப்பின் மிக்க
பதுமையே முதலோர் தம்மைத்
தொன்னிலை இருக்கை உய்த்துத்
துண்ணெனச் சீற்றம் கொண்டு
தன்னுழைத் தொழுது நின்ற
தானவர்க் கிதனைச் சொல்வான். 269

மாற்றலர் தொகையை எல்லாம்
வல்லையின் இன்றே செற்றுச்
சீற்றமாய்க் குருதி வீட்டித்
திமகம் ஒன்றை ஆற்றி
ஈற்றுறு மைந்தன் தன்னை
எழுப்புவன் இந்த மெய்யை
வீற்றொரு சாரின் இட்டு
விடாதுபோற் றிடுதிர் என்றான். 270

அரசியல் புரிந்திடும் அவையை நண்ணிய
முரனுறு சிங்கமா முகத்தன் முன்னவன்
திருவடி மலர்களில் சென்னி தீண்டுறப்
பரிவொடு வணங்கினன் தொழுத பாணியான். 271

---

269. அப்பொழுது மன்னன் சோகம் கோபமாக மாறிற்று. பதுமை முதலிய மாதரை மாளிகையின் உள்ளே அனுப்பினான்; அருகே நின்ற அசுரரை நோக்கி,

270. "இன்றே மாற்றார் சேனையை அறுப்பேன்; அவர் குருதியைக் கொண்டு கனல் வேள்வி செய்வேன்; இறந்துபட்ட மகனை எழுப்புவேன். பானுகோபன் உடலைத் தனியிடத்தில் வைத்துப் பாதுகாத்திடுக' எனப் பணித்தான்.

271. சூரன் தம்பியாகிய சிங்கமுகாசுரன் அத்தாணி மண்டபத்தை அடைந்தான். தமையனது பாதம் பணிந்து வணங்கினான்.

வணங்கிய தம்பியை மலர்க்கை தொட்டெடா
இணங்கிய மார்புறத் திறுகப் புல்லலும்
நிணங்கவர் வேலினாய் நினது செம்முகம்
உணங்கிய துற்றதென் உரைத்தியால் என்றான். 272

அன்றுநீ போந்தபின் அயில்கொள் வேலினால்
குன்றினை எறிந்திடு குமரன் என்பவன்
தன்துணைச் சேனையும் தானும் இந்நகர்
சென்றனன் பாசறை சேர்ந்து வைகினான். 273

மற்றவன் சேனைகள் மலைய மைந்தர்கள்
இற்றனர் அமைச்சனும் இறந்து போயினான்
அற்றன தானையும் ஆடகப் பெயர்
உற்றவன் இரிந்தனன் உததி ஓடினான். 274

பொங்குளை அரிமுக புகுதி இன்னதால்
சங்கையில் படையொடு சமரின் ஏகியே
அங்கவன் வலியினை அடர்த்து மீளுதி
இங்குனை விளித்தனன் இதனுக்கா என்றான். 275

---

272. அடி பணிந்த தம்பியைக் கைகளால் எடுத்து மார்போடணைத்தான். அப்போது தமையனை நோக்கி 'ஐயனே! உன் முகம் வாடியிருக்கின்றதே! என்ன நிகழ்ந்தது' என்று வினவினான்.

273. அதுகேட்ட சூரன் கூறலுற்றான். "தம்பி! அன்று நீ சென்றபின், குன்றம் எறிந்த குமரன் என்பவன் படையோடு இந்நகரில் வந்து பாசறையில் தங்கினான்.

274. அவன் சேனைகள் நிகழ்த்திய போரில் என் பிள்ளைகள் இறந்தனர்; அமைச்சனும் அழிந்தான்; படைகளும் பாழ்பட்டன. இரணியன் ஓடிப்போய்க் கடலில் ஒளித்தான்.

275. அரிமுக வீரா! நிகழ்ந்தது இதுவே; இன்று நீ படை யெடுத்துச் சென்று அந்தக் குமரனை வென்று வரல் வேண்டும். அதற்காகவே உன்னை அழைத்தேன்" என்றான்.

எஞ்சலிற் சூரன்மற் றிதனைச் செப்பலும்
வெஞ்சின அரிமுக வீரன் தேர்வுறு
நெஞ்சினில் ஆகுலம் நிகழ நன்னவன்
செஞ்சரண் வீழ்ந்து நின்று இதனைச் செப்புவான். 276

மூலமும் முடிவுமில் லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவ தோர்ந்திலை
ஆலம தாயதே ஐய என்மொழி
மேலையின் விதியை யார் வெல்லும் நீரினர். 277

கந்தனும் ஒருவனைக் கடக்கப் பெற்றிடின்
வந்துனைக் காண்பனால் மற்று இல்லையேல்
அந்தம தடைவரால் ஆரும் ஐய நீ
புந்தியில் நினைந்தன புரிதியால் என்றான். 278

என்றுகை தொழுதுபின் இறையும் அவ்விடை
நின்றிலன் விடைகொடு நிருதன் ஏகியே
துன்றிய தானைகள் சூழ மற்றவன்
ஒன்றுதன் மந்திரத் துறையுள் எய்தினன். 279

---

276. சூரன் சொல்லிய செய்தியைக் கேட்ட சிங்கன் மீண்டும் அவனடி பணிந்து எழுந்து நின்று,

277. "ஐயனே! ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைப் பாலன் என்று எண்ணினாய்; வருவது அறிகிலாய்; முன்னமே நான் சொல்லிய நன் மொழியும் நஞ்சாயிற்றே; ஊழ்வினையை யாரால் வெல்ல இயலும்?

278. இன்று உன் ஆணைப்படி போர்க்களம் செல்வேன்; கந்தன் என்பவனை வெல்லப் பெறுவேனாகில், மீண்டு வந்து காண்பேன். நான் வெல்லா தொழியின் எல்லாரும் இறந்து படுவர். உன் மனத்தில் தோன்றியவாறு செய்க"

279. என்று கைகூப்பி வணங்கினான். பின் நொடிப் பொழுதும் அங்கு நில்லாது விடைகொண்டு வெளியே சென்றான். சேனைத் தலைவர்களோடு தன் மாளிகையை அடைந்தான்.

நந்தா ஆற்றல் சிங்க முகத்தோன் அவன் நம்முன்
வந்தான் யாமே மாற்றதும் அன்னான் வலியென்னாக்
கொந்தார் தாருச் சூழலும் வெற்பும் கொண்டேகி
முந்தா நின்ற பூதர்கள் வெம்போர் முயல்கின்றார். 280

சிங்கம் கொண்ட மாமுகன் வீசும் செறிவாலே
துங்கம் கொண்டபார் முதல் விண்ணின் துணையும்தான்
எங்கும் பூதம் ஆயின அம்மா இதுகொண்டோ
அங்கங் கெல்லாம் பூதம தென்றார் அறிவுள்ளார். 281

ஆளரி யனைய வீரன்
அதுகண்டு பூதர் தம்முன்
கோளரி முகத்து வெய்யோன்
கொன்றதோர் பாதி யுண்டால்
தாளுடை வில்லி னாரும்
சமரித் தழிந்தார் இந்த
நாளினில் முடியும் போலும்
நம்பெரும் படையும் என்றான். 282

---

280. பெருஞ் சேனையோடு போர்க்களம் புகுந்த சிங்க முகனைக் கண்ட பூதர்கள் கிளர்ந்து எழுந்தார்கள். இவனை நாமே வெல்வோம் என்று மரங்களையும் மலைகளையும் வீசி யெறிந்து போர் புரிந்தார்கள்.

281. அகப்பட்ட பூதரை அடுக்கடுக்காக எடுத்து எறிந்தான் சிங்கமுகன். மண்ணும் விண்ணும் மற்றைய திசைகளும் பூதமயமாயின. ஐம்பூதங்கள் என்று இது பற்றித்தான் அறிந்தோர் பெயரிட்டனரோ என்று அனைவரும் வியந்தனர்.

282. நரசிங்க மூர்த்தி போன்ற வீரவாகு அதனைக் கண்டார்; "பூதப்படையில் சிங்கமுகன் பாதியைக் கொன்று விட்டானே; வில்லாளரும் போரில் அழிந்தார். நமது பெரிய சேனை முற்றும் இன்று அழிந்துவிடுமோ" என்று எண்ணினார்.

வாங்கிய சிலையிற் பூட்டி
வடுக்கணை அநந்த கோடி
தூங்கலின் மழைகான் றென்ன
உலப்புறுன் சொரிந்து நிற்ப
ஆங்கெதிர் அடர்த்துப் போர்செய்
அவுணர்தம் தலைகள் பாறத்
தாங்கிய படைகள் சிந்தித்
தரைமிசைத் துணிந்து வீழ்ந்தார். 283

இவ்வகை அவுணர் தானை
இறந்திட வீரவாகு
அவ்வயின் நின்று சென்றங்
கடுதலும் அதனைக் கண்டார்
தெவ்வரை முருக்கும் கைவேல்
சீயமா முகத்தன் மைந்தர்
ஐவரை வெல்லும் ஆற்றல்
ஐம்பதிற் றிருவர் என்பார். 284

வளைந்தனர் வீரன் தோளில்
மார்பினில் கரத்தில் மொய்ம்பில்
களந்தனில் சென்னி தன்னில்
கருதினர் இலக்கம் நாடிக்
கிளர்ந்திடு காந்த கத்தால்
கிட்டினர் எறிந்த லோடும்
உளந்தளர் வில்லோன் மேனிக்கு
உற்றில சிறிதும் ஊறு. 285

283 வில்லை வளைத்துக் கோடி கோடியாக வடிக்கணை விடுத்தார். எதிரே நின்ற அசுரர்கள் தலையுடைந்து, படைசிதறி, அறுபட்டுத் தரையில் விழுந்தார்.

284. இவ்வண்ணம் அசுர சேனை அடிபட்டு அழிந்ததைக் கண்டனர் சிங்கமுகன் மைந்தராகிய நூற்றுவர்.

285. வீரவாகுவை வளைந்தனர்; அவர் தோளையும் மார்பையும், கரத்தையும் கழுத்தையும் இலக்காகக் கொண்டு வாளால் எறிந்தனர். ஆயினும் அவர் உடம்பிற் சிறிதும் வடுப்படவில்லை.

ஊறிலாத் தன்மை நோக்கி
உவனையாம் பற்றி மெல்லக்
கோறலே கருமம் என்னக்
குழுவொடும் அவனைப் புல்லச்
சீறினன் தன்வாள் ஓச்சிச்
சிறிதும் மெய் தெரியா வண்ணம்
நூறினன் கொல்லோ என்ன
நூற்றுவர் தமையும் அட்டான். 286

அட்டிடு கின்ற வீரன்
அமரர்கள் வழுத்த மீண்டு
தட்டுடை நெடுந்தேர் புக்கான்
தன்மனக் கினிய மைந்தர்
பட்டிடு தன்மை நோக்கிப்
படுறும் அவுணர் கோமான்
மட்டறு துயரின் மூழ்கி
மானத்தால் இரக்கம் உற்றான். 287

## சிங்கமுகன் சீறி மாயப் பாசம் வீசுதல்

பொன்றினர் தம்மை யுன்னிப்
பொருமியே புன்கண் எய்தி
நின்றிடின் ஆவ துண்டோ
நேரலர் தொகுதி யெல்லாம்

---

286. அது கண்ட நூற்றுவரும் வீரவாகுவை வளைத்துப் பிடித்தனர்; பற்றிய பகைவரைச் சீறினார் வீரன்; வாட்படையை வீசினார்; உருத் தெரியாதபடி அவரை அறுத்தெறிந்தார்.

287. வாட்போர் முடித்த வீரவாகு தமது தேர்மேல் ஏறினார். மைந்தர் நூற்றுவரும் ஒருங்கே மடிந்ததறிந்து சிங்க முகன் மானமுற்று வருந்தினான்.

288. "இறந்தவரை எண்ணி ஏங்கி நின்று வருந்துவதால் பயனுண்டோ? மாற்றார் கூட்டத்தை நொடிப்

கொன்றொரு கணத்தின் முன்னர்க்
குழுவொடும் வாரி வாரித்
தின்றுதேக் கிட்டா லன்றித்
தீருமோ எனது சீற்றம். 288

மேவலர் ஆகும் இன்னோர்
குழுவினை விரைவின் அட்டுத்
தாவறு சுடர்வேல் கொண்ட
காவலன் தனையும் வென்று
தேவர்கள் எனப்பேர் பெற்றோர்
யாரையும் இன்றே செற்று
மூவுல கினையும் யானே
முடிக்குவன் விரைவின் என்றான். 289

தீயா ருக்கோர் எல்லைய
தானான் திறல் மேலான்
தூயா ருக்கே இன்னல்
புரிந்தான் தொலைகில்லான்
தாயாய் முந்தே தம்மை
அளித்தாள் தருகின்ற
மாயா பாசம் தன்னை
எடுத்தான் மறமிக்கான். 290

---

பொழுதில் கொன்று, அவரை வாரித் வாரித் தின்றாலன்றித் தீருமோ எனது சீற்றம்?

289. மாற்றார் படையை அழித்தபின் அவர் தலைவனாகிய வேலவனையும் வெல்வேன்; வானவர் என்று பேர் பெற்றோரையும் வதைப்பேன்; விரைவில் மூன்றுலகத்தையும் யானே முடிப்பன்" என்று வஞ்சினம் கூறினான்.

290. தாயாகிய மாயவள் தந்த மாயா பாசத்தை எடுத்தான்.

ஒட்டிப் போர்செய் மாற்றலர்
தம்மை ஒரு பாலால்
கட்டிக் கொள்ளா ஆருயிர்
உண்டு கடிதேகிக்
கிட்டித் தொல்லை ஞாயிறு
தோன்றும் கிரி உய்த்து
விட்டுப் பேரா தாண்டுறை
கென்று வீசுற்றான். 291

பல்லோர் ஆகிப் போர்புரி
பூதப் படையோரும்
வில்லோர் ஆகும் எண்மரும்
ஏனை விறலோரும்
தொல்லோர் கூறும் ஆடல்கொள்
மொய்ம்பின் துணையோனும்
எல்லோர் தாமும் வீக்குறு
பாசத் திடையுற்றார். 292

தொன்னிலை உணர்வு மாழ்கித்
தொல்வலி சிந்திச் சோரும்
அன்னவர் தொகையை எல்லாம்
அந்தர நெறிக்கொண் டேகி

291. அதனை நோக்கி "சேர்ந்து போர்செய்யும் மாற்றார் அனைவரையும், ஒரு வழியாகக் கட்டிப் பிடித்து, உயிரை அழித்து, உதயகிரியில் உய்த்து, அவரை விட்டுப் பிரியாமல் அங்கேயே காத்துக் கொண்டிரு" என்று சொல்லி வீசினான்.

292. பல்லாயிரக் கணக்கான பூத வீரரும், வல்வீரர் எண்மரும், மற்றைய தலைவரும், வல்லாளனாகிய வீரவாகுவும் அப் பாசத்தில் அகப்பட்டார்கள்.

293. இயற்கை யறிவை இழந்து, ஆண்மை யழிந்து, சோர்ந்துகிடந்த வீரர் அனைவரையும் ஆகாய வழியே கொண்டு சென்று மின்னலைப் போல் கடலைக் கடந்து

மின்னென அளக்கர் வாவி
மேருமால் வரைபோல் நின்ற
பொன்னவிர் உதயம் என்னும்
பொருப்பிடைப் புகுந்த தன்றே. 293

முருகவேளும் சிங்கமுகனும்

மூவர்கள் முதல்வன் வந்தான்
முக்கணன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான்
வேற்படை வீரன் வந்தான்
ஏவரும் தெரிதல் தேற்று
திருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான்
என்றன சின்னம் எல்லாம். 294

கண்டனன் அனைய செய்கை
கனல்பொழி பரிதிக் கண்ணன்
மண்டமர் புரியா நிற்கும்
மாற்றலர் தம்மை வாரி
உண்டனன் எனது சீற்றம்
ஒழிக்குவன் ஒல்லை என்று
அண்டமும் திசையும் தானே
ஆகவோர் வடிவம் கொண்டான். 295

---

மேருமலை போல் நின்ற உதயகிரியிற் புகுந்தது அப்படைக் கலம்.

294. (இதனை யறிந்த முருகப்பெருமான் போர்க் கோலம் கொண்டு புறப்பட்டார்) மூவர்க்கும் தலைவனாய முதல்வன் வந்தான்; முக்கட் பெருமான் மைந்தனாய முருகன் வந்தான்; மாற்றாரைக் கொல்லும் மடங்கல் வந்தான்; வேற் படையுடைய வீரன் வந்தான்; ஏவரும் அறிய வொண்ணா இறைவன் வந்தான்; தேவ தேவனாய செவ் வேள் வந்தான் என்று ஒலித்தன சின்னம் எல்லாம்.

295. அப்போது தீப்பொறி சிந்தும் கண்களோடு நின்ற சிங்க முகன் "மாற்றாரை இன்றே கொன்று சீற்றம் தீர்வேன்" என்று உள்ளத்தில் உறுதிகொண்டு, அண்ட

கடம்பர் கண்ணி யாய்கேள்
கடவுள்வேல் கொண்ட வாற்றல்
திடம்படு நினது வன்மை
யாவையும் தெரிதந் துள்ளேன்
தடம்படு குவவுத் திண்டோள்
தாரகன் போல ஞாட்பின்
மடம்படு கின்ற தில்லை
வல்லைபோர் புரிதி மாதோ. 296

பொருதிறல் வயவர் யாரும்
பூதரில் பலரும் மாய்ந்தே
எரிகதிர் உதயம் புக்கார்
ஏனையோர் நீயும் காண
விரைவில்என் அகடு சேர்ந்து
விளிந்தனர் தமியன் நின்றாய்
செருவினை இழைத்தும் என்னும்
ஊக்கமே சீரி தம்மா. 297

என்றசொல் இறுக் தம் முன்னம்
ஈராறுதோள் உடைய வள்ளல்
நன்றிவன் கொண்ட தென்று
நகை செய்து சிலையிற் பூட்டி

---

மும் அகில திக்கும் தானேயாக ஒரு மாயா வடிவம் பூண்டு நின்றான்.

296. முன்னே நின்ற முருகப் பெருமானை நோக்கிக் "கடம்பனே: இறைவனிடம் நீ பெற்றுள்ள திடம்படு வேலின் திறமையெல்லாம் அறிவேன்; தாரகனைப் போல் போரில் நான் பேதையனல்லேன்; விரைந்து போர் புரிந்து பார்!

297. வீரராகிய பூதர் எல்லாம் உயிர் இழந்து உதய கிரி யடைந்தார். மற்றையோர் உன் கண்ணெதிரே என் வயிற்றிற் புகுந்து மறைந்தார். தனியனாய் நீ ஒருவன் நின்றாய்; இந்நிலையில் போர் கருதிவந்த உன் ஊக்கம் போற்றுதற் குரியதே!

298. என்று சொல்லி முடிக்கும் முன்னே, அறு முகப் பெருமான் குறுநகை செய்து, ஒரு அம்பை வில்லிற்

ஒன்றொரு வயிர வாளி
ஒல்லெனத் துரப்பத் தீயோன்
பொன்திகழ் மருமம் புக்குப்
புறத்துரீஇப் போய தன்றே. 298

அன்னதொரு காலை
அறுமா முகக்கடவுள்
தன்னிகர் இலாத
தனக்கிளையோர் தங்களையும்
துன்னலுறு பூதத்
தொகையோர்கள் யாவரையும்
முன்னி அவர் தம்பால்
ஒருகோல் தொடுத்தனனே. 299

உந்தும் பகழி
உததி பலகடந்து
முந்தும் உதிருதயம்
மூன்றுற்று மொய்ம்பர்தமைப்
பந்தம் கொடுசூழ்ந்த
பாசவலை சிந்திடலும்
கந்தன் தனதருளால்
கண்துயில்வார் போல்எழுந்தார். 300

---

பூட்டி விடுத்தார். அது சிங்கன் மார்பிற் பட்டு ஊடுருவிச் சென்றது.

299. அந்நிலையில் அறுமுகப் பெருமான் வீரவாகு முதலிய தம்பியரையும், பூதகணங்களையும் வருவிக்கத் திருவுளங் கொண்டு அவர்கள் இருந்த இடத்திற்கு ஓர் அம்பினை ஏவினார்.

300. அது, பல கடல்களையும் கடந்து உதயகிரியை அடைந்தது. வீரரைப் பிணித்திருந்த மாயாபாசத்தைத் துணித்தது; கந்தன் திருவருளால் எல்லோரும் மயக்கம் தீர்ந்து எழுந்தார்கள்.

ஆங்கது காலத்தில்
அறுமுகவேள் உய்த்தகணை
பூங்கமலத் தோன்உதவு
புட்பகத்தின் மாட்சியதாய்த்
தீங்கில்இள மைந்தர்தமைச்
சேனையொடு முகந்து
தாங்கி விசும்பின்
தலைக்கொண்டு சென்றதுவே. 301

என்று திகழ் வெற்பை
இகந்தேழ் கடல் நீங்கிச்
சென்று கடிது
செருநிலத்தில் சேனையொடு
நின்ற குமரன்
நெடுந்தாள் முனம் உய்த்துத்
துன்று கணைபொதிந்த
தூணியிடைப் புக்கதுவே. 302

அந்த அமையத்தில்
அடல்வீர மொய்ம்பினனும்
இந்திரனும் போற்றும்
இலக்கருடன் எண்மர்களும்
அந்த மிலாப் பூத
அனிகங்களும் அளியால்
கந்தன் இணையடிகள்
கைதொழுது தாழ்ந்தனரே. 303

---

301. அப்போது அப்படைக்கலம் பிரமன் தந்த புட்பக விமானம் போல் அனைவரையும் தாங்கிக்கொண்டு, ஆகாய வழியே எழுந்து சென்றது.

302. உதயகிரியை விட்டகன்று, எழுகடலும் கடந்து, போர்க்களத்தில் நின்ற முருகப்பெருமானது திருவடியின் முன்னே வீரரை விடுத்து, அவர் தூணியில் முன்போற் சேர்ந்தது.

303. அப்போது வீரவாகுவும், நூறாயிரவரும், எட்டு

நின்ற தீயவன் தானுறும்
அயர்ச்சியை நீங்கிச்
சென்ற தன்படை யாவையும்
கண்டிலன் சிறுவன்
கொன்று வீட்டினன் என்பது
தெரிந்துளம் கொதியா
ஒன்று போல ஓர் ஆயிரம்
சிலைகள் கொண்டுற்றான். 304

ஆர்த்திடு காலைச் செவ்வேள்
ஆயிரத் திரட்டி கொண்ட
கூர்த்திடு பகழி தூண்டிக்
குன்றங்கள் செற்று வெய்யோன்
தார்த்தட மொய்ம்பு முற்றும்
தள்ளினன் தள்ளு முன்னர்ப்
பேர்த்துமவ் வெழுந்த அம்மா
தவத்தினும் பெரிதொன் றுண்டோ. 305

நாற்றிசை முகத்தி னானும்
நாகரும் பிறரும் உட்கச்
சீற்றம துளன்போல் ஐயன்
சிறிதவண் உரப்ப லோடும்

---

வீரரும், அழிவற்ற பூதப்படைகளும், அன்புகொண்டு கந்தவேள் திருவடியில் விழுந்து வணங்கினார்கள்.

304. அந்த வேளையில் கந்தவேளின் அம்பினால் அடியுண்டு விழுந்த சிங்கமுகன் மயக்கம் தெளிந்து எழுந்தான். தன் சேனைகளில் ஒன்றையும் கண்டானில்லை; கந்தனே அவற்றைக் கொன்று ஒழித்தான் என்று உணர்ந்தான்; உள்ளம் கொதித்தான்; ஆயிரம் வில்லெடுத்துப் போர் புரிய நின்றான்;

305. அட்டகாசம் செய்தான். அப்போது முருகவேள் ஈராயிரம் அம்புகளை விட்டு அவன் எறிந்த மலைகளைத் தகர்த்தார்; அகன்ற தோள்களை அறுத்தார். ஆயினும் அவை விழுவதற்கு முன்னே பின்னும் முளைத்து எழுவன ஆயின. தவத்தினும் சிறந்தது இவ்வுலகில் உண்டோ?

மாற்றலன் ஆகி நின்ற
மடங்கல்மா முகத்தன் தன்பால்
தோற்றிடு சிரமும் தோளும்
துளங்கிமீண் டொளித்த அன்றே. 306

குன்றினை எறிந்த வைவேல்
குமரவேள் கணையால் இற்ற
தன்தலை பாணி தோன்றாத்
தன்மையை அவுணன் பாரா
ஒன்றறு மூன்று பன்னாள்
உணர்ந்திடு விஞ்சை முற்றும்
மன்றிடை அயர்த்தோன் என்ன
மானமுற் றழுங்கி நின்றான். 307

வேலினால் எறியு மாறும்
வெஞ்சிலை வளைய வாங்கிக்
கோலினால் விடுத்த தொன்றைக்
குறைத்திடு மாறும் அல்லால்
பாலநீ படைகள் வேறு
பயின்றதொன் றிலைகொல் என்று
மூலகா ரணமாய் நின்ற
முதல்வன்மேற் கதையைத் தொட்டான்.

---

306. அங்கிலையில் நான்கு முகங்களையுடைய பிரமனும், தேவரும், பிறரும் அஞ்சி நடுங்க அறுமுகப் பெருமான் சற்றே உங்காரம் செய்தார். சிங்கமுகனிடம் தோன்றிய தலைகளும் தோள்களும் நடுங்கி ஒளித்தன.

307. முருகன் அம்பால் அறுபட்ட தலையும் கையும் முன்போல் முளையாத தன்மையைக் கண்டான் சிங்கமுகன்; பலநாள் ஓதியுணர்ந்த நூல்களையெல்லாம் பேசும் மன்றத்திலே மறந்தவனைப்போல மானமுற்று நின்றான்.

308. அப்போது முருகப் பெருமானை நோக்கி, "பாலனே! வேல் எறியவும், வில் வளைக்கவும்தான் பயின்றாயோ? என்று ஏளனம் பேசி ஒரு தண்டாயுதத்தை வீசியெறிந்தான்.

## சிங்கமுகன் இறத்தல்

வெஞ்சின அவுணன் சொற்ற
    தன்மையும் விடுத்த தண்டும்
செஞ்சுடர் மேனி வள்ளல்
    சிந்தையின் மதித்து நோக்கிக்
கஞ்சம தனைய ஓர்கைக்
    காமரு குலிசம் தன்னை
வஞ்சகன் உயிருண்டு ஒல்லை
    வருகென விடுத்தான் மன்னோ. 309

விடுத்திடு குலிசம் ஏகி
    விரைந்தெதிர் தண்டம் தன்னைப்
பொடித்தது போலும் என்னப்
    பூழி செய் தடுக்கல் செல்லும்
இடித்தொகை யென்ன மார்பத்
    தெய்தியே அவுணன் ஆவி
குடித்தது புறத்துச் செந்நீர்
    கொப்புளித் தேகிற் றன்றே. 310

அங்கப் பொழுதில்
    அ[illegible]ற்குலிசம் வான்போகிக்
கங்கைப் புனலாழ்ந்து
    காமருபூந் தாதாடிச்

---

309. சிங்கன் பேசிய ஏளனப் பேச்சையும் விடுத்த தண்டப் படையையும் சற்றே கருதினார் முருகன். அவ் வஞ்சகன் உயிரைக் கவர்ந்து வருமாறு தன் வச்சிரப் படையை விடுத்தார்.

310. அப்படை விரைந்து எழுந்தது; எதிரே வந்த தண்டப்படையை ஒடித்துப் பொடித்தது: மலையின்மேற் பாயும் இடிபோல், சிங்கன் மார்பைத் தாக்கிப் பிளந்தது; அவனுயிரைப் போக்கித் தானும் போயிற்று.

311. கங்கை யாற்றிலே சென்று கறைபோகப் படிந்து நீராடிற்று: கற்பகச் சோலையிற் பொருந்திய மணத்திலே தோய்ந்தது; தமிழ்ச் சங்கத்தின் தலைமைப்

சங்கத் தவர்க்குள்
தலையாம் தமிழ்ப் புலவன்
செங்கைக்குள் வந்து
சிறப்புற் றிருந்துள தால். 311

## சூரன் புலம்பல்

மங்குல் எனவீழ்ந்து
மறிந்து நிலமிசையே
அங்கை புடைத்திட்டு
அலமந்து தொல் வலியும்
துங்க விறலும்
நலனும் தொலை வெய்தப்
பொங்கு துயர்க் கடலின்
மூழ்கிப் புலம்புறுவான். 312

உண்டு போர் என்னின்
உளம் களிக்கும் உன்னுயிரைக்
கொண்டு போனன் இன்று
கூற்றன் என வேகேட்கில்
தண்டுழாய் மாலும்
சதுர் முகனும் இந்திரனும்
பண்டுபோல் தத்தம்
பதியாளப் போகரோ. 313

---

புலவனாகிய கந்தப்பெருமான் கையில் வந்து சிறப்புடன் அமர்ந்தது.

312. (சிங்கமுகன் இறந்த செய்தியை அறிந்த நிலையில்) சூரன் கரியமேகம்போல் தரையிடை வீழ்ந்தான்; புரண்டான்; கையொடு கை யடித்தான்; மயங்கினான். பண்டை வண்மையும் வீரமும் மேன்மையும் இழந்து, பொங்கிய துயர்க்கடலில் மூழ்கிப் புலம்பினான்.

313. "ஐயோ! உலகத்தில் போர் உண்டு என்றால் உள்ளம் களிப்பாயே! உன்னுயிரையும் கொண்டானே கூற்றுவன்! நீ இறந்தாய் என்று அறிந்தால் மாயவனும் பிரமனும் இந்திரனும் முன்னைப் பெருமையை மீண்டும் அடையாரோ?

பொன்னை நிலந்தன்னைப்
புதல்வர்களை மங்கையரை
பின்னை யுளபொருளை
எல்லாம் பெறலாகும்
என்னை யுடைய
இளையோனே இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவ
துண்டோ உரையாயோ. 314

உற்றதுணை நீ என்
உயிர்நீ உணர்ச்சியும் நீ
சுற்றமும்நீ தாதையும் நீ
என் இளைய தோன்றலும் நீ
நற்றவமும் நீயென்று
நான்நினைத்தேன் நீ அதனைச்
சற்றும்நினை யாமல்
தனித்திருக்கக் கற்றாயோ. 315

என்னத் தனதண்டம்
எங்கும் செவிடுபடத்
தன்னத் தனியோன்
அரற்றும்ஒலி தாம்கேளா

---

314. அந்தோ! பொன்னைப் பெறலாம்; பூமியைப் பெறலாம்; மாதரைப் பெறலாம்; அருமைத் தம்பி! இப் பிறப்பில் இனி உன்னைப் பெறுவேனோ?

315. அப்பா! துணைவா! என் உயிர் நீயே; உணர்ச்சியும் நீயே; சுற்றமும் நீயே; பெற்ற தந்தையும் நீயே; தம்பியும் நீயே; தவமும் நீயே; என்று நினைத்திருந்தேனே! நீ சற்றும் நினையாமல் என்னைக் கைவிட்டாயே! தனித்திருக்கக் கற்றாயே!

316. என்று தன்னந் தனியனாய்ச் சூரன் அழுது அரற்றிய பேரோசை அவன் ஆண்ட அண்டமெங்கும்

நன்னத் தவனும்
நளினத் தினில்உதித்த
அன்னத் தவனும்
மகத்தவனும் ஆர்த்தனரே. 316

## சூரன் அசுரப்படை திரட்டுதல்

கொற்ற வேற்படை பரித்திடும்
ஆயிர கோடி
ஒற்றர் தங்களை நோக்கியே
சூரனும் உரவோன்
மற்றென் ஆட்சியாம் அண்டங்கள்
எங்கணும் வைகிச்
சுற்று தானையைத் தம்மினே
கடிதெனச் சொன்னான். 317

அந்தமி லாத அண்டம்
ஆயிரத் தெட்டுத் தன்னில்
வந்திடு தானை யோடும்
மாபெரும் சூர பன்மன்
உந்திய தேரின் மேலோன்
உறுசமர் புரிய வந்தான்
முந்திய தூசி முந்தம்
பாசறை மொய்த்த தென்றார். 318

---

செவிடுபட அதிர்ந்தது; அவ்வோசை கேட்டு மாலும், பிரமனும இந்திரனும மனமகிழ்ந்து ஆரவாரித்தனர்.

317. அப்போது சூரன் கோடி கோடியாய் வேற்படை தாங்கி நின்ற ஒற்றரை நோக்கி "என் ஆட்சியில் உள்ள அண்டங்களிற் சென்று அங்கு சுற்றிக்கொண்டிருக்கும் சேனைகளை யெல்லாம அழைத்து வருக" என்றான்.

318. அண்டங்கள் ஆயிரத் தெட்டினின்றும் வந்த பெருஞ் சேனையோடு சூரன் போர்புரிய வந்தான் என்றும், அவனது முன்னணிப் படை முருகவேள் இருந்த பாசறையைச் சூழ்ந்ததென்றும் (திருமால முதலிய தலைவர்கள்) தெரிவித்தார்கள்.

வரத்தினில் பெரியர் மாய
வன்மையில் பெரியர் மொய்ம்பின்
உரத்தினில் பெரியர் வெம்போர்
ஊக்கத்தில் பெரியர் எண்ணில்
சிரத்தினில் பெரியர் சீற்றச்
செய்கையில் பெரியர் தாங்கும்
கரத்தினில் பெரியர் யாரும்
காலனில் பெரியர் அம்மா. 319

அண்டர்கள் முதல்வன் தானும்
அமரரும் அகிலம் எங்கும்
தண்டுதல் இன்றிச் சூழும்
தானவர் அனிகம் எல்லாம்
கண்டனர் துளங்கி அஞ்சிக்
கவன்றனர் அவருள் காரி
வண்டுளர் அலங்கற் சென்னி
வானவர்க் கிணைய சொல்வான். 320

## இந்திரன் அஞ்சுதல்: திருமால் தேற்றுதல்

அடுதிறல் வலிபெற் றுள்ள
அவுணராம் பாறைட் கங்குல்
விடிவதும் அமரர் தங்கள்
வெஞ்சிறை வீடு மாறும்

---

319. வந்த அசுரர் வரத்திற் பெரியர்; மாயத் திறத்திற் பெரியர்; உரத்திற் பெரியர்; ஊக்கத்திற் பெரியர்; சிரத்திற் பெரியர்; சீற்றத்திற் பெரியர்; கரத்திற் பெரியர்; காலனைவிடக் கொடியர்.

320. இத்தகைய சேனைகளைக் கண்டதும் இந்திரனும் வானவரும் அஞ்சி நடுங்கிக் கவலை கொண்டார்கள்; இந்திரன் துளப மாலை யணிந்த திருமாலை நோக்கி,

321. 'முதல்வனே! வன்மையும் கொடுமையும் வாய்ந்த அசுரராகிய இருள் நீங்கி ஒளி வருவதில்லையோ? வானவர் கடுஞ்சிறையினின்றும் விடுபடு மாறில்லையோ?

நெடியதொல் வெறுக்கை தன்னை
நீங்கிய நமது துன்பம்
முடிவதும் இல்லை சொல்லோ
மொழிந்தருள் முதல்வ என்றான். 321

இந்திரன் இனைய தன்மை
இசைத்தலும் இலங்கை காத்த
ஐந்திரு சென்னி யானை
அடுதிறல் கொண்டு நின்ற
செந்திரு மருமத் தண்ணல்
தேவரை அளிக்கும் தொல்லோன்
புந்திகொள் சலலை நாடி
இனையன புகலா நின்றான். 322

காலமாய்க் காலம் இன்றிக்
கருமமாய்க் கருமம் இன்றிக்
கோலமாய்க் கோலம் இன்றிக்
குணங்களாய்க் குணங்கள் இன்றி
ஞாலமாய் ஞாலம் இன்றி
அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல்
மூவிரு முகங்கொண் டுற்றான். 323

---

பெருஞ் செல்வத்தை இழந்த நமது துன்பம் தொலையு மாறில்லையோ? திருவாய்மலர்ந்தருள்க"

322. என்று வேண்டினர். அப்போது திருமால், வானவர் வேந்தனாகிய இந்திரனது வருத்தத்தை அறிந்து பேசலுற்றான்.

323. "வானவர்வேந்தே! கேள்; காலமாகவும், காலம் கடந்தவனாகவும், கருமமாகவும் கருமம் அற்றவனாகவும், உருவமாகவும் உருவ மற்றவனாகவும், குணங்களாகவும் குணங்கள் அற்றவனாகவும், உலகமாகவும உலகமல்லாத வனாகவும் உள்ள ஆதியற்ற மூலப பொருளாய வள்ளலே ஆறுமுகங் கொண்டு அருள் புரிய வந்தார்.

பொன்னுரு அமைந்த கஞ்சப்
புங்கவன் ஆகி நல்கும்
என்னுரு ஆகிக் காக்கும்
ஈசன்போல் இறுதி செய்யும்
மின்னுரு என்ன யார்க்கும்
வெளிப்படை போலும் அன்னான்
தன்னுரு மறைக ளாலும்
சாற்றுதற் கரிய தன்றே. 324

சூரனே முதலோர் தம்மை
இமைப்பினில் தொலைக்க உன்னின்
மூரலால் அடுவன் கொண்ட
முனிவினால் அடுவன் வாய்மைச்
சீரினால் அடுவன் நாட்டச்
செய்கையால் அடுவன் என்றால்
நேரிலா முதல்வன் வன்மை
யாவரே நிகழ்த்தற் பாலார். 325

துய்யதோர் குமர னேபோல்
தோன்றிய முதல்வன் சூழ்ந்து
வெய்யதா னவரை எல்லாம்
விரைந்துடன் அறுத்து நீக்கிக்

---

324. அவரே பிரமனாக நின்று உலகத்தைப் படைப்பார். என் வடிவத்தில் அமைந்து காப்பார்; சங்கரன் வடிவத்தில் தோன்றி அழிப்பார்; மின்னுருவன்ன வெளிப்படுவார்; அவர் தம் திருவுருவத்தை விரித்துரைத்தல் வேதங்களுக்கும் அரிது.

325. சூரன் முதலிய அசுரரை இமைப் பொழுதில் அழிக்க நினைத்தால் ஒரு சிரிப்பால் ஒழிப்பார்; சீற்றத்தால் ஒழிப்பார்; திருக்கண் நோக்கால் ஒழிப்பார் என்றால் தனக்குவமை யில்லாத் தலைவனாய முருகவேளின் தன்மையை யாவரே மொழிய வல்லார்?

326. பச்சிளம் பாலன் போலத்தோன்றிய தலைவன் அசுரரை யெல்லாம் வேலால் விரைவில் அறுத்து ஒழிப்

கையில்வேல் அதனால் சூரன்
ஆற்றலும் கடக்கும் யாதும்
ஐயுறல் காண்டி என்றான்
அறிதுயில் அமர்ந்த பெம்மான். 326

## முருகவேள் போர்செய்ய வருதல்

அன்ன தன்மைகண்டு அறுமுகன்
முறுவல் செய்து அடுபோர்
உன்னி ஏகலும் வானமும்
வையமும் ஒன்றாத்
துன்னு தானவப் பெருங்கடல்
ஆர்த்தமர் தொடங்க
முன்னம் ஏகிய பாரிடர்
யாவரும் முரிந்தார். 327

நாட்டம் மூன்றுடைத் தாதைபோல்
சிறிதிறை நகைத்து
நீட்டம் மிக்கதோர் சிலையினை
நெடுங்கரம் பற்றிக்
கோட்டி நாணொலி கொண்டிட
அண்டரும் குலைந்தார்
ஈட்டம் மிக்கபல் உயிர்களும்
துளக்கமெய் தினவே. 328

---

பார். அப்படையால் சூரனையும் வெல்வார். இதில் ஐயம் வேண்டாம்" என்று அருளினன் திருமால்.

327. பெருஞ்சேனையோடு சூரன் போர்க்களம் புகுந்ததை அறிந்து முருகவேள் முறுவல் செய்தார்; போர்க்கோலம் கொண்டு எழுந்தார். விண்ணும் மண்ணும் நெருங்கி நின்ற அசுர சேனை ஆரவாரம் செய்து போர் தொடங்கிற்று, அன்னார் செய்த கடும்போருக்கு ஆற்றாது முன்னணியில் நின்ற பூதப்படை பின்னிட்டது.

328. அசுரப் படையின் செயல் கண்டு நெற்றிக் கண்ணுடைய தந்தையைப்போல் சற்றே சிரித்தார் முருகன்; திருக்கரத்திலே வில்லெடுத்து வளைத்தார்; தேவரும்

புக்க காலையில் அறுமுகன்
தோற்றமும் புடையின்
மிக்க பன்னிரு கரங்களும்
வியன்படைக் கலனும்
தொக்க வீரமும் வன்மையும்
நோக்கியே தொல்லைத்
தக்க னேஎன அவுணர்கோன்
இன்னன சாற்றும். 329

## சூரன் அதிர்த்தல்

உடைப்பெ ரும்படை செறுத்தனை
பாலன்என் றுன்னை
விடுப்ப தில்லையால் வெரிந்து
கொடுக்கினும் விரைவில்
படுப்பன் வானவர் தொகையுடன்
பாரிடர் தமையும்
கெடுப்பன் என்றனன் தன்பெரும்
கிளையுடன் கெடுவான். 330

உண்ணிலா மாயை வல்ல
ஒருதனித் தேர்மேல் நின்றோன்
எண்ணிலா உருவம் கொண்டே
இருங்கணை மாரி தூர்ப்பத்

---

அவ்வோசை கேட்டு நடுங்கினர். மன்னுயிர் எல்லாம் மனம் பதைத்தது.

329. ஆறுமுகமும், பன்னிரு கையும், அரும் படைக் கலமும், நிறைந்த வீரமும் ஆண்மையும் போர்க்களத்தில் நிலவக் கண்ட சூரன், முன்னாளில் இருந்த தக்கனைப் போல் ஆணவம் கொண்டு பேசலுற்றான்.

330. "பாலனே! என் பெருஞ்சேனையைச் சிதைத்தாய்! இனிச் சிறுவன் என்று உன்னை விடப்போவதில்லை; போரில் புறங்காட்டிப் போனாலும் உன்னை அழிப்பேன்' வானவர் குழுவையும் பூதகணங்களையும் ஒழிப்பேன்'; என்று சொல்லி,

331. மாயையில் வல்ல இந்திரஞாலம் என்னும்

தண்ணிலா மௌலி அண்ணல்
உதவிய செம்மல் நோக்கி
நண்ணலான் ஒருவன் மாயம்
நன்றுநன் றென்று நக்கான். 331

சிறுநகை செய்து மேலாம்
சேதனப் பகழி பூட்டி
அறுமுகன் அவுணர் செம்மல்
ஆற்றிடு மாயம் முற்றும்
இறைதனில் முடித்தி என்றே
ஏவலும் விரைவின் ஏகி
முறைநெறி பிழைத்தோன் மாயம்
முற்றொருங் கட்ட தன்றே. 332

மாயையின் உருவம் நீங்க
வலியழிந்து உள்ளம் மாழ்கித்
தீயவன் ஒருவ னாகிச்
சேனுயர் தேரின் நின்றான்
ஆயது தெரிந்து வானோர்
அறுமுகத் தவனைப் போற்றிப்
பாய்புனற் கடலின் ஆர்த்துப்
பனிமலர் மாரி தூர்த்தார். 333

---

இணையிலாத் தேர்மேல் நின்று, எண்ணிறந்த உருவம் கொண்டு, சரமாரி பொழிந்தான். முருகவேள் அதனைக் கண்டு நன்று நன்று என்று நகைத்தார்.

332. ஞானாஸ்திரத்தை எடுத்து விடுத்தார். அப் படை சென்று சூரன் மாயத்தை முற்றும் அறுத்தது.

333. மாய வடிவம் மறைந்த நிலையில் வலிமை யிழந்து, மனம் தளர்ந்து சூரன் தனியனாய்த் தேர்மேல் நின் றான். அந்நிலை கண்ட தேவர் ஆரவாரித்து அறுமுகப் பெருமானைப் போற்றி நறுமலர் தூவினர்.

தூர்த்தலும் தேரும் தானும்
துண்ணெனக் கரந்து சூரன்
பேர்த்திடும் அண்ட கூடப்
பித்திகை வாயில் எய்தி
ஆர்த்தறை கூவிப் புக்காங்
கப்புறத் தண்டம் செல்லத்
தீர்த்தனும் அதனை நோக்கித்
தீயனைத் தொடர்ந்து போனான். 334

இந்நிலை அவுணர் கோமான்
இருநிலத் தண்டம் முற்றும்
மின்னெனப் படர்ந்து தோன்றி
வெய்யபோர் விளைத்து நின்று
பின்னரும் கரந்து செல்லப்
பிரானும்அவ் அண்டம் தோறும்
துன்னலன் தனைவி டாது
தொடர்ந்தமர் இயற்றிப் போனான். 335

வெந்தி றற்சமர் ஆற்றியே
அவுணர்கோன் மீட்டும்
இந்த அண்டத்து மகேந்திர
வரைப்பில்வந் திறுத்தான்

334. அப்போது சூரன் தேரோடு மறைந்தான்; அண்ட கூடத்தின் வாயிலை அடைந்து அறை கூவினான்; அப்பால் நின்ற அண்டத்திற் புகுந்தான்; அது கண்ட முருகவேள் அங்கும் அவனைத் தொடர்ந்து சென்றார்.

335. சூரன் அண்டங்கள் தோறும் மின்னல் போற் பாய்ந்தான்; கடும் போர் புரிந்தான்; இளைத்த வேளையிற் கரந்து சென்றான்; ஆயினும் அவனை விடாது தொடர்ந்தார் அறுமுகப் பெருமான்.

336. அண்டம் எங்கும் சுற்றிய அசுரர் கோமான் மீண்டும் மகேந்திர நகரம் போந்தான்; நிழல் போல்

ழுந்து நீழலை விடாதுசெல்
    வோர்என முனிந்து
கந்த னும்தொடர்ந் தவனொடு
    போந்தனன் கடிது. 336

போந்திடு தன்மை நோக்கிப்
    புராரிதன் புதல்வன் நங்கள்
ஏந்தலைத் தொடர்ந்தான் என்று
    இம்பரில் அவுணர் தானை
தீந்தழல் என்னப் பொங்கிச்
    செங்கையிற் படைகள் வீசி
ஆய்ந்திடும் உணர்வின் மேலாம்
    ஆதிதன் புடைசூழ்ந் தார்த்தார். 337

நாதனும் அதனை நோக்கி
    நன்றிவர் முயற்சி என்று
ஓதினன் முறுவல் செய்ய
    ஒன்னலன் தானை தொன்னாள்
மூதெயில் என்ன நீறாய்
    வெந்துடன் முடிந்த தம்மா
தாதைதன் செய்கை மைந்தன்
    செய்வது தக்க தன்றோ. 338

---

அவனை விடாது தொடர்ந்த கந்தவேளும் விரைந்து அவ்வி டம் சென்றார்.

337. சூரனையும் அவனைத் தொடர்ந்துவந்த வேலனையும் கண்ட அசுரசேனை பொங்கி எழுந்து போர்புரியத் தொடங்கிற்று. அறுமுகனைச் சுற்றி ஆரவாரித்தது.

338. அதைக் கண்டு சற்றே சிரித்தார் முருகப்பெருமான். முன்னாள் ஈசனது சிறு நகையால் எரிந்த திரிபுரம் போல், அசுர சேனை நீறுபட்டு அழிந்தது; தந்தையைப் பின்பற்றுதல் மைந்தர்க்குத் தக்க தன்றோ?

பின்னுறு துணைவர் மைந்தர்
பேரியல் அமைச்சர் ஏனோர்
முன்னுற முடிந்தார் இன்று
முடிவுறுந் தானை முற்றும்
பன்னிரு கரத்து மைந்தன்
படுத்தனன் தமியன் ஆனேன்
என்னிவண் செய்வ தென்று
உயிர்த்தனன் எண்ணம் மிக்கான். 339

## மாயையின் உதவியால் இறந்த அசுரரை எழுப்புதல்

மாயவள் தன்னை மன்னன்
மனத்திடை நினைத்த லோடும்
ஆயவள் வந்து தோன்றி
அரும்பெறல் ஆற்றல் மைந்த
நீயொரு தமியன் ஆகி
நின்னுளம் தளர்ந்தே என்னைக்
கூயினை முன்னிற் றென்னை
தெரிவுறக் கூறு கென்றாள். 340

அறிந்திடு மாயை இவ்வாறு
அறைதலும் குமரன் போரில்
மறந்தக துணைவர் மைந்தர்
மந்திரி தானை முற்றும்

---

339. "என் தம்பியரும், மைந்தரும், அமைச்சரும் ஏனைய படைத்தலைவர்களும் முன்னமே அழிந்தார்கள்; அளவிறந்த சேனையையும் இன்று குமரன் கொன்றான்; யான் தன்னந் தனியனாய் நின்றேன்; இனி என்ன செயற்பாலது" என்று கருதிப் பெருமூச்செறிந்தான் சூரன்.

340. அன்னையாகிய மாயவளை மனத்தில் நினைத்தான்; உடனே அவள் வந்து தோன்றினாள். "வீரமைந்தா! இங்கு தனியனாய் நிற்கின்றாய்! தளர்ந்து தோன்றுகின்றாய்! என்னை நினைத்தாயே! உன் கருத்து என்ன? சொல்லுக' என்றாள்.

341. அப்போது சூரன் மாயையை நோக்கித் "தாயே!

இறந்திட எஞ்சி னேன்யான்
யாவரும் எழுதற் கொத்த
திறந்தனை அருண்மோ என்ன
நகைத்தவள் செப்பல் உற்றாள். 341

பன்னிரு தடந்தோள் கொண்ட
பகவனைப் பாலன் என்றே
உன்னலை அவன்கை வேலால்
ஒல்லையிற் படுதி கண்டாய்
இன்னுயிர் துறக்க நின்றாய்
என்மொழி கேட்பாய் அன்றே
சென்னியின் விதியை யாவர்
ஆயினும் தீர்ந்தார் உண்டோ. 342

நின்றிட அனைய தன்மை
நின்னுளம் மகிழு மாற்றால்
பொன்றினர் எழுதல் வேண்டின்
புறக்கடற் கொருசார் ஆக
மன்றல்கொள் அமுத சீத
மந்தர கூடம் என்றோர்
குன்றுளது அதனை ஈண்டே
கொணருதி கூடும் என்றாள் 343

---

இதுவரை நிகழ்ந்த போரில் வீரத் தம்பியர் விழுந்தனர்; மைந்தர் மாண்டார்; அமைச்சரும் அழிந்தார்; யான் ஒருவனே எஞ்சி நின்றேன். இறந்தவர் எல்லாம் மீண்டும் உயிர் பெற்று எழுதல் வேண்டும்! அதற்கு ஓர் உபாயம் கூறுக' என்று வேண்டினான்.

342. மாயவள் அதுகேட்டு நகைத்து "அப்பா! சூரனே; பன்னிரு கரங்களோடு விளங்கும் பரமனைப் பாலன் என்று நினையாதே! அவன் வேற்படையால் நீ விரைவில் விழுந்திடுவாய்; மாதா வுரையை நீ மனதிற் கொள்வாயா? தலை விதியைத் தவிர்க்க யாரால் இயலும்?

343. அது நிற்க; உன் மனம் மகிழும் வண்ணம் இறந்தவர் உயிர்பெற்று எழ வேண்டுமாயின், புறக் கடலுக்கு ஒரு புறமாக மங்கல மலையொன்று உண்டு; அமுத

இவ்வகை உரைத்து மாயை
ஏகினள் ஏக லோடும்
மைவரை என்ன நின்ற
மன்னவர் மன்னன் கேளா
அவ்வைதன் சூழ்ச்சி நன்றால்
அடுகளத் தவிந்தோர் யாரும்
உய்வகை இதுவே என்று
உன்னினன் உவகை மிக்கான். 344

இந்திர ஞாலம் தன்னை
இறையவன் விளித்து நீஎன்
புந்தியின் விரைந்து சென்று
புறக்கடல் மருங்கின் மேவி
அந்தம தடைந்தோர்க்கு ஆவி
அளித்திடும் அமுதம் கொண்ட
மந்தர கிரியைக் கீண்டு
மற்றிவண் கொணர்தி என்றான். 345

விழுமிய மாய மான்தேர்
வினவியோர் கணத்தின் முன்னம்
எழுகட லினுக்கும் அப்பால்
இருந்திடு கடலின் சார்போய்

---

சீத மந்தரகூடம் என்பது அதன் பெயர். அக் குன்றத்தை இங்கே வரவழைத்து நினைத்த செய்கையை நிறைவேற்றிக் கொள்க'' என்று சொல்லிச் சென்றாள்.

344. அம்மொழி கேட்ட சூரன் "தாய் சொல்லிய சூழ்ச்சியே தக்கது. இறந்தோரை எழுப்பும் வழி இதுவே'' என்று மனமகிழ்ந்து,

345. இந்திரஞாலம் என்னும் தேரை நோக்கி "நீ மனோவேகமாகச் சென்று, புறக்கடலின் அருகேயுள்ள அமுத மந்தர மலையைப் பெயர்த்துக்கொண்டுவா'' என்றான்.

346. உடனே இந்திரஞாலம் எழுந்தது; ஏழு கடலையும் கடந்தது; புறக்கடலிற் போந்தது; அமுத மந்தர

அழிவுறு தங்கண் நின்ற
அமுதமந் தரத்தைக் கொண்டு
வழிபடர் கதியின் மீண்டு
மகேந்திரம் புக்க தன்றே. 346

அக்காலையில் இரதம்தரும்
அமுதத்தனி வரையின்
மெய்க்கால்வர அந்நாள்வரை
வெம்பூசல் இயற்றி
மைக்காலன்மெய் உயிர்உண்டிட
மறியும் படை முழுதும்
தொக்காலம தொழுந்தாலெனத்
துண்ணென்றெழுந் தனவே. 347

எழுந்தான்வயப் புலிமாமுகன்
இரவிப்பகை எழுந்தான்
எழுந்தான்எரி முகவெய்யவன்
இளமைந்தனும் எழுந்தான்
எழுந்தான் அறத் தினைக்காய்பவன்
இருபாலரும் எழுந்தார்
எழுந்தார் ஒரு மூவாயிரர்
ஏனோர்களும் எழுந்தார். 348

---

மலையை எடுத்தது; சென்ற வழியே மகேந்திர நகரத்திற்கு விரைந்து வந்தது.

347. அம்மலைக் காற்று அமர்க்களத்தில் வீசிற்று. அன்றுவரை போர் புரிந்து இறந்த வீரர் எல்லோரும் ஒருங்கே உயிர்பெற்று எழுந்தார்கள்.

348. எழுந்தான் சிங்கமுகன்; எழுந்தான் பானு கோபன்; எரிமுகன் எழுந்தான்; இளைய வச்சிரவாகு எழுந்தான்; தருமகோபனும், இரு புதல்வரும் எழுந்தனர். மக்கள் மூவாயிரவரும் எழுந்தனர்.

வென்றி கொண்டவேல் குமரன் இவ்
விளைவெலாம் நோக்கி
நின்ற ஒன்னலன் சூழ்ச்சியும்
வலவை சொல் நெறியும்
குன்றின் வன்மையும் உய்ந்தெழு
பரிசனர் குழுவும்
நன்று நன்றெனக் கையெறிந்து
அழல் எழ நகைத்தான். 349

## முருகவேள் சங்காரப்படை விடுதல்

விறலு டைப்பல் தானையும்
வெய்யவர் தொகையும்
நொறிலு டைக்கதி கொண்டுசூழ்
வுற்றதும் நோக்கி
அறுமு கத்தனிப் பண்ணவன்
உயிர்த்தொகை அனைத்தும்
இறுதி யைப்புரி கடவுள் மாப்
படையினை எடுத்தான். 350

அங்கை யிற்கொடு சிந்தையால்
வழிபடல் ஆற்றிச்
சிங்க மாமுகன் ஆதியாம்
அவுணர்தம் திறத்தைச்

---

349. இவற்றைக் கண்டார் முருகவேள். "சூரன் செய்த சூழ்ச்சியும், மாயை சொல்லிக்கொடுத்த மார்க்கமும், மந்தர மலையின் மகிமையும், பகைவர் பிழைத்து எழுந்த வகையும் நன்று நன்று" என்று நகைத்தார்.

350. அப்போது அசுரப் பெரும்படை வேகமாக வந்து அறுமுகப் பெருமானை வளைந்தது. அவற்றைத் தொலைக்கக் கருதிய பெருமான் மன்னுயிரை யெல்லாம் அழிக்கவல்ல சர்வ சங்காரப் படையை எடுத்தார்.

351. மனத்தாற் பூசனை புரிந்து அப்படை கலத்தை நோக்கிப் "போர் முனையில் நிற்கும் அரிமுகன் முதலிய

சங்கை யின்றியே நின்றிடு
தானைகள் தம்மை
இங்கு வல்லையில் அடுதியால்
எனவிடுத் திட்டான். 351

முந்து வெய்யசூர்ப் பரிசனத்
தொகையெலாம் முருக்கி
இந்தி ரப்பெரு ஞாலமாம்
தேர்மிசை இருந்த
மந்த ரப்பெரும் கிரியினைத்
துகள்எழ மாய்த்துக்
கந்த வேள்புடை மீண்டது
சிவன்படைக் கலமே. 352

அரிமு கத்தவன் ஆதவன்
தனைமுனம் அழன்றோன்
எரிமு கத்தவன் வச்சிர
மொய்ம்பன் நூற் றிருவர்
முரண்மி குத்தமூ வாயிரர்
அறப்பகை முதலோர்
விரிக டற்படை வெற்பொடு
முடிந்தவண் வீழ்ந்தார். 353

---

அசுரத் தலைவரையும், அளவிறந்த சேனையையும் அழித்திடுக'' என்று கூறி விடுத்தார்.

352. சங்காரப் படை புறப்பட்டது. சூரன் சேனையை முற்றும் சூறையாடிற்று; இந்திரஞாலத் தேரின் மீதிருந்த மந்தர மலையை நொறுக்கி எறிந்தது; கந்தவேள் கையில் மீண்டும் வந்தடைந்தது.

353. அரிமுகனும், பானுகோபனும், எரிமுகனும் வச்சிரவாகுவும், நூற்றிருவரும், மூவாயிரவரும், தரும கோபனும், பெருஞ்சேனையும், மந்தர மலையோடு மடிந்து விழுந்தார்.

தன்மை அங்கவை யாவையும்
கண்டனன் தளர்ந்தான்
வன்மை நீங்கினன் கவன்றனன்
இரங்கிமெய் மறந்தான்
புன்மை யாயினன் உயிர்த்தனன்
செயிர்த்தனன் புலர்ந்தான்
தொன்மை போலவே தனித்தனன்
துணையிலாச் சூரன். 354

### சூரன் தேரும் முருகன் கணையும்

அனைய தன்மையின் நின்றிடும்
அவுணர் கோன் ஆற்றச்
சினம தெய்தினன் படையெலாம்
சிதைத்தபா லனையும்
தனிமை செய்துபின் வெல்வன்என்று
உளம் கொடு தமற்கண்
முனைவன் நல்கிய தேரினை
நோக்கியே மொழிவான். 355

கொச்ச கத்தியல் குதலைவாய்
மதலைபால் குழீஇய
வச்சி ரத்தெயி றுடைய வெம்
பூதரை வயின்சூழ்

354. சிவப்படையின் செய்கை கண்டான் சூரன்; மனந்தளர்ந்தான்; வன்மை இழந்தான்; வாட்டம் உற்றான்; மெய் மறந்தான்; எளிமையடைந்தான்; பெருமூச் செறிந்தான்; சீறினான், வாடினான்; முன்னைப்போல் தன்னந் தனியனாய் நின்றான்.

355. அந்நிலையில் அவன் உள்ளத்திற் கடுஞ்சினம் மூண்டது. "என் சேனையெல்லாம் சிதைத்த சிறுவனை என்னைப்போல் தனிமை செய்து பின் வெல்வேன்" எனத் துணிந்து, இந்திரஞாலத்தை நோக்கி,

356. "நம்மைப் பகைத்து நிற்கும் மதலையின் சார்பாகத் திரண்டுள்ள பூத கணங்களையும், விற்படை தாங்கிய

கைச்சி லைத்திறல் வீரரைக்
க்வர்ந்துபோய் அண்டத்து
உச்சி யிற்கொடு வைத்தனை
இருத்தியென் றுரைத்தான். 356

கையர் தன்மையில் கடற்படை
முழுவதும் கவர்ந்து
மையல் சிந்தையின் செய்துதன்
வயினிடைத் தாங்கி
ஓய்யெ னச்சென்று மூதண்ட
கோளகை யுழிப் போய்
வெய்ய வன்பணி ஆற்றிஆண்டு
இருந்தது வியன் தேர். 357

நிமலன் அவ்வழித் தானை யம்
பெருங்கடல் நீங்கத்
தமியன் நின்றனன் ஆங்கது
தகுவர்கோன் காணூ
நமது தேர்வலி நன்றெனா
உவகையால் நகைத்தான்
அமரர் அச்செயல் நோக்கியே
பின்னரும் அயர்ந்தார். 358

---

வீரரையும் கவர்ந்து சென்று அண்ட முகட்டிற் கொண்டு சேர்த்துக் காவல்செய்திடுக" எனப் பணித்தான்.

357. அவ்வண்ணமே அத்தேர் கடல்போற் பரந்து நின்ற சேனையின் அறிவை மயக்கிக் கவர்ந்து சென்று, அசுரர்கோன் பணித்தவாறே அண்டத்தின் முகட்டிற் கொண்டு சேர்த்துக் காவல் செய்து நின்றது.

358. சேனையை இழந்து தனியராக நின்றார் முருகப் பெருமான். அதுகண்டு மகிழ்ந்தான் அசுரர் கோமான். தன் தேரின் திறங்கண்டு முக மலர்த்தான். வானவர் மீண்டும் துன்புற்று மயங்கினர்.

கண்டு சீறிஓர் கார்முகம்
வாங்கியே கடிதோர்
திண்தி றற்கணை பூட்டிநம்
சேனையைப் பற்றி
அண்ட கோளகை புக்குறும்
அடுமுரண் தேரைக்
கொண்டு வல்லையின் வருகென
விடுத்தனன் குமரன். 359

விடுந்த னிக்கணை வேலெனச்
சென்றுவில் வீசி
இடந்தி கழ்ந்திடும் ஏழ்வகை
உலகமும் இமைப்பில்
கடந்து மற்றுள பதங்களும்
நீங்கிஓர் கணத்தில்
தொடர்ந்து மூதண்ட கோளகை
புகுந்தது துன்னி. 360

வெந் திறல் நெடுங்கணை மீண்டு ஞாலமேல்
இந்திர ஞாலமாம் இரதத் தைக்கொடு
கொந்தவிழ் மாலைவேற் குமரன் தன்முனம்
வந்தது வானவர் வழுத்தி ஆர்ப்பவே. 361

---

359. மாற்றான் நிலையும், தன் நிலையும் கண்டார் முருகவேள்; சீற்றம் கொண்டார்; வில்லை வளைத்தார்; திண்மை வாய்ந்த அம்பினை நோக்கி "நமது சேனையைக் கவர்ந்து அண்டமுகட்டிற் கொண்டு சேர்த்த வலிய தேரை விரைவில் கொண்டு வருக" என்று கூறி விடுத்தார்.

360. ஒப்பற்ற அம்பு வேல்போல் ஒளிவீசிச் சென்றது. ஏழுலகங்களையும் கடந்தது; ஏனைய பதங்களையும் நொடிப் பொழுதில் விட்டகன்று அண்டமுகட்டை நாடிச் சென்றது.

361. அங்கு பெருஞ் சேனையைத் தன்னகத்தே கொண்டு நின்ற தனிப் பெருந் தேரைக் கண்டது; அதன் வலிமையை முறித்தது; சேனையோடு தேரையும் பற்றிக்

முப்புரம் முடித்தவன் முருகன் தன்கணை
இப்புவி வருதலும் இலக்கத் தெண்மரும்
ஒப்பரும் இளவலும் ஒல்லென் பூதரும்
குப்புறல் உற்றனர் கொடியன் தேரினும். 362

தொல்லையில் வரம்பெறு சூரன் தன்புடை
செல்லலை ஆங்கவன் முடிகை திண்ணமால்
மல்லலம் திருவுடை மாயத் தேரை நீ
நில்லிவண் என்றனன் நிகரில் ஆணையான். 363

அண்டம தடைந்ததேர் ஐயன் வாளியால்
மண்டலம் இழிந்து தன்மருங் குறுததும்
எண்தகு பூதரும் யாரும் மீண்டதும்
கண்டனன் அவுணர்கோன் கனலிற்சீறினன். 364

தேரொடு படையை வெளவித்
திறலுடை மடங்கல் சிந்தி
நேரலன் வலிய னேபோல்
நின்றனன் அனையன் தன்னைச்

---

கொணர்ந்து வெற்றி வேலவன் முன்னே விட்டது. வான வர் போற்றி ஆரவாரம் செய்தனர்.

362. வீரவாகுவும் பிறரும் தேரினின்று ஊக்கத் தோடு இறங்கினர்.

363. அப்போது இந்திரஞாலத்தை நோக்கி "அழகிய செல்வத் தேரே! இனி நீ அச் சூரனிடம் செல் லாதே; அவன் இறத்தல் திண்ணம்; இங்கேயே நில்" என ஆணையிட்டார்.

364. அண்டத்தை யடைந்த தேர் அறுமுகன் ஏவிய கணையால் மீண்டு வந்ததைக் கண்டான் சூரன்; பூதப் படைகள் எல்லாம் போர்க்களம் போந்ததும் அறிந்தான். தன்தேர் தன்னிடம் வாராததையும் தெரிந்தான்; கடுங் கோபம் கொண்டான்.

365. என் தேரையும், சூலப் படையையும், சிங்கத் தையும் சிதைத்தான்; வீரன்போல் நின்றான்; அவனையும்,

சாரதர் தொகையை ஏனைத்
தலைவர்கள் தம்மை எல்லாம்
ஒருருக் கொண்டு யானே
விழுங்குவன் ஒல்லை என்றான். 365

### சூரன் பறவையாகிப் பொருதல்

என்றிவை மனத்தில் உன்னி
இணையறு மாயை நீரால்
நின்றுள அவுணர் செம்மல்
நேமியம் புள்ளே போல
ஒன்றொரு வடிவம் எய்தி
ஒலிதிரைக் கடலின் ஆர்த்துத்
தன்துணைச் சிறகர் பெற்ற
தனிப்பெருங் கிரிபோல் உற்றான். 366

அடித்திடும் சிறகர்தன்னால்
அளவையில் பூதர் தம்மைப்
பிடித்திடும் புலவு நாறும்
பெருந்தனி மூக்கிற் குத்தி
மிடற்றிடைச் செறித்து மெல்ல
விழுங்கிடும் விறல்வேல் அண்ணல்
கொடித்தடம் தேரைச் சூழும்
கொடியபுள் வடிவக் கூற்றம். 367

---

பூதரையும், பிறரையும் யானே ஓர் உருவம் கொண்டு விரைவில் விழுங்குவேன்'' என்று எண்ணி,

366. மாயையின் திறத்தால் கொடியதோர் பறவையின் உருவம் கொண்டான்; பெருங் கடல்போல் முழங்கினான்; சிறகு பெற்ற மலைபோல் எழுந்து,

367. பூதர்களை அறைந்தான்; கூரிய மூக்கால் குத்தி விழுங்கினான்; அறுமுகப் பெருமான் ஏறியிருந்த தேரையும் சுற்றி வந்து அடித்தான்.

வேலைகள் எல்லை முற்றும்
படர்ந்திடும் விராவி மேவும்
ஞாலம தகலம் முற்றும்
படர்ந்திடும் நாகர் வைகும்
வாலிய உலகம் முற்றும்
படர்ந்திடும் வந்து பூத
சாலம தெறிந்து கவ்வித்
தலைத்தலை மயங்கிச் செல்லும். 368

## முருகன் மயில்மீதேறிப் பொருதல்

சூரன்மற் றினைய வாற்றால்
சுலாய்க்கொடு திரித லோடும்
பூரணன் அதனைக் காணாப்
புள்ளெனப் பெயர்வான் தன்னைத்
தேரொடும் தொடர்ந்து கோறல்
பழியெனச் சிந்தை செய்து
வாரணம் உயர்த்தோன் தன்னை
நோக்கினன் வானோர் தம்முள். 369

இந்திரன் அனைய காலை
எம்பிரான் குறிப்பும் தன்மேல்
அந்தமில் அருள்வைத் துள்ள
தன்மையும் அறிந்து நோக்கிச்

---

368. பரந்த கடல்களின் எல்லையளவும் பறந்து சென்றான்; மீண்டு வந்தான்; நிலவுலகம் முழுதும் சென்று மீண்டான்; நாகலோகமும் சென்று வந்து பூதங்களைப் புடைத்தான்; எங்கும் சுழன்று திரிந்தான்.

369. இவ்வாறு பறவை வடிவம் பூண்டு போர் புரிந்த சூரனைக் கண்டார் முருகவேள். பறவையைத் தேர் மீது இருந்து போர் செய்து கொல்லுதல் பழியாகும் என நினைத்தார். இந்திரனை நோக்கினார்.

370. எம்பெருமான் கருத்தினையும், தன்பால் அவர் கொண்ட கருணையையும் அறிந்த இந்திரன் அழகிய

சுந்தர நெடுங்கண் பீலித்
தோகைமா மயிலாய்த் தோன்றி
வந்தனன் குமரற் போற்றி
மரகத மலைபோல் நின்றான். 370

ஐயகேள் அமரர் எல்லாம்
வழிபட அளியன் தன்பால்
செய்யபேர் அருளை வைத்தாய்
ஆதலின் சிறுமை தீர்ந்தேன்
உய்யலாம் நெறியும் கண்டேன்
உன்னடி பரிக்கப் பெற்றேன்
பொய்யுலாம் மாய வாழ்க்கைப்
புன்மையும் அகல்வன் மன்னோ. 371

என்னலும் உளத்திற் சொல்லும்
இவுளிமான் தேரின் நீங்கிப்
பன்னிரு நாட்டத் தண்ணல்
படர்சிறை மயூரம் ஆகி
முன்னுறு மகவான் தன்மேல்
மொய்ம்புடன் புக்கு வைகி
ஒன்னலன் செலவு நோக்கி
உம்பரில் ஊர்தல் உற்றான். 372

---

தோகையையுடைய மயிலாக மாறிவந்தான்; மரகதக் குன்றுபோல் முருகனைப் போற்றி நின்றான்.

371. "ஐயனே! வானவர் எல்லாம் வணங்கி நிற்க எளியனாகிய என்மீது கருணைவைத்தாய்; ஆதலால் புன்மை தீர்ந்தேன்; நன்மையுற்றேன்; பிறப்பெனும் சிறுமையும் போக்கினேன்"

372. என்று இந்திரன் கூறியபொழுது முருகப் பெருமான் தேரினின்றும் இறங்கினார்; தோகை மயில்மேல் ஏறினார்; சூரனைத் தொடர்ந்து சென்றார்.

அத்தகும் எல்லை தன்னில்
அவுணர்கள் எவர்க்கும் மேலோன்
எய்த்துளம் மெலிந்து சால
இடருழந் திரக்கம் எய்தி
மெய்த்தழல் என்னச் சீறி
வேற்படை கொண்ட செம்மல்
கைத்தலத் திருந்த வில்லைக்
கறிப்பது கருதி வந்தான். 373

வருவது நிமலன் காணு
மலர்க்கரம் ஒன்றில் வைகும்
ஒருதனி ஒள்வாள் வீசி
ஒன்னலன் பறவை யாக்கை
இருதுணி யாகி வீழ
எறிந்தனன் எறிதலோடும்
அரி அயன் முதலாம் தேவர்
அனைவரும் ஆடல் கொண்டார். 374

## சூரன் கொண்ட பல வடிவங்களை முருகவேள் அழித்தல்

பேயாம் எனவொரு பால்வரும்
பிறழ்வெம் புகைப்படலைத்
தீயாம் எனவொரு பால்வரும்
திசை யெங் கணும்சுழலும்

---

373. நீங்காது தொடர்ந்து வந்து தொல்லை விளை வித்த முருகன் செயல் கண்டு சூரன் மனந் தளர்ந்தான்; துயரடைந்தான்; சீற்றம் கொண்டான்; அவர் கையில் இருந்த வில்லைக் கடித்து முறிக்கக் கருதி வந்தான்.

374. அதுகண்ட முருகவேள் மற்றொரு கையில் அமைந்த வாட்படையை வீசிப் பறவையின் உடலை இரு கூறாக வெட்டினார். அரி அயன் முதலிய தேவர்கள் ஆனந்தமுற்று ஆடினர்.

375. அப்பொழுதும் சூரன் அழிந்தானல்லன். பல மாய வடிவங்கள் எடுத்தான். பேய் போல் வருவான்

ஓயா மருத்தின மாம் என
ஒருபால் வரும் அகிலம்
பாயா எழுதிரை ஆழியில்
ஒருபால் வரும் பரவி. 375

அங்கதன் நிலைமை நோக்கி
ஆயிர கோடி வாளி
செங்கையில் வாங்கி வாங்கும்
திருநெடுஞ் சிலையிற் பூட்டி
இங்குள அமரர் தங்கள்
இருஞ்சிறை அகற்ற வந்து
பங்கயற் சிறைசெய் திட்ட
பகவன்மற் றிதனைச் சொல்வான். 376

தெவ்வடு பகழி என்னும்
தேவிர்காள் நீவிர் ஏகி
மெய்வலி படைத்து நின்ற
மேலவன் ஒருவன் கொண்ட
அவ்வுரு அனைத்தும் எய்தி
ஆங்கவன் மாயம் முற்றும்
இவ்விடை அட்டு நீக்கி
ஏகுதிர் என்று விட்டான். 377

விட்டிடு சிலீமு கங்கள்
விரைந்துபோய் வெகுளி வீங்கி
ஒட்டலன் கொண்ட ஒவ்வொன்
றுருவினுக் கெழுமை யாகி

---

ஒருபுறம்; புகையும் தீயென வருவான் ஒருபுறம்; சுழல் காற்றெனத் திரிவான்; கடலெனப் பரந்து வருவான்.

376. அம் மாயா வடிவங்களை நோக்கி முருகவேள் ஆயிர கோடி அம்புகளை எடுத்து, அவற்றை நோக்கி,

377. "அம்பாகிய அமரரே! நீர் சென்று சூரன் எடுத்துள்ள மாய வடிவங்களை அடியோடு கெடுத்து வருக" என்று விடுத்தார்.

378. அவ் அம்புகள் விரைந்து சென்றன. வேகமும் கோபமும் கொண்டன. சூரன் எடுத்த ஒரு உருவத்திற்கு

எட்டுள புலமும் வானும்
இருநில வரைப்பும் ஈண்டி
அட்டடல் பெற்ற அம்மா
அனையவன் மாயம் தன்னை. 378

உடல்சின மோடு சூரன்
ஒருவனாய் அங்கண் நின்றான்
அடல்வலி கொண்டவாளி
அந்தர நெறி யால் மீண்டு
புடை யுறு சரங்களோடு
பொள்ளெனத் தூணி புக்க
சுடர்நெடுந் தனிவேல் அண்ணல்
அவன்முகம் நோக்கிச் சொல்வான். 379

வெம்புயல் இடையில் தோன்றி
விளிந்திடும் மின்னு என்ன
இம்பரில் எமது முன்னம்
எல்லையில் உருவம் கொண்டாய்
அம்பினில் அவற்றை யெல்லாம்
அட்டனம் அழிவி லாத
நம்பெரு வடிவம் கொள்வம்
நன்றுகண் டிடுதி என்றான். 380

---

ஏழுருவம் எடுத்தன. எட்டுத் திசையிலும், விண்ணிலும் மண்ணிலும் செறிந்தன. அவன் மாயங்களை யெல்லாம் அழித்தன.

379. மாறுபட்ட சூரன் ஒருவனாய் அப் போர்க் களத்தில் நின்றான். அவன் மாயத்தை ஒழித்த அம்புகள் மீண்டு சென்று முருகவேள் தூணியிற் புகுந்தன. அந் நிலையில் பெருமான் சூரனை நோக்கி,

380. "கருமேகத்தின் இடையே தோன்றி மறையும் மின்னலைப் போல எம் கண்ணெதிரே எண்ணரிய உருவம் கொண்டாய்! அவற்றை யெல்லாம் அழித்தோம். இனி நமது பெரிய வடிவத்தை நீ காண்பாயாக"

### கந்தவேள் காட்சி யளித்தல்

கூறிமற் றினைய தன்மை
குரைகடல் உலகம் திக்கும்
மாறிலாப் புவனம் அண்டம்
வானவர் உயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளல்
மேனியில் அமைந்த தன்றி
வேறிலை என்ன ஆங்கோர்
வியன்பெரு வடிவம் கொண்டான். 381

செஞ்சுடர் அநந்த கோடி
செறிந்தொருங் குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள
வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகம் துளங்கி விண்ணோர்
நின்றனர் நிமல மூர்த்தி
அஞ்சன்மின் அஞ்சன் மின்னென்
றருளினன் அமைத்த கையான். 382

இறுதியும் முதலும் இல்லா
இப்பெரு வடிவம் தன்னைக்
கறைவிடம் உறழும் சூரன்
கண்டுவிம் மிதத்தின் நிற்ப

---

381. என்று திருவாய் மலர்ந்து, கடலும் கடல் சூழ்ந்த உலகமும், எட்டுத் திசையும், எல்லாப் புவனமும், அண்டமும், வானவரும், ஏனையரும் தமது திருமேனியில் அமைந்தனவே யன்றி வேறில்லை என்று சொல்லும் வண்ணம் சிறந்ததோர் உருவம் கொண்டார்.

382. அனந்தகோடி சூரியர்கள் ஒருங்கே உதித்தாற் போன்று அவிர் ஒளி வீசி நின்ற அழகிய திருவுருவை நோக்கிய தேவரும் திடுக்கிட்டார். அறுமுக வள்ளல் அவர்க்கு அபயம் அளித்தார்.

383. ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ் சோதி வடிவத்தைச் கருமேகம் போன்ற சூரனும் கண்டு வியப்புற்று நின்முன். அந்நிலையில் ஞானியரும் அறிய

அறிவரும் உணர்தல் தேற்றா
ஆறுமா முகத்து வள்ளல்
சிறிதுநல் லுணர்ச்சி நல்க
இனையன செப்பல் உற்றான். 383

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன்என் றிருந்தேன் அந்நாள்
பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மால்அயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ. 384

ஒற்றென முன்னம் வந்தோன்
ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிகல் இன்றி நின்ற
பராபர முதல்வன் என்றே
சொற்றனன் சொற்ற எல்லாம்
துணிபெனக் கொண்டி லேனால்
இற்றையிப் பொழுதில் ஈசன்
இவன்எனும் தன்மை கண்டேன். 385

---

**வொண்ணாத பெருமான் அவனுக்குச் சற்றே மெய்யுணர் வளித்தார். அந்நிலையில் பேசலுற்றான் சூரன்.**

384. "என்னே! இஃதென்னே! கோலமா மயிலிற் குலவிய குமரனைப் பாலன் என்றே இதுகாறும் எண்ணியிருந்தேன். இத்தன்மை வாய்ந்தவன் என்று அறிந்திலேனே. மாயவன் பிரமன் முதலிய தலைவர்க்கும், வானவர்க்கும், பிற உயிர்களுக்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ?

385. விருப்பு வெறுப்பற்ற பரம் பொருளாகிய இறைவனே முருகன் என்று என்னிடம் தூதுவந்த வீரவாகு கூறினான். அன்று அச் சொல்லின் உண்மையை உணர்ந்தேனில்லை. இன்று இவனே இறைவன் என்று அறிந்தேன்.

ஆயிர கோடி காமர்
அழகெலாம் திரண்டொன் ருகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக் காற்ரு
தென்றிடின் இணைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார். 386

போயின அகந்தை போதம்
புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளும் கண்ணும்
துடித்தன புவனம் எங்கும்
மேயின பொருள்கள் முற்றும்
வெளிப்படு கின்ற விண்ணேர்
நாயகன் வடிவம் கண்டேன்
கற்றவப் பயனீ தன்ருே. 387

சூழுதல் வேண்டும் தாள்கள்
தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி
துதித்திடல் வேண்டும் தாலு

---

386. ஆயிரம் கோடி மன்மதருடைய அழகெல்லாம் திரண்டு ஒன்ருகி வந்தாலும், அறுமுகப் பெருமானது திருவடியின் தூய நல்லழகிற்கு இணையாகாது என்ருல், இவரது பெருவடிவத்திற்கு உவமை கூற வல்லார் யார்?

387. என் அகந்தை அகன்றது; மெய்யறிவு மனத்திற் புகுந்தது; வலது தோளும் கண்ணும் துடித்தன; புவனங்களெல்லாம் புலனுகின்றன; தேவ தேவனது திருவுருவம் காணப்பெற்றேன்; இது என் தவப்பயன் அன்ருே?

388. என் கால்கள் இவரைச் சுற்றி வலம் வரல் வேண்டும்; கைகள் குவிந்து தொழவேண்டும்; தலை தாழ்ந்து வணங்கவேண்டும்; வாய் வழுத்தவேண்டும்; தீமையெல்லாம் ஒழிந்து நான் அடிமையாக வாழவேண்டும். இவ்வாறு

ஆழுதல் வேண்டும் தீமை
அகன்றுநான் இவற்கான் ஆகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம்
தடுத்தது மானம் ஒன்றே. 388

ஏதமில் அமரர் தம்மை
யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர்
அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை
விண்ணவர் பலரும் காணா
நாதன்இங் கணுகப் பெற்றேன்
நன்றதே யான தன்றே. 389

என்னஇத் தகைய பன்னி
நிற்றலும் எவர்க்கும் மேலோன்
உன்னரும் தகைத்தாய் நின்ற
ஒருபெரும் தோற்றம் நீத்து
மின்னிவர் கலாபம் ஊர்ந்து
மெய்யுணர்க் கொண்டு நண்ணித்
துன்னலன் போதம் மாற்றித்
தொன்மைபோல் ஆகச் செய்தான். 390

---

செய்ய மனம் முந்துகின்றது; ஆனால் மானம் என்னும் ஒன்றுதான் தடுக்கின்றது.

389. தேவரை நான் சிறை செய்தது தவறு என்று சொன்னார் பலர்; எனினும் அச் செய்கையாலன்றோ மறைகளும் பிரமனும் மற்றுமுள்ள வானவரும் காணாத இறைவன் இங்கு வரப்பெற்றேன். நான் செய்த செயல் நன்றாயிற்று"

390. என்று பலவாறாகப் போற்றிப் புகழ்ந்து நின்றான் சூரன். அந்நிலையில் முருகவேள் தமது பெரு வடிவத்தை விட்டார். முன்போல் மயில்மீது ஏறிவந்தார். சூரனுக்கு அளித்த மெய்யறிவையும் மாற்றினார். அவனை முன்னிருந்த வண்ணம் ஆக்கினார்.

அத்தகு காலை தானே
அவுணர்கோன் உணர்ச்சி நீங்கிச்
சித்தம திடையே தொல்லைச்
சீற்றமும் இகலும் முற்ற
மெய்த்தகு குழவித் திங்கள்
விண்ணெறி செல்லச் செல்லும்
எத்திசை இருளும் அன்ன
தகன்றுழி எழுந்த தேபோல். 391

குன்றினை எறிந்த வேற்கைக்
குமரனோ டமர தாற்றி
வென்றிடு கின்றேன் மெல்ல
மேலது நிற்க இந்த
வன்திறல் சமரை மூட்டி
நின்றவா னவரை எல்லாம்
தின்னுயிர் குடித்து முன்என்
சினம்சிறி தகல்வன் என்றான். 392

## சூரன் இருளுருவம் கொள்ளுதல்

ஆயது துணிவாக் கொண்ட
அவுணர்கள் மன்னன் பின்னும்
தீயதோர் தொல்லை மாயச்
சீர்கொள்மந் திரத்தைப் பன்னி

---

391. வானத்தில் ஊர்ந்து செல்லும் இளந் திங்கள் அகல அகல அவ்வழிப்படரும் இருள்போல, மெய்யுணர்வு நீங்கியபொழுது சூரன் மனத்தில் சீற்றமும் பலகைமையும் நிறைந்தன.

392. "குன்றம் எறிந்த குமரனைப் பிறகு பார்த்துக் கொள்வேன். முன்னே இக் கடும்போரை மூட்டிய வானவரைச் சாடி முடித்துச் சற்றே சீற்றம் தீர்வேன்" என்றான் சூரன்.

393. அக் கருத்தை நிறைவேற்றுமாறு மீண்டும் ஒரு மாய மந்திரத்தை ஓதினான். மண்ணும் விண்ணும் கார்

ஞாயிறும் மருட்கை கொள்ள
    ஞாலமும் ககனம் முற்றும்
மாயிருள் உருவம் கொண்டு
    மறைந்துநின் றார்க்க லுற்றான். 393

ஆடியல் கொண்ட சூரன்
    அந்தரத் தெழலும் வானோர்
கூடிய ஓதி தன்னால்
    குறிப்பினால் தெரிந்து நம்மைச்
சாடிய வருவன் என்னாத்
    தலைத்தலை சிதறி நில்லாது
ஓடினர் கூற்றை நேர்ந்த
    உயிரென இரங்கல் உற்றார். 394

நண்ணினர்க் கினியாய் ஓலம்
    ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம்
    பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம்
    யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும்
    கடவுளே ஓலம் ஓலம். 395

---

இருள் செறிந்தது. அதனுள்ளே மறைந்து நின்றான் சூரன். கதிரவனும் அவ்விருளைக் கண்டு பதுங்கினான்.

394. அமர் செய்யக் கருதி அந்தரத்தில் எழுந்தான் அசுரர் கோமான். அதனைத் தம் அறிவாலும், குறிப்பாலும் தெரிந்த வானவர் சிதறி ஓடினர்; காலனைக் கண்ட உயிர்போல் கலங்கினர்.

395. "அடியார்க்கு இனிய ஆண்டவனே! ஓலம்; மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற முதல்வனே, ஓலம்; முனிவர்தம் தலைவனே ஓலம்; கருத்துதற்கரிய பெரியோய், ஓலம்; எல்லாம் படைத்த இறைவா, ஓலம்; கண்ணுதற் பெருமான் அருளிய கடவுளே ஓலம், ஓலம்.

தேவர்கள் தேவே ஓலம்
சிறந்தசிற் பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம்
வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம்
பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரும் ஆகி நின்ற
மூர்த்தியே ஓலம் ஓலம். 396

தேற்றலை போலும் ஈது
சிறிதுநீ பாணிப் பாயேல்
ஆற்றலின் மறைந்து நின்றே
அகிலமும் தானே உண்ணும்
மாற்றலன் ஆவி தன்னை
வாங்குதி வல்லை என்னாப்
போற்றினன் முதல்வன் தன்னை
மயூரமாய்க் கொண்ட புத்தேள். 397

## முருகவேள் வேற்படை விடுதல்

அங்கவர் மொழியும் வெய்யோன்
ஆற்றலும் தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகும்
திருநெடு வேலை நோக்கி

---

396. தேவதேவா ஓலம்; சிறந்த சிற்பரனே ஓலம்; பகைவரைத் தகர்க்கும் பரமனே ஓலம்; வேற்படை எடுத்த விமலா ஓலம்; பாவலர்க்கு எளியாய் ஓலம்; பன்னிரு கரத்தாய் ஓலம்; மூவரும் ஆகி நின்ற முழுமுதலே ஓலம், ஓலம்.

397. அடியேம் படும்பாட்டை நீ சிறிதும் அறிகிலை போலும்; இன்னும் சற்றே காலம் தாழ்ப்பின், மாய இருளில் மறைந்து நின்று சூரன் உலகமெல்லாம் அழித்திடுவான். ஆதலால் இன்னே அவனுயிரைக் கவர்ந்து எம்மைக் காத்தருள்க' என்று வேண்டினான் மயில்வாகனமாக நின்ற இந்திரன்.

398. வானவர்கோன் சொல்லிய மொழிகளையும், அசுரர்கோன் செய்த கொடுமைகளையும் அறிந்த முருகன்,

இங்கிவன் ஆகம் போழ்ந்தே
ஏகுதி இமைப்பின் என்னாத்
துங்கம துடைய சீர்த்திச்
சூரன் மேற் செல்லத் தொட்டான். 398

ஏயென முருகன் தொட்ட
இருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி என்னும்
அருக்கரின் திகழ்ந்து தோன்றித்
தீயழல் சிகழி கான்று
சென்றிட அவுணன் கொண்ட
மாயிருள் உருவம் முற்றும்
வல்விரைந் தகன்ற தன்றே. 399

அன்னவன் தனது மாயம்
அழிந்ததும் ஐயன் வைவேல்
முன்னுறு மாறும் நோக்கி
முடிவிலா வரத்தி னேனை
என்னிவண் செய்யும் அம்மா
இவன் விடும் எஃகம் என்று
உன்னினன் முறுவல் எய்தி
உருகெழு சீற்றம் கொண்டான். 400

---

தம் கையில் அமைந்த நெடுவேலை நோக்கி "அச்சூரனது மார்பைப் பிளந்து கணப்பொழுதில் வருக" எனப் பணித்து விடுத்தார்.

399. இருதலை படைத்த வேற்படை உடனே புறப்பட்டது. ஆயிரம் கோடி சூரியரைப்போல் ஒளி வீசிற்று; தீச்சுடர்களை உமிழ்ந்து சென்றது. அவ்வொளியைக் கண்ட மாய இருள் முற்றும் மாய்ந்தது.

400. தன்னை நோக்கி வந்த வேற்படையைக் கண்ட சூரன் மனம் கலங்கினானல்லன். "சாகா வரம் பெற்றுள்ள என்னை இப்படை என்ன செய்யும்" என இறுமாந்து, சீற்றம் கொண்டான்.

## சூரன் மாமரமாகி நிற்றல்

வன்னியின் அலங்கல் கான்று
வான்தழை புகையின் நல்கிப்
பொன்னென இணர்கள் ஈன்று
மரகதம் புரையக் காய்த்துச்
செந்நிற மணிகள் என்னத்
தீம்பழம் கொண்டு கார்போல்
துன்னுபல் கவடு போக்கிச்
சூதமாய் அவுணன் நின்றான். 401

தெண்திரை நடுவண் நின்ற
தீயவன் செயலும் அன்னோன்
கொண்டிடும் உருவும் உள்ளக்
கொள்கையும் வலியும் சீரும்
அண்டர்கள் எவர்க்கும் மேலாம்
ஆதியம் பகவன் தொட்ட
விண்தொடர் தனிவேல் காணூ
வெஞ்சினம் விளைத்த தன்றே. 402

விடம்பிடித் தமலன் செங்கண்
வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில்
தோய்த்து முன் இயற்றி யன்ன

---

401. (நெடுங் கடலின் நடுவே போந்து) நெருப்புப் போன்ற தளிர்களும், புகை போன்ற தழைகளும், பொன் போன்ற பூந்துணர்களும், மரகதம் போன்ற காய்களும், செம்மணி போன்ற கனிகளும் தாங்கி, கார்மேகம் போன்ற கவடு போக்கி ஒரு பெரிய மாமரமாய் நின்றான் சூரன்.

402. மாறுபடு சூரன் மாமரமாகி மாக்கடலின் நடுவே நின்ற நிலையும், அவன் உள்ளக் கருத்தும், உடலின் வலியும் கண்டு வேற்படை கடுஞ்சீற்றம் கொண்டது.

403. ஈசனது நெற்றிக் கண்ணில் எழுந்த நெருப் பிலே உருவாக்கி, அப்பெருமான் இடக்கையிலே தாங்கிய நெருப்பிலே தோய்க்கப் பெற்றது போன்ற வேற்படை

உடம்பிடித் தெய்வ மிவ்வாறு
உருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர்
மாமுதல் தடிந்த தன்றே. 403

ஆடல்வேல் எறித லோடும்
ஆயிர வடிவாய் அண்ட
கூடமும் அலைத்த கள்வன்
அரற்றொடு குறைந்து வீழ்ந்தும்
வீடிலன் என்ப மன்னோ
மேலை நாள் வரத்தின் என்றால்
பீடுறு தவமே யன்றி
வலியது பிறிதொன் றுண்டோ. 404

கிள்ளையின் வதனம் அன்ன
கேழ்கிளர் பசுங்காய் தூங்கித்
தள்ளரும் நிலைத்தாய் நின்ற
மாவுருச் சாய்த லோடும்
உள்ளுறு சினமீக் கொள்ள
ஒல்லை தொல் உருவம் எய்தி
வள்ளுறை உடைவாள் வாங்கி
மலைவது கருதி ஆர்த்தான். 405

---

கண்டவர் அஞ்சக் கடிது சென்று மாமரத்தை அடியோடு வெட்டி அழித்தது.

404. அடிபட்ட சூரன் அலறி விழுந்தான்; ஆயினும் அழிந்தானல்லன்; தவத்தினும் வலியது வேறுண்டோ?

405. கிளியின் முகம் போன்ற பசுங் காய்களைத் தாங்கிய மாமர வடிவம் சாய்ந்தவுடன், சினங்கொண்ட சூரன் தன் முன்னைய உருவம் எய்தினான்; உடைவாளை எடுத்துப் போர் புரியக் கருதி ஆரவாரித்தான்.

## வேலின் வெற்றி

செங்கதிர் அயில்வாள் கொண்டு
செருமுயன் று உருமின் ஆர்த்துத்
துங்கமோ டெதிர்ந்து சீறும்
சூர்உரம் கிழித்துப் பின்னும்
அங்கம திருகூ றாக்கி
அலைகடல் வரைப்பில் வீட்டி
எங்கணும் மறைகள் ஆர்ப்ப
எஃகம் வான் போயிற் றம்மா. 406

புங்கவர்வழுத்திச் சிந்தும்
பூமழை யிடையின் ஏகி
அங்கியின் வடிவம் நீங்கி
அருளுருக் கொண்டு வான்தோய்
கங்கையிற் படிந்து மீண்டு
கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள்தம் பெருமான் செங்கை
எய்திவீற் றிருந்த தவ்வேல். 407

தாவடி நெடுவேல் மீளத்
தற்பரன் வரத்தால் வீடா
மேவலன் எழுந்து மீட்டும்
மெய்பகிர் இரண்டு கூறும்

406. இங்ஙனம் வாளேந்தி உருத்து நின்ற வல்லாளனைத் தாக்கிற்று வேற்படை; அவன் மார்பை இருகூறாகப் பிளந்து, அலைகடலில் தள்ளி, ஆகாய வழியே சென்றது.

407. அனல் உருவத்தை விட்டு அருள் உருவம் கொண்டது. வானவர் சொரிந்த பூமாரியின் இடையே விரைந்து சென்றது. ஆகாய கங்கையிற் படிந்தது. மீண்டும் முருகப் பெருமானது செங்கையில் வந்து அமர்ந்தது.

408. வேலாற் கூறுபட்ட சூரன் ஈசனது வரத்தின் தன்மையால் இறவாதிருந்தான். இரு கூறும் சேவலும் மயிலும் ஆயின. இரண்டும் சினங்கொண்டு முருகவேளை நோக்கிப் போர்புரிய வந்தன.

சேவலும் மயிலு மாகிச்
சினங்கொடு தேவர் சேனை
காவலன் தன்னை நாடி
அமர்த்தொழில் கருதி வந்தான். 408

மருள்கெழு புள்ளே போல
வந்திடு சூரன் எந்தை
அருள்கெழு நாட்டம் சேர்த்த
ஆங்கவன் இகலை நீங்கித்
தெருள்கெழு மனத்தன் ஆகி
நின்றனன் சிறந்தார் நோக்கால்
இருள்கெழு கரும்பொன் செம்பொன்
ஆகிய இயற்கை யேபோல். 409

தீயவை புரிந்தார் எனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ
அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றே
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான். 410

---

409. சேவலும் மயிலுமாக வந்த சூரனைக் கண்ணுற்றார் செவ்வேள். மேலோர் பார்வையால் இரும்பு பொன்னாதல் போல, கருணை வாய்ந்த திருக்கண் நோக்கம் பெற்ற சூரன் பகைமை நீங்கிப் பண்புற்றான்.

410. தீமைகள் செய்தவரும் முருகப் பெருமான் முன்னே சென்று சேர்ந்தால் தூயவராவர்; மேலான சிவ கதி அடைவர் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? இந்நாள் வரை கொடும் போர் செய்த சூரனும் அருள் பெற்று உய்ந்த கதை யொன்று போதாதோ?

அக்கணம் எம்பி ரான்தன்
அருளினால் உணர்வு சான்ற
குக்குட உருவை நோக்கிக்
கடிதின்நீ கொடியே யாகி
மிக்குயர் நமது தேரின்
மேவினை ஆர்த்தி என்னத்
தக்கதே பணியி தென்று
எழுந்தது தமித்து விண்மேல். 411

சீர்திகழ் குமர மூர்த்தி
செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியின் இருக்கை நீங்கி
உணர்வுகொண்டு ஒழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை ஏறிச்
சுமக்குதி எம்மை என்னாப்
பார்திசை வானம் முற்றும்
பரியென நடாத்தல் உற்றான். 412

வீசுறு சுடர்வேல் ஐயன்
வெய்யசூர் முதலைச் சாடித்
தேசுறு மஞ்ஞை ஊர்ந்து
வந்தது தெரிந்து போர்செய்

---

**411.** அறுமுகப் பெருமான், மெய்யறிவு பெற்ற சேவலை நோக்கி 'நீ நமது தேரிலே கொடியாக நின்று கூவுக' எனப் பணித்தார். அவ்வாறே ஆகாயத்தில் எழுந்து 'கொக்கறுகோ' என்று கூவிற்று அக்கோழி.

**412.** அந்நிலையில் முன்னைய மயில் வாகனத்தினின்றும் இறங்கினார் முருகன். மெய்யுணர்வு பெற்று நின்ற சூரமயில் மீது ஏறி "நீ எம்மைச் சுமப்பாயாக" என்று கூறி, அதனை விண்ணிலும் மண்ணிலும் நடத்தினார்.

**413.** வேற்படை தாங்கிய தலைவர் சூர்ப்பகை முடித்து, அழகிய மயில்மீது வரக்கண்ட பூதரும் வீரரும்,

காசினி யிடையே நின்ற
கணங்களும் வீரர் யாரும்
ஆசறும் இளவ லும்சென்று
அடிதொழு தார்த்துச் சூழ்ந்தார். 413

கார்தடிந்து துய்க்கும்
கனகடலின் நீர்வறப்பப்
போர்தடிந்து செல்லும்
புகர்வேல் தனைவிடுத்துச்
சூர்தடிந்தாய் அன்றே
தொழும் அடியேம் வல்வினையின்
வேர்தடிந்தாய் மற்றெமக்கு
வேறோர் குறை யுண்டோ. 414

என்று இயம்பி
எவருமினி தேத்துதலும்
கொன்றோர் அயில்வேல்
குமரன் அதுகேளா
அந்நா ரணன் விரிஞ்சன்
ஆதியாம் வானோர்க்குத்
துன்னோர் அருளின்
தலைமை புரிந்தனனே. 415

---

வீரவாகுவும் ஆர்வமுறச் சென்று அடிபணிந்து சூழ்ந்தார்கள்.

**414.** "எம் ஐயனே! நெடுங்கடலின் நீரைக் குடிக்கும் வடிவேல் விடுத்தாய்; அப்படையால் சூர் அறுத்தாய்; நின் அடியாரைப் பற்றி நின்ற வல் வினையின் வேர் அறுத்தாய்; இனி எமக்குக் குறையுண்டோ ?

**415.** என்று எல்லோரும் பரவிப் புகழ்ந்தார்கள். அதுகேட்ட குமரவேள், திருமால் பிரமன் முதலிய தேவர்க்குச் சிறந்த அருள் புரிந்தார்.

காவல் மன்னவன் இறந்தனன்
    எனும்உரை கன்னத்துள்
மேவும் எல்லையில் அசனி
    ஏறுண்டவெம் பணியே போல்
தேவி யாகிய பதும
    கோமளை யெனும் திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளி
    ஆகிய ததுவன்றோ. 416

## இரணியன் புலம்பல்

இந்த வாறிவர் அங்கியுள்
    மாண்டனர் இது நிற்கத்
தந்தை பட்டதும் சேவலும்
    மஞ்ஞையும் தானாகிக்
கந்த வேள் புடை வந்ததும்
    கண்டனன் கலங்குற்றுப்
புந்தி நொந்து நின்று இரணியன்
    வானிடைப் புலம்புற்றான். 417

நன்றென் பதை யுணராய்
    நானுரைத்த வாசகங்கள்
ஒன்றும் சிறிதும்
    உறுதி யெனக் கொண்டிலையே

---

416. மன்னன் இறந்தான் என்னும் சொல் செவியிற் பட்டதும், இடியினால் அடிபட்ட நாகம்போல் உயிர் துறந்தாள் அவன் தேவியாகிய பதுமை. தலையாய அன்பின் தன்மை அதுவன்றோ ?

417. மற்றைய மனைவியரும் நெருப்பில் இறங்கி இறந்தனர். இது நிற்க சூரன் இரு கூறாகி வீழ்ந்ததும், சேவலும் மயிலும் ஆகிச் செவ்வேளிடம் சென்றதும் கண்டு கலங்கினான் அவன் மைந்தனாகிய இரணியன். ஆகாய வீதியில் நின்று புலம்பலுற்றான்.

418. "என் அரசே! அன்றே நான் சொன்னேனே! என் மொழியை நன்றென உணர்ந்தாயல்லை; உறுதி யெனக் கொண்டாயில்லை; இறப்பதற்கோ இப்போர் புரிந்

பொன்றும் படிக்கோ
　　பொருதாய் புரவலனே
என்றுன்னை முன்போல்
　　இருந்திட நான் காண்பதுவே. 418

ஆழியான் வேதன்
　　அமரர்க் கிறை முதலோர்
வாழியாய் என்று
　　வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப்
　　புராரி சிறு வன்தேரில்
கோழியாய் நின்று
　　விலா வொடியக் கூவுதியோ. 419

ஓகையால் அண்டத்
　　துயிர்களெலாம் வந்திறைஞ்சச்
சேகையாய் மல்கும்
　　திருத்தாள் கொண் டுற்றிடும்நீ
வாகையார் கின்ற
　　வடிவேற் கரத்தோனைத்
தோகையாய் நின்று
　　சுமக்குதிய்யா தோன்றுவோ. 420

---

தாய்! அந்தோ! இனி என்று தான் உன்னை அரசனாய்க் காண்பேனோ?

419. திருமாலும் பிரமனும் இந்திரனும் ஏனைய வானவரும் வாழ்க வாழ்க என வாழ்த்தி நிற்க அரசு வீற்றிருந்த ஐயனே! நீ சிவகுமாரனாகிய சிறுவன் தேரில் கோழியாய் நின்று விலா வொடியக் கூவுகின்றாயோ?

420. அண்டத்திலுள்ள உயிர்கள் எல்லாம் அடி வணங்க, அரியாசனத்தில் அரசு வீற்றிருந்த நீ, வாகை பெற்ற வேலவனைத் தோகை மயிலாய் நின்று சுமக்கின்றாயோ?

என்று கனகன் இரங்கி நெடுஞ் சேணின்
நின்று தளர்ந்து நெடிதுயிர்த்துப் பூதர்எனைத்
தின்று சினம் தீர்வர் தெரியின் எனச் சிந்தைசெய்து
துன்றுதிரை வேலையிடைத் தொன்மைபோல் புக்கனனே. 421

புக்க கனகன்
புலர்ந்து புகரோன் பால்
அக்கணமே எய்தி
அழிவுற்ற தந்தை யர்க்கும்
தக்க துணைவர்க்கும்
தாயர்க்கும் ஏனை யர்க்கும்
மிக்க கடன்கள்
விதி முறையே செய்தனனே. 422

## வானவர் துயரம் தீர்தல்

வம்மின்கள் வம்மின்கள்
வானத்தீர் எல்லீரும்
நும்மை அயர் வித்த
நொறில் பரித்தேர் வெஞ்சூரை

---

421. என்று இரணியன் இரங்கி யழுதான்; தளர்ந்து பெருமூச்செறிந்தான்; அசுரனாகிய என்னைக் கண்டால் பூதர்கள் கொன்று சினம் தீர்வர்; ஆதலால் இங்கு நிற்றல் ஆகாது என்று எண்ணி முன்போல் கடலிற் புகுந்து மறைந்தான்.

422. துன்புற்ற மனத்தோடு குல குருவாகிய சுக்கிரனிடம் சென்றான் இறந்து பட்ட தந்தையர்க்கும், உடன் பிறந்தார்க்கும், தாயர்க்கும், மற்றைய சுற்றத்தார்க்கும் முறைப்படி எள்ளும் நீரும் இறைத்துக் இறுதிக் கடன் கழித்தான். இது நிற்க ;

423. (அறுமுகப் பெருமான் ஆணைப்படி அமரரைச் சிறை மீட்கச் சென்ற வீரன் அவரை நோக்கி) வானவரே! வருக, வருக! உம்மைச் சிறை செய்த சூரனை எம்மை யாளுடைய ஐயன் அழித்துவிட்டார்! தேரும் சீரும் பெற்

அம்ம அவுணர்
 அனிகத் துடன் எங்கோன்
இம்மெனவே வேலால்
 இதுபோழ் தெறிந் தனனே. 423

என்றுங் கிசைப்ப
 இமையோர் அதுகேளாப்
பொன்றுது முத்தி
 புகுந்தோர் எனமகிழ்ந்து
வன்தாள் மிசைப் பிணித்த
 வல்லிகளின் மூட்டறுத்துச்
சென்றார் அவுணன்
 திருநகரம் நீங்கினரே. 424

குன்றெறிந்தவன் அமரர்பால்
 பேரருள் கொடு நோக்கி
நன்றி யில்லவன் சிறையிலடைப்
 பலபகல் நணுகுற்றீர்
துன்று பேரிடர் மூழ்கினீர்
 இங்கினித் துயரின்றி
என்றும் வாழ்குதிர் துறக்கமேல்
 வெறுக்கையில் இருந்தென்றான். 425

---

றிருந்த சூரனை வேற்படையால் முருகவேள் ஒழித்து விட்டார்!

**424.** என்று வழங்கிய மொழிகளைக் கேட்டார் வானவர். கூட்டோடு வீட்டின்பம் பெற்றார்போல் மகிழ்ந்தனர்; கால்களிற் பூட்டிய விலங்குகளை ஒடித்தெறிந்தனர்; கொடிய சிறையமைந்த நகரினின்றும் விடுதலை பெற்றுச் சென்றனர்.

**425.** குமரேசன் அன்னாரைப் பெருங் கருணையோடு நோக்கினார்; "நலம் அறியாத சூரன் சிறையில் அகப் பட்டு நெடுநாள் நலிவுற்றீர். இனித் துயரம் இன்றி விண் ணுலகத்தில் வளமெலாம் பெற்று வாழ்வீராக" என்று திருவாய் மலர்ந்தார்.

கருணை யங்கடல் ஆகியோன்
கனைகடற் கிறையாகும்
வருணன் மாமுகம் நோக்கியே
வெய்யசூர் வைகுற்ற
முரணு றும் திறல் மகேந்திர
நகரினை முடிவெல்லைத்
தரணி யாமென உண்குதி
ஒல்லையில் தடிந்தென்றான். 426

## கந்தவேள் திருச்செந்தூரை அடைதல்

ஆன காலையில் அறுமுகன்
முகுந்தனும் மலரோனும்
வானு ளோர்களும் இறைவனும்
வழுத்தினர் மருங்காக
ஏனை வீரர்கள் யாவரும்
புடைவர இகல் பூதத்
தானை ஆர்த்துடன் சென்றிடச்
செருநிலம் தணப்புற்றான். 427

கலங்கல் கொண்டிடும் மகேந்திர
வரைப்பினைக் கடந்தேபின்
இலங்கை மாநகர் ஒருவியே
அளக்கரை இகந்தேகி

426. பின்பு கருணையங் கடலாகிய முருகவேள், கருங் கடலை ஆளும் வருணனை நோக்கி "சூரன் வீற்றிருந்த வீர மகேந்திர நகரை விரைவில் அழித்திடுக" எனப் பணித்தார்.

427. (அவ்வாறே செய்து முடித்தான் வருணன்) திருமால் பிரமன் முதலிய தேவர்களும், வானவர்கோனும் போற்ற, மற்றைய வீரர்கள் மருங்கே வர, பூதகணங்கள் புடை சூழ, போர்க்களத்தை விட்டுப் புறப்பட்டார் முருகவேள்.

428. கருங்கடலால் விழுங்கப்பட்ட மகேந்திர நகரின் எல்லை கடந்து, இலங்கைமா நகரையும் கடந்து

நலங்கொள் சீருடைச் செந்தியின்
தொல்லைமா நகர்எய்தி
அலங்க லஞ்சுடர் மஞ்ஞை நின்று
இழிந்தனன் அயில்வேலோன். 428

அன்னதொரு போழ்துதனில்
ஆறிரு தடந்தோள்
முன்னவனை நான்முகவ
னேமுதல தேவர்
சென்னிகொடு தாழ்ந்துசிறி
யேங்களிவண் உன்தன்
பொன்னடி அருச்சனை
புரிந்திடுதும் என்றார். 429

எஞ்சலில் அருச்சனை
இயற்றி இணை இல்லோன்
செஞ்சர ணினைத்தமது
சென்னி கொடு தாழா
அஞ்சலிசெய் தேத்திடலும்
ஆங்கவரை நோக்கி
நெஞ்சுறு மகிழ்ச்சி யொடு
நீடருள் புரிந்தான். 430

---

செம்மை வாய்ந்த செந்திமாநகரை யடைந்து, முருகப் பெருமான் மயில் வாகனத்தை விட்டு இறங்கினார்.

429. அப்பொழுது அறுமுகக் கடவுளை பிரமன் முதலிய தேவர்கள் தலையால் வணங்கி "அடியவர்களாகிய நாங்கள் நின் பொன்னடி போற்றி அர்ச்சனை புரிய ஆசைப்படுகின்றோம்" என்று வேண்டினர்.

430. (அறுமுகப் பெருமான் அதற்கு இசைந்தருளினார்.) வானவர் சிறப்பாக அர்ச்சனை இயற்றினர்; அவர் திருவடியைத் தம் முடியிற் சூடினர். வணங்கி வாழ்த்தினர். அன்னார் அன்புடன் செய்த வழிபாட்டை ஏற்று மகிழ்ந்த குமரேசர் பெருங்கருணை பாலித்தார்.

# 5. தேவ காண்டம்

பொருவரும் மகேந்திர புரத்தை நீங்கியே
தரணியில் வந்தவா சாற்றி னும்இனிப்
பெருமைகொள் இந்திரன் பெண்ணை எம்பிரான்
திருமணம் செய்திடும் செய்கை செப்புவாம். 1

## இந்திரன் விருப்பம்

காய்ந்திடு தம்பகை கடந்து பொன்னகர்
வேந்தியல் முறையருள் வேற்கை வீரற்குக்
கூந்தலம் சிறுபுறக் குஞ்ச ரம்தனை
ஈந்திட மகபதி இதயத் தெண்ணினன். 2

மற்றது போழ்தினில் மகத்தின் செம்மலோர்
ஒற்றனை நோக்கியே ஒல்லை மேருவாம்
பொற்றையில் மனைவியைப் புதல்வி தன்னுடன்
இற்றையில் விளித்தனை ஏகுநீ என்றனன். 3

---

1. ஒப்பற்ற வீரமகேந்திரபுரத்தை விட்டு இங்கு முருகவேள் எழுந்தருளியதைக் கூறினேம், இனி அப் பெருமான் இந்திரன் மகளைத் திருமணஞ் செய்த வரலாற்றைச் சொல்லுவோம்.

2. கொடுமை செய்த பகைவரை வென்று விண்ணுலக ஆட்சியை மீட்டுக் கொடுத்த வெற்றிவேல் வீரனுக்கு, அழகிய கூந்தலையுடைய தன் மகள் தெய்வயானையை மணஞ் செய்து கொடுக்க எண்ணினன் இந்திரன்.

3. அக்கருத்தை மனத்திற் கொண்டு ஒரு தூதுவனை அழைத்தான் ; அவனை நோக்கி "நீ இப்பொழுதே மேரு மலைக்குச் செல்க; அங்குள்ள என் தேவியையும், புதல்வியையும் இன்றே அழைத்து வருக" என்றான்.

என்றலும் தூதுவன் இசைந்து மேருவில்
சென்றனன் புலோமசைத் தெரிவை முன்புபோய்
நின்றனன் வணங்கினன் நினது சிந்தைபோல்
ஒன்றிய கேள்என உரைததல் மேயினான். 4

மாண்டனன் வெய்யசூர் மதலை தன்னொடு
சேண்தொடர் அமரரும் சிறையின் நீங்கினார்
ஆண்டலை உயர்த்தவன் அனிகம் தன்னொடும்
மீண்டனன் திருப்பரங் குன்றம் மேயினான். 5

நின்றிட அனையது நினது நாயகன்
உன்தனை மகளொடும் ஒல்லை யிற்பரங்
குன்றிடை இருக்கையில் கொண்டு செல்கென
இன்றெனை விடுத்தனன் ஏகு நீஎன்றான். 6

அம்மொழி வினவலும் அணங்கின் நல்லவள்
விம்மிதம் உற்றனள் விழுமம் நீங்கினாள்
எம்மையும் இல்லதோர் இன்பம் எய்தினாள்
கொம்மென எழுந்தனள் குமரி தன்னொடும். 7

---

4. உடனே தூதுவன் எழுந்தான்; மேரு மலைக்குச்சென்றான்; இந்திராணியின், முன்னின்று வணங்கினான்; "உன் விருப்பம் போல் எல்லாம் நடந்தது; அதனைக் கேள்" என்று சொல்லத் தொடங்கினான்.

5. "கொடிய சூரன் மாண்டான்; உன் மைந்தனும் தேவரும் சிறையினின்று மீண்டார். சேவற் கொடியயோனாகிய செவ்வேள் வாகை சூடிய சேனையோடு திரும்பி வந்து திருப்பரங்குன்றத்தில் அமர்ந்துள்ளார்.

6. அது நிற்க, உனது நாயகன் திருப்பரங்குன்றத்திற்கு உன்னையும் மகளையும் அழைத்து வரும்படி என்னை அனுப்பினான். ஆதலால் இப்பொழுதே புறப்படுக" என்றான்.

7. அதுகேட்ட இந்திரை விம்மித முற்றாள்; விசாரம் விட்டாள்; என்று மில்லாததோர் இன்பம் எய்தினாள்; கன்னியை உடன் கொண்டு புறப்பட்டாள்.

கண்டனள் மதலையைக் கருணை யால்தழீஇக்
கொண்டனள் மகிழ்ந்தனள் கொங்கை பாலுக
விண்டனள் கவற்சியை வெறுமை யுற்றுளோர்
பண்டுள பெருநிதி படைத்த பான்மைபோல். 8

## இந்திரன் மகளை மணந்துகொள்ளக் கந்தவேள் இசைதல்

கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை
கட்டல் செய்தாய்
இங்ஙின்ற தேவர் சிறைமீட்
டனைஎன் தனக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தாய் அது
முற்றும் நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன்செயத்
தக்க துண்டோ. 9

முந்தே தமியேன் பெறுமங்கை
இம்மொய் வரைக் கண்
வந்தே அமர்வாள் அவள்தன்னை
வதுவை செய்து

---

8. திருப்பரங்குன்றத்தை அடைந்தாள்; தன் மகனைக் கண்டாள்; அன்புடன் தழுவிக் கொண்டாள்; வறுமை யுற்றவர் பெருநிதி பெற்றாற் போன்று கவலை தீர்ந்து களிப்புற்றாள்.

9. அப்போது இந்திரன் முருகவேளிடம் போந்து, "ஐயனே! வலிமை சான்ற அசுரர் திமையைக் களைந்தாய்! வானவரைச் சிறையினின்றும் விடுவித்தாய்! எனக்கு முன்னைய ஏற்றமும் தோற்றமும் தந்தாய்! இதற்கெல்லாம் சிறியேன் செய்ந் நன்றியாகச் செய்யத் தக்கது ஏதேனும் உண்டோ?

10. அடியேன் பெற்ற மங்கை இப்போது இங்கே வந்திருக்கின்றாள். அவளைத் தேவரீர் மணந்து கொண்

கந்தே புரைநின் பெருந்தோளில்
 கலத்தி யாங்கள்
உய்ந்தே பிறவிப்பயன் பெற்றனம்
 ஓங்க என்றான். 10

என்னும் துணையில் அமரேசனை
 எந்தை நோக்கி
அந்நங்கை தானும் மிக நோற்றனள்
 ஆத லால்நீ
முன்னும் படியே மணம்நாளை
 முடித்தும் என்னத்
தன்னும் கடந்த மகிழ்வெய்தித்
 தருக்கி நின்றான். 11

## தெய்வ யானை திருமணம்

கோல மாமணி குயிற்றிப் பொன்னரி
மாலை நாற்றியே வனப்புச் செய்திடும்
சாலை புக்கனன் தனக்கு வேறொரு
மூல மில்லதோர் முதலின் வந்துளான். 12

ஆன காலை அரியயன் நாடொறு
ஞான நாயகன் நங்கையும் தானுமோர்
மான மேற்கொண்டு மாயிரும் சாரதர்
சேனை சூழ்தரச் சேணிடைத் தோன்றினான். 13

---

டால் நாங்கள் பிறவியின் பயனைப் பெற்றவர்கள் ஆவோம்'' என்று பேசினான்.

11. அப்போது முருகப் பெருமான் இந்திரனை நோக்கி "அரசே! அந் நங்கையும் என்னைக் குறித்துத் தவம் புரிந்தாள். ஆதலால் உன் கருத்துப்படி அவளை நாளையே மணம் புரிந்து கொள்வோம்'' என்றார். அம் மொழி கேட்ட இந்திரன், தன்னையும் கடந்த ஆனந்த முற்றுத் தருக்கி நின்றான்.

12. திருமணச்சாலை, அழகுற இலங்கிற்று. மணிகளாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட அச்சாலையிற் போந்தார் முருகவேள்.

13. அவ்வேளையில் ஞானநாயகனாகிய சிவபெருமான்

அம்மை யும்தன தத்தனும் வந்தது
செம்மல் கண்டு சிறப்புடை ஓகையாய்
விம்மி தங்கொண்டு மேதகும் அன்பினால்
இம்மெ. னக்கடி தேயெழுந் தானரோ. 14

அனைய காலையில் ஆதியம் பண்ணவன்
இனிது மானத் திழிந்து கணத்துடன்
புனித நீடு பொலன் மணிச் சாலையுள்
வனிதை யாளொடும் வந்துபுக் கானரோ. 15

அந்தஅமை யந்தனில்
அதற்கிசைவு கொண்டே
பைந்தொடி நல்லார்கள் அமர்
பாங்கர்தனில் ஏகி
நந்தமை யளித்தருளும்
நங்கை வரு கென்று
இந்திரன் விளித்திடலும்
ஏந்திழை எழுந்தாள். 16

கல்லுயர் பொருப்பினிடை காமரடி செல்ல
வல்லனகொல் என்றுகணி நூபுரம் அரற்ற
மெல்லிடை வருந்துமென மேகலை இரங்க
எல்லவரும் உள்மகிழ எம்மனை நடந்தாள். 17

---

பூதகணம் புடை சூழ உமாதேவியோடு ஒரு விமானத்தில் எழுந்தருளினார்.

14. அம்மையும் அத்தனும் வரக்கண்டு களிப்புற்றார் முருகவேள்; உள்ளத்திலே அன்பு பெருகிற்று; ஆசனத்தை விட்டு எழுந்து நின்றார்.

15. அப்போது ஈசன் உமையோடு விமானத்தை விட்டிறங்கினார். பூத கணங்களுடன் புனிதமான பொன் மணிச் சாலையிற் புகுந்தார்.

16. இந்திரன், மாதர்கள் இருந்த இடத்திற்குச் சென்று தன் அருமைத் திருமகளை வருக என்று அழைத்தான். மங்கையும் உடனே எழுந்தாள்.

17. கல்லுயர்ந்த இக்குன்றத்தில் எமது மங்கையின் மெல்லடிகள் நடக்க வல்லனவோ என்று வருந்துவபோல்

இன்ன எல்லையில் இந்திரன் தெய்வதக்
கன்னி அன்னைக் கடிமணச் சாலையின்
முன்னர் உய்ப்ப முனிவரும் தேவரும்
அன்னை வாழியென் றேயடி போற்றினர். 18

திருத்த குமதிறல் சேயையும் சேண்மிசை
அருத்தி பெற்ற அணங்கையும் முற்படும்
பெருத்த பொன்மணிப் பீடிகை மீமிசை
இருத்தி வைத்தனள் யாவையும் ஈன்றுளாள். 19

அண்டர் தமக்கிறை ஆங்கவர் கோலம்
கண்டு புகழ்ந்து கரந்தொழு துச்சி
கொண்டு மிளிர்ந்து குளிர்ந்திடு தேறல்
உண்ட சுரும்பினும் உள்மகிழ் வுற்றான். 20

செம்மல் பதங்கள் செழும்புனல் ஆட்டிக்
கைம்மலி யும்களப் பந்தனை ஊட்டி
அம்மலர் சூட்டி அகிற்புகை காட்டி
நெய்ம்மலி பூஞ்சுடர் நீட்டினன் அன்றே. 21

---

பாதச் சிலம்புகள் ஒலிக்க, நடையினால் இடை நலியுமே என்று மணிமேகலை இரங்கி ஏங்க, மற்றெல்லோரும் இன்புற்றிருக்கத் தெய்வயானை நடந்துவந்தாள்.

18. மங்கையைக் கொண்டு மணச்சாலையிற் சேர்த்தான் இந்திரன். அவன் திருவுருவைக் கண்ட தேவரும் முனிவரும் "அன்னையே: வாழ்க" என்று அடி தொழுதார்கள்.

19. மணமகனையும் மணமகளையும் உயர்ந்த பொன்னாசனத்தில் ஏற்றி வைத்தார் உலகம் ஈன்ற உமா தேவியார்.

20. இருவர் கோலத்தையும் கண்ணாரக் கண்டான் இந்திரன்; மனமாரப் புகழ்ந்தான்; உச்சிமேற் கரங் குவித்தான்; உள்ளம் குளிர்ந்தான்; மதுவுண்ட வண்டு போல் மகிழ்வுற்றான்.

21. முருகன் திருவடியைப் புனித நீராட்டினான்; சந்தனக் குழம்பை ஊட்டினான்; கந்தமலரைச் சூட்டினான்;

அன்னுழி இந்திரன் ஆறுமு கேசன்
தன்னொரு கையிடைத் தந்தியை நல்கி
நின்னடி யேன்இவள் நேர்ந்தனன் என்னுக்
கன்னல் உமிழ்ந்த கடிப்புனல் உய்த்தான். 22

மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றன னல்கழல் சேர்ந்தார்க்கு
அருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன். 23

செங்கம லத்திறை சிந்தையின் ஆற்றி
அங்கையின் ஈந்திட ஆண்டகை கொண்ட
மங்கல நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான். 24

இவ்வகை மன்றல் இயற்றிய பின்னைத்
தெய்வத மாதொடு செங்கதிர் வேலோன்
அவ்வையொ டத்தனை அன்பொடு சூழ்ந்து
செவ்விதின் மும்முறை சேவடி தாழ்ந்தான். 25

---

அகிற் புகை காட்டினுன்; தீபத்தால் ஆராதனை செய்தனர்.

22. அறுமுகன் கையில் தன் அருமைத் திரு மகளை ஒப்புவித்து "அடியேன் இவளைத் தந்தேன்" என்று தாரை வார்த்தான்.

23. அடியார்க்கு இருமையுந்தரும் பெருமானுகிய முருகன் இந்திரன் வார்த்த நீரைத் திருக்கரத்தில் ஏற்றருளினுர்.

24. அந்நிலையில் பிரமதேவன் கருத்தினுல் ஆக்கி, கரத்தினுல் அளித்த திருமங்கல நாணை வாங்கினுர் முருகவேள். அழகிய தெய்வயானையின் கண்டத்தில் அதனை அணிந்தார்; அவள் திருமுடியில் நறுமலர் மாலையும் சூட்டினுர்.

25. திருமணச் சடங்குகள் நிறைவேறியவுடன், முருகவேள் தெய்வயானையோடு அம்மையையும் அத்தனையும் அன்போடு வலம் வந்தார்; மூன்று முறை செம்மையாக அவர்தம் சேவடியில் விழுந்து வணங்கினுர்.

அடித்த லத்தில்வீழ் மக்களை
இருவரும் ஆர்வத்து
எடுத்த ணைத்துஅருள் செய்துதம்
பாங்கரில் இருத்தி
முடித்த லத்தினில் உயிர்த்துமக்கு
எம்முறு முதன்மை
கொடுத்தும என்றனர் உவகையால்
மிக்கெகாள் கையினர். 26

அறுமு கன்தனை அணங்கினை
அவையுளோர் எவரும்
முறையில் வந்தனை செய்தலும்
முழுதருள் புரிந்து
கறை விளங்கிய கண்டனும்
கவுரியும் கடிதின்
மறைதல் உற்றனர் பரிசனம்
தன்னொடும் மன்னோ. 27

இனைய காலையில் அரியணைப்
பீடம் நின்று இழியா
அனைவரும் தொழு துடன்வர
ஆறுமா முகத்துப்

---

26. அடிபணிந்த மகனையும் மருகியையும் ஈசனும் தேவியும் இனிதெடுத்தணைத்தனர்; அருள் செய்தனர்; அருகில் இருத்தினர்; உச்சி முகர்ந்தனர்; "உமக்கு எமது முதன்மைப் பதம் தந்தோம்" என்று மனமகிழ்ந்து மொழிந்தனர்.

27. முருகப் பெருமானையும் அவர் தேவியையும் சபையில் இருந்தவர் எல்லாம் முறையாக வழிபாடு செய்தனர். அன்னவர் எல்லார்க்கும் இன்னருள் புரிந்து, ஈசனும் உமாதேவியும் பரிசனங்களோடு மறைந்தனர்.

28. அப்போது சிங்காசனத்தினின்றும் இறங்கினார் கந்தப் பெருமான்; மங்கலவாத்தியம் முழங்க, மெய்யடியார்

புனித நாயகன் மங்கல
இசையொடும் போந்து
தனது கோயிலுட் புக்கனன்
இறைவியும் தானும். 28

## இந்திரன் முடி சூடுதல்

விண்தொடர் பொன்னகர்
மேலைச் சூர்மகன்
நுண்துகள் செய்திட
நொய்தின் உற்றதும்
அண்டர்கள் இறையவன்
அகம்கொள் வேட்கையும்
கண்டனன் குமரவேள்
கருணை ஆழியான். 29

வீக்குறு கழல் விமல நாயகன்
ஆக்கமில் விண்ணுல களிக்கும் பெற்றியால்
தேக்கிய விஞ்சையின் தெய்வத் தச்சனை
நோக்கினன் இனையன நுவறல் மேயினான். 30

செல்லலை அகன்றிடு தேவர் மன்னவன்
எல்லையில் வளனொடும் இருக்கும் பான்மையால்
தொல்லைய தாமெனத் துறக்கம் நல்குதி
வல்லையில் என்றலும் வணங்கிப் போயினான். 31

---

அனைவரும் தொழுது வணங்க, தெய்வயானையோடு தமது திருக்கோயிலிற் புகுந்தார்.

29. விண்ணுலகத்திலுள்ள பொன்னகரம் சூரன் மகனாகிய பானுகோபனால் அழிந்து பொடி பட்டத்தையும், இந்திரன் மனத்திலுள்ள விருப்பத்தையும் அறிந்தார் முருகவேள்.

30. உருவழிந்த பொன்னாட்டை முன்போல் ஆக்கத் திருவுளங் கொண்டார். வித்தகனாகிய தெய்வத்தச்சனை நோக்கி,

31. "துயர் ஒழிந்த இந்திரன் அளவற்ற செழுமையுடன் அமர்ந்திருக்குமாறு பொன்னாட்டை முன்னிருந்த

பொன்னி னுக்குப் புகலிட மாகவான்
மன்னி னுக்குச்செய் மாநகர் வண்மையை
என்னி னுக்கும் இயம்பவற் ருேகலை
மின்னி னுக்கும் விதிப்பரும் தன்மையே. 32

அன்னதோர் அளவை தன்னில்
அறுமுகன் அலரிப் புத்தேள்
முன்னவர் தம்மை யெல்லாம்
முழுதருள் புரிந்து நோக்கி
இந்நகர் அரசு போற்ற
இமையவர் இறைவற் கின்னே
பொன்னணி மவுலி தன்னைப்
பொள்ளெனப் புனைதிர் என்ருன். 33

அரசியல் உரிமைத் தெல்லாம்
ஆங்கவர் அழைத்துக் கங்கை
திரைசெறி தெண்ணீர் ஆட்டிச்
செழுந்துகில் கலன்கள் சாந்தம்
விரைசெய் தார் புனைந்து சீய
வியன்பெருந் தவிசின் ஏற்றி
வரிசையோடு இந்தி ரற்கு
மணிமுடி சூட்டி ஞரால். 34

---

வண்ணம் ஆக்குவாய்" எனப் பணித்தார். அப்படியே செய்வேன் என்று அவன் வணங்கிச் சென்ருன்.

32. திருமகளுக்கே புகலிடமாகுமாறு அவன் பொன்னகரை மீளவும் ஆக்கினன், என்ருல் அதன் செழுமையை என்னுல் உரைக்க ஒண்ணுமோ? கலைமகளாலும் உரைக்க முடியாதே!

33. அப்பொழுது முருகப்பெருமான் பிரமன் முதலிய தேவர்களைக் கருணையோடு நோக்கி, "இந்நகரில் இருந்து அரசு புரிதற்குரிய இந்திரனுக்கு இன்றே திருமுடி சூட்டுக" என்ருர்.

34. உடனே அன்ஞர் அரசியலுக்குரிய அனைத்தும் சேகரித்தனர்; கங்கை யாற்றின் நீரால் இந்திரனுக்கு அபிஷேகம் செய்தனர்; சிறந்த ஆடையணிகளால் அலங்

இந்திரன் அனைய காலை
எம்பிரான் முன்னர் ஏகி
வந்தனை புரிந்து போற்றி
வளமலி துறக்க நாடு
முந்துள அரசும் சீரும்
முழுதொருங் களித்தி எந்தாய்
உய்ந்தனன் இதன்மேல் உண்டோ
ஊதியம் ஒருவர்க் கென்றான். 35

என்றலும் அருள்செய்து அண்ணல்
இந்நகர் அரசு போற்றி
நன்றிவண் இருத்தி யென்று
நாகர்கோன் தன்னை வைத்து
நின்றுள அமரர் தம்மை
நிலைப்படும் இருக்கைக்கு ஏவித்
தன்துணை அணங்கும் தானும்
தன்பெருங் கோயில் போந்தான். 36

---

கரித்தனர்; சாந்தமும் மாலையும் அணிந்தனர்; அரியா சனத்தில் அமர்த்தி அழகிய மகுடம் சூட்டினர்.

35. விண்ணவர் வேந்தனாகிய இந்திரன் முருகவேளின் முன்னே சென்றான்; வந்தனை புரிந்து வணங்கினான்; "வானவர் நாட்டின் அரசுச் செல்வமும் வழங்கிய எந்தாய்! வாழ்ந்தேன் யான்; என்னினும் பெருவாழ்வு இன்னொருவருக்கு உண்டோ?

36. என்று ஆர்வமொழி பேசினான். அது கேட்ட முருகவேள் அருள் புரிந்தார். "இந்நகரில் நன்றாக அரசு புரிந்து கொண்டிரு" என்று திருவாய் மலர்ந்தார். தேவர்களை அவரவர் இடங்களுக்கு விடைகொடுத்து அனுப்பினார். தெய்வயானையும் தாமும் தமது திருக்கோயிலை அடைந்தனர்.

தூய்யநேதார் மறைகளாலும்
துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபேர் அடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீர் அடியார் வாழ்க
வாழ்கஇப் புவனம் எல்லாம். 37

---

37. தூய மறைகளாலும் துதித்தற்கரிய முருகவேள் திருவடி வாழ்க; அவர்க்குரிய சேவலும் மயிலும் வாழ்க; கொடிய சூரன் மார்பைப் பிளந்த நெடுவேல் வாழ்க; அப்பெம்மான் அடிபோற்றும் மெய்யடியார் வாழ்க; வாழ்க இவ்வுலகம் எல்லாம்.

---

# 6. தக்ஷ காண்டம்

வெள்ளியம் கிரியின் ஓர்சார்
விளங்கிய கந்த வெற்பின்
நள்ளுறு நகரம் தன்னில்
நங்கையோடு இனிது மேவும்
அள்ளிலை வேற்கை நம்பி
அம்புவி எயினர் போற்றும்
வள்ளியை வதுவை செய்த
மரபினை வழாது சொல்வாம். 38

கள்ளிறைத் திடும்பூந் தண்டார்க்
கடம்பணி காளை பன்னாள்
பிள்ளைமைத் தொழில்மேற் கொண்டு
பெட்புடன் ஒழுகும் வண்ணம்
வள்ளியைத் தன்பால் வைத்து
வள்ளிவெற் பென்னும் நாமம்
உள்ளஅக் கிரியின் மேன்மை
உரைத்திடும் அளவிற் றாமோ. 39

---

38. திருக் கயிலாய மலையின் ஒருபுறம் விளங்கும் கந்தமாதன மலையின் நடுவேயுள்ளது முருகன் திருக்கோவில். அங்கு தெய்வயானையோடு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் குறவர்களால் ஆதரித்து வளர்க்கப் பட்ட வள்ளியம்மையைத் திருமணஞ் செய்துகொண்ட முறையினைச் சொல்வோம்.

39. தேனொழுகும் குளிர்ந்த கடம்பமாலை யணிந்த குமரவேள் பால லீலை புரியும்வண்ணம், வள்ளி என்னும் கன்னியைத் தன்னிடம் கொண்ட மலையொன்று (தமிழ் நாட்டிலே) உண்டு. அதற்கு வள்ளிமலையென்று பெயர். அதன்பெருமை சொல்லும் தரத்ததன்று.

இன்னபல் வளமை சான்ற
கிரிதனில் எயினர் ஈண்டி
மன்னிய தாங்கோர் சீறூர்
வதனம் ஆறுடைய வள்ளல்
பின்னரே தன்பால் மேவப்
பெருந்தவம் தன்னை யாற்றிப்
பொன்னகர் இருந்த வாபோல்
புன்மையற் றிருந்த தம்மா. 40

ஆயதோர் குறிச்சி தன்னில்
அமர்தரும் இராதர்க்கெல் லாம்
நாயக நுகம்பூண் டுள்ளோன்
நாமவேல் நம்பி என்போன்
மாயிரும் தவமுன் செய்தோன்
மைந்தர்கள் சிலரைத் தந்து
சேயிழை மகட்பே றுன்னித்
தெய்வதம் பராவி யுற்றான். 41

அந்த அளவை தனில்
ஆறிரண்டு மொய்ம்புடைய
எந்தை அருள் உய்ப்ப
எயினர் குலக் கொற்றவனும்

---

40. பலவகையான வளங்களை உடையது அம்மலை. அங்கு வேடர் வாழ்ந்த சிற்றூர் ஒன்று விளங்கிற்று. முருகனருளைப்பெற நின்ற அவ்வூர் மாசற்றதா யிருந்தது.

41. அத்தகைய குறிச்சியில் குறவர் பலர் வாழ்ந்தனர்; அன்னவர் தலைவனாய் அரசு செய்தவன் நம்பி என்ற வேடன். அவனுக்கு ஆண்மக்கள் இருந்தனர். பெண் குழந்தை வேண்டும் என்று ஆண்டவனைத் தொழுதான்.

42. அப்பொழுது முருகப்பிரான் அருளால் நம்பியும் அவன் மனைவியும் பரிசனங்களோடு பசுந் தினைப் பயிர் நிறைந்திருந்த புனத்திற் புகுந்தனர்.

பைந்தொடி நல்லாரும்
பரிசனங்கள் பாங்கெய்தச்
செந்தினையின் பைங்கூழ்
செறிபுனத்துப் புக்கனரே. 42

கொல்லை புகுந்த
கொடிச்சியொடு கானவர்கோன்
அல்லிகர் குழலாள்
அம்மென் குரல்கேளா
எல்லை யதனில்
எழுமொலியங் கேதென்று
வல்லை தனில் அவ்
வறும் புனத்தில் வந்தனனே. 43

வந்தான் முதலெடுத்த
வள்ளிக்குழி யில்வைகும்
நந்தா விளக்கனைய
நங்கை தனை நோக்கி
இந்தா இஃதோர்
இளங்குழவி என்றெடுத்துச்
சிந்தா குலந்தீரத்
தேவிகையில் ஈந்தனனே. 44

வென்றிச் சிலையெடுத்து
மேலைப் புனமகன்று
குன்றக் குறவன்
குதலைவாய்க் கொம்பினுடன்

---

43. அங்கு ஒரு மெல்லிய குரல் அவர் காதில் விழுந்தது. உடனே அவ்வொலி எழுந்த இடம்நோக்கி நடந்தனர்.

44. வள்ளிக் கிழங்கெடுத்த குழியில் சுடரொளி போன்ற ஒரு குழந்தையைக் கண்டான் நம்பி வேடன். அதனை எடுத்துத் தன் மனைவியின் கையிற் கொடுத்தான்;

45. அம்மகவுடன் மனையாளையும் அழைத்துக் கொண்டு தினைப்புனங் கடந்து குறிச்சியை அடைந்தான்.

மன்றல் துணைவிதனை
வல்லைகொடு சீறூரில்
சென்றக் கணத்தில்
சிறுகுடியிற் புக்கனனே. 45

ஆன பருவங்கண்டு
அம்மனையும் அம்மனையின்
கோனும் ஒருதங்
குலத்தின் முறைநோக்கி
மானின் வயிற்றுதித்த
வள்ளிதனைப் பைம்புனத்தில்
ஏனல் விளையுள்
இனிதளிக்க வைத்தனரே. 46

கிள்ளையொடு கேகயமே
யன்றிப் பிறநிலத்தில்
உள்ள பறவை
ஒருசார் விலங்கினொடும்
வள்ளி மலைப்புனத்தில்
வந்துற்றனமாவும்
புள்ளும் மயங்கல்
பொருள்நூல் துணிபன்றே. 47

பூவைகாள் செங்கண்
புறவங்காள் ஆலோலம்
தூவிமா மஞ்ஞைகாள்
சொற்கிளிகாள் ஆலோலம்

---

46. அவன் மனையில் வளர்ந்த அப் பெண் மங்கைப் பருவமடைந்தாள். வேடர்குல முறைப்படி அக்கன்னியைத் தினைப்புனங் காவல்செய்ய அனுப்பினார்கள்.

47. மலை நிலத்திற்குரிய கிளிகளும் மயில்களும், பிற நிலங்களுக்குரிய பறவைகளும் விலங்குகளும் அப்புனத்தில் வந்து பொருந்தின.

48. பூவைகாள் 'ஆலோலம்! புறாக்களே ஆலோலம்!

கூவல் சேர்வுற்ற
குயிலினங்காள் ஆலோலம்
சேவல்காள் ஆலோலம்
என்றுள் திருந்திழையாள். 48

இந்த முறையில் இவள்
ஏனற் புனங்காப்ப
அந்த அளவில்
அவளுக் கருள்புரியக்
கந்த வரை நீங்கி
கதிர்வே லவன்தனியே
வந்து தணிகை
மலையிடத்து வைகினனே. 49

காலிற் கட்டிய கழலன் கச்சிலனன்
மாலைத் தோளினன் வரிவில் வாளியன்
நீலக் குஞ்சியன் நெடியன் வேட்டுவக்
கோலத் தைக்கொடு குமரன் தோன்றினன். 50

மண்டலம் புகழும் தொல்சீர்
வள்ளியஞ் சிலம்பின் மேல்போய்ப்
பிண்டியம் தினையின் பைங்கூழ்ப்
பெரும் புனத்து இறைவி தன்னைக்

---

மயில்களே ஆலோலம்! கிளிகளே ஆலோலம்! குயில்களே ஆலோலம்! சேவல்களே ஆலோலம்! என்று பறவைகளை ஓட்டிக்கொண்டிருந்தாள் அப்பாவை.

49. இப்படி இவள் தினைப்புனங் காத்துவருகையில், கயிலையங்கிரியின் அருகேயுள்ள கந்தமா மலையைவிட்டு முருகப் பெருமான் தனியராய்த் தணிகை மலையை வந்தடைந்தார்.

50. காலிலே கழல்; இடையிலே கச்சு; மாலையணிந்த தோளிலே வில்; அதற்குரிய அம்பு; கரியதலை; நெடியமேனி-இந்த வேட்டுவக் கோலத்திலே தோன்றினார் முருகவேள்.

51. புகழ்வாய்ந்த வள்ளிமலையின்மேற் சென்றார்;

கண்டனன் குமரன் அம்மா
கருதிய எல்லை தன்னில்
பண்டொரு புடையில் வைத்த
பழம்பொருள் கிடைத்த வாபோல் 51

பூமஞ்சார் மின்கொல் என்னப்
பொருப்பினில் ஏனல் காக்கும்
காமஞ்சால் இளமை யாளை
கடம்பமர் காளை நோக்கித்
தூமஞ்சால் விரகச் செந்தீச்
சுட்டிடச் சோர்ந்து வெம்பி
ஏமஞ்சால் இன்ற நெஞ்சன்
இதணினுக்கு அணியன் சென்றான். 52

வாரிரும் கூந்தல் நல்லாய்
மதிதளர் வேனுக்கு உன்தன்
பேரினை உரைத்தி மற்றுன்
பேரினை உரையாய் என்னின்
ஊரினை உரைத்தி ஊரும்
உரைத்திட முடியா தென்னில்
சீரிய நின்சீ றூர்க்குச்
செல்வழி உரைத்தி என்றான். 53

---

தினைப்புனங் காத்துக்கொண்டிருந்த வள்ளியைக் கண்டார்; புதையல் கண்டவர்போல் பெரு மகிழ்வுற்றார்.

52. மேகத்திற் பொருந்திய மின்னலோ என்று கருதும்படி, கருமலைச் சாரலிற் காட்சியளித்த கன்னியைக் கண்ட நிலையிற் காதல்கொண்ட முருகப்பெருமான் அவள் இருந்த பரணுக்கு அருகே சென்றார்.

53. அம்மங்கையை நோக்கி "மாதே! உன்னைக் கண்டு மதி தளர்ந்தேன்! உன் பெயர் யாதோ? பேரைச் சொல்லாவிட்டால் ஊரையேனும் சொல். ஊரும் சொல்ல முடியாதென்றால் அவ்வூருக்குச் செல்லும் வழியையேனும் சொல்லிடு" என்றார்.

மொழியொன்று புகலா யாயின்
முறுவலும் புரியா யாயின்
வழியொன்று நோக்கா யாயின்
விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின்
மனமுஞ்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பால் சூழும்
பராமுகம் தவிர்தி என்றான். 54

செய்யவள் குமரி யன்னம்
இருநெடுங் குமரன் நின்று
மையலின் மிகுதி காட்டி
மற்றிவை பகரும் எல்லை
எய்யுடன் உளியம் வேழம்
இரிதர இலை யூத
ஒய்யென எயினர் சூழ
ஒருதனித் தாதை வந்தான். 55

ஆங்கது காலை தன்னின்
அடிமுதல் மறைகள் ஆக
ஓங்கிய நடுவண் எல்லாம்
உயர்சிவ நூல தாக

---

54. மாதே, நீ ஒரு மொழி பேசாய்; குறுநகை புரியாய்; கண்ணெடுத்துப் பாராய்; காதலால் உழலும் எனக்கு ஒரு வழி காட்டாய்; இறையளவும் உள்ளம் உருகாய் என்றால் பழிவந்து உன்னைச் சூழும். ஆதலால் பராமுகமாய் இராதே" எனப் பகர்ந்தார்,

55. இவ்வாறு கன்னியின் முன்னே நின்று குமரவேள் காதல்மொழி பேசும்பொழுது, முள்ளம்பன்றிகளும் கரடிகளும் யானைகளும் விலகியோடும் வண்ணம் கொம்புகளை ஊதிக்கொண்டு வள்ளியின் தந்தையாகிய நம்பி வேடர்களோடு அங்கு வந்தான்.

56. அப்போது முருகப்பெருமான் வேடக்கோலத்தை மாற்றி ஒரு வேங்கை மரத்தின் உருவங்கொண்டு நின்றார். வேதங்கள் அவ்வேங்கையின் அடியாகவும், சிவாகமங்கள்

பாங்கமர் கவடு முற்றும்
பல்கலை யாகத் தானோர்
வேங்கையின் உருவ மாகி
வேற்படை வீரன் நின்றான். 56

ஆங்கவன் அயலாய் நின்ற
அடுதொழில் மறவர் ஆனோர்
வேங்கையின் நிலைமை நோக்கி
விம்மித நீரர் ஆகி
ஈங்கிது முன்னுற் றன்றால்
இத்துணை புகுந்த வாற்றால்
தீங்குவந் திடுதல் திண்ணம்
என்றனர் வெகுளித் தீயார். 57

இங்கிவை உரைக்கும் தீயோர்
யாரையும் விலக்கி மன்னன்
நங்கைதன் வதனம் பாரா
நறுமலர் வேங்கை ஒன்று
செங்குரல் ஏனற் பைங்கூழ்
செறிதரு புனத்தின் மாடே
தங்கிய தென்னை கொல்லோ
சாற்றுதி சரதம் என்றான். 58

---

நடுவாகவும், கலைகள் எல்லாம் பல கிளையாகவும் தோன்றின.

57. வேடர்கள் அவ்வேங்கையைக் கண்டனர்; வியப்பெய்தினர். முன்னில்லாத மரம் எவ்வாறு இங்கு வந்தது என்று வினவினர்; இவ்வேங்கையால் தீங்கு வருதல் திண்ணம் என்று எண்ணினர்; கோபம் அவருள்ளத்தில் மூண்டது.

58. பலவாறாகப் பேசி நின்ற வேடரை விலக்கினான் நம்பி; வள்ளியின் முகத்தை நோக்கினான். "நறுமலர் தாங்கிய இவ்வேங்கை நமது தினைப் புனத்தில் வந்தவாறென்னை" என்று வினவினான்.

தந்தையர்ங் குரைத்தல் கேளாத்
 தையலும் வெருவி ஈது
வந்தவா றுணர்கி லேன்யான்
 மாயம்போல் தோன்றிற் றையா
முந்தைநாள் இல்லா தொன்று
 புதுவதாய் முளைத்த தென்னாச்
சிந்தைமேல் நடுக்கம் எய்தி
 இருந்தனள் செயலி தென்றாள். 59

என்றிவை சொற்றபின் ஏந்திழை அஞ்சேல்
நன்றிவண் வைகுதி நாண்மலர் வேங்கை
இன்துணை யாயிவண் எய்திய தென்னாக்
குன்றுவன் வேடர் குழாத்தொடு போனான். 60

போனது கண்டு புனத்திடை வேங்கை
ஆனதொர் தன்மையை ஐயன் அகன்று
கானவர் தம்மகள் காண்வகை தொல்லை
மானுட நல்வடி வங்கொடு நின்றான். 61

மாவியல் கருங்கணாய் மற்று நின்தனைப்
பாவியன் நீங்கியே படர வல்லனோ
ஆவியை அகன்றுமெய் அறிவு கொண்டெழீஇப்
போவது கொல்இது புகல வேண்டுமே. 62

---

59. அதுகேட்ட நங்கை அஞ்சினாள்; "ஐயனே! இது வந்தவாறறியேன்; நேற்றில்லாத மரம் இன்று முளைத்து நின்றது; இது மாயம்போல் தோன்றுகிறது. இதனைக் கண்டதும் நடுக்கம் கொண்டேன்" என்றாள்.

60. நங்கை சொல்லிய மாற்றம் கேட்டான் நம்பி; "வள்ளி! இதைக்கண்டு அஞ்சாதே; இங்கு சுகமாயிரு. புது மலர்தரும் வேங்கை உனக்கு இனிய துணையாக வந்துற்றது" என்று சொல்லி வேடர்களோடு அவ்விடத்தை விட்டகன்றான்.

61. நம்பி வேடன் சென்றது கண்டார் முருகப்பெருமான்; வேங்கையுருவத்தை விட்டார்; அழகிய மானிட வடிவம்கொண்டு மங்கையின் கண்ணெதிரே தோன்றினார்.

62. "மானின் நேர் விழி மாதே! பாவியேன் உன்னை

புல்லிது புல்லிது புனத்தைக் காத்திடல்
மெல்லியல் வருதியால் விண்ணின் பால்வரும்
வல்லியர் யாவரும் வணங்கி வாழ்த்திடத்
தொல்லியல் வழாவளம் துய்ப்ப நல்குவேன். 63

என்றிவை பலபல இசைத்து நிற்றலும்
குன்றுவர் மடக்கொடி குமரன் சிந்தையில்
ஒன்றிய கருத்தினை உற்று நோக்கியே
நன்றிவர் திறமென நாணிக் கூறுவாள். 64

இழிகுல மாகிய எயினர் பாவைநான்
முழுதுல கருள்புரி முதல்வர் நீர்எனைத்
தழுவுதல் உள்ளியே தாழ்ச்சி செப்புதல்
பழியது வேயலால் பான்மைத் தாகுமோ. 65

என்றிவை பலப்பலவும்
ஏந்திழை இயம்பா
நின்றபொழு தத்தில் அவள்
நெஞ்சம் வெருக் கொள்ள

---

விட்டுப் பிரிய வல்லேனோ? உயிரை விட்டு உடல் இயங்குமோ?

63. மெல்லியல் மாதே! இத் தினைப்புனம் காத்தல் உனக்கு இழிவாகும். என்னுடன் வருவாயாயின் உன்னை வானுலகத்தில் வைப்பேன்; அங்குள்ள தேவ மாதர் எல்லாம் உன்னைத் தொழுது நிற்பர்; செல்வங்கள் யாவும் பெற்றுச் சிறப்பாக வாழ்வாய்.

64. என்று பேசிநின்றார் பெருமான். அவர் மனக் கருத்தை யறிந்தாள் மங்கை; நாணமுற்றாள்; ஒரு மொழி பேசலுற்றாள்.

65. "ஐயரே! நான் இழிந்த குலத்தைச் சேர்ந்தவள்; உலகமெல்லாம் காத்தருள்கின்ற அரசர் நீர்; என் மீது காதல்கொண்டு தாழ்மையான மொழிகளைப் பேசுதல் உமக்குத் தகுமா? இது பழியாகுமே யன்றி முறையாகுமா?

66. என்று பேசி நின்றாள். அப்பொழுது அவள் நெஞ்சம் திடுக்கிடத் தொண்டகமும் துடியும் முழங்கின.

வென்றிகெழு தொண்டகம்
வியன்துடி இயம்பக்
குன்றிறைவன் வேட்டுவர்
குழாத்தினொடும் வந்தான். 66

வந்தபடி கண்டுமட
மான்நடு நடுங்கிச்
சிந்தைவெரு விக்கடவுள்
செய்யமுகம் நோக்கி
வெந்திறல்கொள் வேடுவர்கள்
வெய்யர்இவண் நில்லாது
உய்ந்திட நினைந்துவடி
வோடும் இனி என்றாள். 67

ஓடும் இனி என்றவள்
உரைத்தமொழி கேளா
நீடு மகிழ் வெய்தியவண்
நின்ற குமரேசன்
நாடுபுகழ் சைவநெறி
நற்றவ விருத்த
வேடமது கொண்டுவரும்
வேடர்எதிர் சென்றான். 68

சென்றுகிழ வோன்குறவர்
செம்மலெதிர் எண்ணி
நின்று பரிவோடு திரு
நீறுதனை நல்கி

---

வேடர் கூட்டத்தோடு நம்பிராசன் தூரத்தில் வரக் கண்டாள்.

67. "ஐயோ! பொல்லாதவர் இவ்வேடர்; இங்கு நில்லாது ஓடிவிடும்" என்று கூறினாள்.

68. அம்மொழி கேட்ட முருகவேள் பெருமகிழ்ச்சியடைந்தார்; சைவ நெறிக்குப் பொருத்தமான தவக் கோலம் கொண்டு விருத்தராய் வேடரை நோக்கிச் சென்றார்.

வன்திறல் மிகுத்திடுக
வாகை பெரிதாக
இன்றியமை யாதவளன்
எய்திடுக என்றான். 69

பூதியினை அன்பொடு
புரிந்தகுர வன்தன்
பாதமலர் கைகொடு
பணிந்து கூற மன்னன்
மேதகும் இவ் வெற்பினில்
விருத்தர் என வந்தீர்
ஓதிடுதிர் வேண்டியதை
ஓல்லைதனில் என்றான். 70

ஆண்தொழிலின் மேதகைய
அண்ணல் இது கேண்மோ
நீண்டதுனி மூப்பகல
நெஞ்சமருள் நீங்க
ஈண்டுறும் வரைக்குமரி
எய்தியினி தாட
வேண்டிவரு கின்றனன்
மெலிந்து கூடி தென்றான். 71

---

69. நம்பிராசன் எதிரே போய் நின்றார்; அன்போடு திருநீறு அளித்தார்; "உன் வன்மை ஓங்குக. வெற்றி மிகுக! வளம் பெருகுக" என்று வாழ்த்தினார்.

70. திருநீறளித்து ஆசி கூறிய பெரியாரைப் பணிந்து வணங்கினான் நம்பி. "ஐயரே! விருத்தராகிய நீர் இம் மலையை வந்தடைந்தீர்! உமக்கு வேண்டியதைச் சொல்லும்" என்று வினவினான்.

71. அதுகேட்ட முருகவேள் "அரசே! என் கிழத் தன்மை ஒழியவேண்டும்; மனத்திலுள்ள மயக்கம் தெளிய வேண்டும்; ஆதலால் இங்குள்ள குமரியாட விரும்பி வந்தடைந்தேன்" என்றார்.

நற்றவன் மொழியைக் கேளா
நன்றுநீர் நவின்ற தீர்த்தம்
நிற்றலும் ஆடி யெங்கள்
நேரிழை தமியள் ஆகி
உற்றனள் அவளுக் கெந்தை
ஒரு தனித் துணைய தாகி
மற்றிவண் இருத்திர் என்ன
அழகிதாம் மன்ன என்றான். 72

இனையதோர் பொழுதில் தந்தை
ஏந்திழை தன்பால் ஏகித்
தினையொடு கிழங்கும் மாவும்
தீங்கனி பிறவும் நல்கி
அனையவள் துணைய தாக
அருந்தவன் தன்னை வைத்து
வனைகழல் எயின ரோடும்
வல்லையின் மீண்டு போனான். 73

போனது முதியோன் கண்டு
புனையிழை தன்னை நோக்கி
நான் இனிச்செய்வ தென்கொல்
நலிவது பசிநோய் என்னத்

---

72. அப்போது அரசன், "ஐயரே! நீர் சொல்லிய நல்ல தீர்த்தத்தில் நாள்தோறும் நீராடி, தனியளாய்த் தினைப்புனங் காத்திருக்கும் என் பெண்ணுக்குத் துணையாகி இங்கேயே இரும்" என்றான். 'நல்லது' என்றார் பெரியவர்.

73. நம்பிராசன் வள்ளியிடம் சென்று தினையும் கிழங்கும், மாவும் கனியும் மற்றைய பண்டங்களும் கொடுத்து, தவசியை அவளுக்குத் துணையாகவைத்து அவ்விடத்தை விட்டு அகன்றான்.

74. அப்போது கிழவர் மங்கையை நோக்கி, "ஐயோ! நான் என்ன செய்வேன்! பசிநோய் என்னைப் பிடித்து வருத்துகின்றதே! என்றார். அவர் பசிதீரத்தேனும் கனியும்

தேனொடு கனியும் மாவும்
செங்கையிற் கொடுப்பக் கொண்டு
வேனிலும் முடுகிற் றுண்ணீர்
விடாய் பெரி துடையேன் என்றான். 74

முருகனை துரையை அந்த
மொய்குழல் வினவி எந்தாய்
வருகென அழைத்து முன்போய்
வரையெலாம் கடந்து சென்று
விரைகமழ் சுனைநீர் காட்ட
வேனிலால் வெதும்பி னான்போல்
பருகினன் பருகிப் பின்னர்
இஃதொன்று பகர்தல் உற்றான். 75

ஆகத்தை வருந்து கின்ற
அரும்பசி அவித்தாய் இன்னும்
தாகத்தை அவித்தாய் இன்னும்
தவிர்ந்தில தளர்ச்சி மன்னோ
மேகத்தை யனைய கூந்தல்
மெல்லியல் வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தி யாயின்
முடிந்ததென் குறைய தென்றான். 76

---

தினைமாவும் தன் செங்கையாற் கொடுத்தாள் மங்கை. அவற்றையுண்ட கிழவர் "வெயில் அதிகமாயிற்று; தாகம் உண்டாயிற்று" என்றார்.

75. தாகத்தைத் தீர்ப்பதற்காக அவரை அழைத்துச் சென்றாள் வள்ளி; பல குன்றுகளைக் கடந்து இனிய சுனை யொன்றைக் காட்டினாள். அந்நீரை வெப்பத்தால் மிக வருந்தியவர் போலப் பருகினார் கிழவர்; பேசத் தொடங் கினார்.

76. "மாதே! என் அரும்பசியைத் தீர்த்தாய்! கடுந் தாகத்தைத் தணித்தாய்! இன்னும் என் தளர்ச்சி நீங்க வில்லையே! நான் கொண்ட மோகத்தைத் தணிப்பா யாயின் என் குறை முற்றும் தீர்ந்துவிடும்" என்றார்.

ஈறில் முதியோன் இரங்கி இரந்து குறை
கூறி மதிமயங்கிக் கும்பிட்டு நின்றளவில்
நாறு மலர்க்கூந்தல் நங்கை நகைத்துயிர்த்து
சீறி நடுநடுங்கி இவ்வாறு செப்புகின்ருள். 77

நத்துப்புரை முடியீர்
நல்லுணர்வு சற்றுமிலீர்
எத்துக்கு மூத்தீர்
இழிகுலத்தேன் தன்னை வெஃகிப்
பித்துக்கொண்டார் போல்
பிதற்றுவீர் இவ்வேடர்
கொத்துக் கெலாமோர்
கொடும் பழியைச் செய்தீரே. 78

சேவலாய் வைகும்
தினைப்புனத்தில் புள்ளினுடன்
மாவெலாம் கூடி
வளர்பைங் குரல் கவரும்
நாவலோய் நீரும்
நடந்தருளும் நான் முந்திப்
போவனுல் என்று
புனை இழையாள் போந்தனளே. 79

77. குறைகூறி மதிமயங்கிக் கும்பிட்டு நின்ற குமரவேளைக் கண்டு நங்கை நகைத்தாள்; பெருமூச் செறிந்தாள்; நடுநடுங்கினுள்.

78. "ஐயோ! நரைத்த தலையுடையீர்! உமக்கு நல்லறிவு சற்றும் இல்லையே! இத்தனை நாள் வாழ்ந்து மூத்ததனுல் என்ன பயன்? இழிகுலத்தவளாகிய என்னைக் காதலித்துப் பித்துக் கொண்டவர்போல் பிதற்றுகின்றீர்! இவ்வேடர் குலத்திற்கெல்லாம் பெரும் பழியைத் தந்தீர்.

79. பேசத்தெரிந்த பெரியவரே! நான் போகின்றேன். பறவைகளும் விலங்குகளும் தினைக் கதிர்களைத் தின்றுவிடும். நீர் பின்னே நடந்து வாரும்" என்று சொல்லிப் புறப்பட்டாள்.

பொன்னே அனையாள்முன்
போகும் திறன் நோக்கி
என்னே இனிச்செய்வ
தென்றிரங்கி எம்பெருமான்
தன்னேர் இலாதமரும்
தந்திமுகத் தெந்தைதனை
முன்னே வருவாய்
முதல்வா எனநினைத்தான். 80

அந்தப் பொழுதில்
அருமா முகற்கிரங்கி
முந்திப் படர்கின்ற
மொய் குழலாள் முன்னாகத்
தந்திக் கடவுள்
தனிவா ரணப் பொருப்பு
வந்துற்ற தம்மா
மறி கடலே போல்முழங்கி. 81

அவ்வேலையில்வள்ளி
அச்சமொடு மீண்டுதவப்
பொய்வேடம் கொண்டுநின்ற
புங்கவன்தன் பால்அணுகி

---

80. பொன்போன்ற மங்கை போகும் திறங்கண்டார் முருகன். இனி என்ன செய்வது என்று ஏங்கினார். தன்னிகரில்லாத தந்திமுகத் தமையனை மனத்திலே நினைத்தார்.

81. விநாயகர் தம்பிக்கிரங்கி வெளிப்பட்டார். திரும்பிச் செல்லும் வள்ளியின் முன்னே மலைபோன்ற யானை வடிவங்கொண்டு, அலைகடல்போல் முழங்கிக்கொண்டு வந்தார்.

82. யானையைக் கண்டபோது அஞ்சி நடுங்கினாள் மங்கை; கிழவரைநோக்கி ஓடினாள். "ஐயனே! நீர் சொன்னபடி செய்வேன்! இந்த யானையினின்றும் என்னைக் காத்தருளவேண்டும்" என்று பதறி, அவர் பக்கத்திற் சென்று கட்டித் தழுவிக்கொண்டாள்.

இவ்வேழும் காத்தருள்க
எந்தைநீர் சொற்றபடி
செய்வேன் எனஒருபால்
சேர்ந்துதழீஇக் கொண்டனளே. 82

கந்த முருகன்
கடவுட் களிறுதனை
வந்தனைகள் செய்து
வழுத்திநீ வந்திடலால்
புந்தி மயல்தீர்ந்தேன்
புனை இழையும் சேர்ந்தனளால்
எந்தை பெருமான்
எழுந்தருள்க மீண்டென்றான். 83

என்னும் அளவில்
இனிதென்று யானைமுகன்
முன்னிளவல் ஏக
முகம்ஆறுடையபிரான்
கன்னி தனையோர்
கடிகா வினிற்கலந்து
தன்னு கருணைசெய்து
தொல்லுருவம் காட்டினனே. 84

---

83. காரியம் முடிந்ததென்று கந்தவேள் களிப்புற்றார். காலத்தில்வந்து உதவிய யானைக்கு வந்தனம் தந்தார். "எம்பெருமானே! உம்மால் மயக்கம் தீர்ந்தேன்; மங்கையும் மருவப்பெற்றேன். இனி நீர் உம்மிடத்திற்கு எழுந்தருள்க" என்று விடைகொடுத்து அனுப்பினார்.

84. தமையனார் சென்றபின்பு முருகவேள் கன்னியை அழைத்துக்கொண்டு ஒரு பூஞ்சோலையிற் புகுந்தார்; மணங்கலந்தார்; அருள்புரிந்தார். தமது பழைய திருவுருவைக் காட்டினார்.

முந்நான்கு தோளும்
முகங்களோர் மூவிரண்டும்
கொன்றார்வை வேலும்
குலிசமும் ஏனைப்படையும்
பொன்றார் மணிமயிலும்
ஆகப் புனக்குறவர்
மின்றாள் கண்காண
வெளிநின் றனன்விறலோன். 85

கூரார் நெடுவேல்
குமரன் திருவுருவைப்
பாரா வணங்காப்
பரவலுறு விம்மிதமும்
சேரா நடுநடுங்காச்
செங்கைகுவி யாவியரா
ஆராத காதலுறு
அம்மைஇது ஓதுகின்றாள். 86

மின்னே அனையசுடர்
வேலவரே இவ்வுருவம்
முன்னேநீர் காட்டி
முயங்காமல் இத்துணையும்
கொன்னே கழித்தீர்
கொடியேன்செய் குற்றமெலாம்
இன்னே தணித்தே
எனையாண்டு கொள்ளுமென்றாள். 87

---

85. ஆறுமுகமும், பன்னிருதோளும், வடிவேல் முதலிய படையும், அழகிய தோகைமயிலும் உடையராய் முருகப் பெருமான் காட்சியளித்தார்.

86. அத் திருவுருவைக் கண்டாள் கன்னி; கைகூப்பித் தொழுதாள்; வாயார வழுத்தினாள்; வியப்புற்று நடுங்கினாள்; மேனி வியர்த்தாள்; ஆராத அன்புடன் பேசலுற்றாள்.

87. "வேலவரே! இவ்வுருவத்தை முன்னே காட்டாமல் இத்துணை காலமும் கொன்னே கழித்தீரே! கொடியவ

எங்கள் முதல்வன்
இறைவி தனைநோக்கி
உங்கள் புனந்தன்னில்
உறைந்திட முன் ஏகுதியால்
மங்கைநல் லாய்யாமும்
வருவோம் எனஉரைப்ப
அங்கண் விடைகொண்டு
அடிபணிந்து போயினளே. 88

வளந்தரு புனந்தனில் வள்ளி நாயகி
தளர்ந்தனள் இருத்தலும் தலையளித்திடும்
இளந்தினை இன்குரல் ஈன்று முற்றியே
விளைந்தன குறவர்கள் விரைந்து கூடினர். 89

குன்றவாணர்கள் யாவரும்
கொடிச்சியை நோக்கித்
துன்றும் ஏனல்கள் விளைந்தன
கணிகளும் சொற்ற
இன்று காறிறு போற்றியே
வருந்தினை இனிநீ
சென்றிடம்மஉன் சிறுகுடிக்
கெனவுரை செய்தார். 90

---

ளாகிய உம்மடியாள் செய்த குற்றமெல்லாம் பொறுத்து ஆட்கொள்ளவேண்டும்" என்றாள்.

88. அப்போது முருகவேள் மங்கையை நோக்கி, "மாதே! நீ தினைப்புனத்திற்கு முன்னே செல்க. நாமும் அங்கு வருவோம்" என்று உரைத்தார். அவ்வாறே ஆண்டவன் அடி பணிந்து, விடைபெற்றுப் போயினாள் வள்ளி.

89. தினைப்புனத்தில் நாயகி தலைவனைக் காணப் பெறாது தளர்ந்திருந்தாள். இளந்தினைகள் முதிர்ந்து முற்றி விட்டன. விளைந்த கதிரை அறுப்பதற்கு வேடர் விரைந்து நிறைந்தார்கள்.

90. அவர்கள் வள்ளியை நோக்கி, "நாயகி! தினைகள் விளைந்தன! அவை விளைந்தன என்று வேங்கை மரங்களும்

மான் இனங்களை மயில்களைக்
கிளியை மாண் புறவை
ஏனை உள்ளவை தங்களை
நோக்கியே யாங்கள்
போன செய்கையைப் புகலுதிர்
புங்கவர்க் கென்றுத்
தான் இரங்கியே போயினள்
ஒருதனித் தலைவி. 91

மனையிடை அம்மை வைக
வனசரர் முதிர்ந்த செவ்வித்
தினையினை அரிந்து கொண்டு
சிறுகுடி யதனிற் சென்றார்
இனையது நோக்கிச் செவ்வேள்
இருவியம் புனத்திற் புக்குப்
புனையிழை தன்னைக் காணான்
புலம்பியே திரிதல் உற்றான். 92

கனந்தனை வினவும் மஞ்ஞைக்
கணந்தனை வினவும் ஏனல்
புனந்தனை வினவும் அம்மென்
பூவையை வினவும் கிள்ளை

---

மலர்ந்தன; இதுவரையும் தினைப்புனங்காத்து நீ வருந்தினாய்; இனி ஊருக்குச் சென்றிடு, அம்மா'' என்றுரைத்தனர்.

91. அப்போது மங்கை மானையும் மயிலையும் கிளியையும் புறவையும் மற்றைய பறவைகளையும் பார்த்து ''நாங்கள் போகின்றோம்: இச்செய்தியை இங்கு வரும் முருகப்பெருமானிடம் சொல்லுங்கள்'' என்று கூறி மனவருத்தத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

92. வீட்டிலே இருந்தாள் வள்ளியம்மை. தினையை அறுத்து மனையிற் சேர்த்தார் வேடர்கள். அது கண்ட முருகவேள் தினைப்புனத்திற் சென்றார். அங்கு மங்கையைக் காணாது மைபலாற் புலம்பலுற்றார்.

93. ''இங்கிருந்த மங்கை எங்கே சென்றாள்'' என்று

இனந்தனை வினவும் யானை
இரலையை வினவும் தண்கா
வனந்தனை வினவும் மற்றை
வரைகளை வினவும் மாதோ. 93

வல்லியை நாடு வான்போல்
மாண்பகல் கழிந்து வாடிக்
கொல்லையம் புனத்திற் சுற்றிக்
குமரவேள் நடுநாள் யாமம்
செல்லுறும் எல்லை வேடர்
சிறுகுடி தன்னிற் புக்குப்
புல்லிய குறவர் செம்மல்
குரம்பையின் புறம்போய் நின்றான். 94

அறுமுக ஒருவன் தன்னை
ஆயிழை எதிர்ந்து தாழ்ந்து
சிறுதொழில் எயினர் ஊரில்
தீயனேன் பொருட்டால் இந்த
நறுமலர்ப் பாதம் கன்ற
நள்ளிருள் யாமம் தன்னில்
இறைவநீர் நடப்ப தேயென்
றிரங்கியே தொழுது நின்றாள். 95

மேகத்தைக் கேட்பார்; மயிலினங்களைக் கேட்பார்; தினைப் புனத்தைக் கேட்பார்; பூவையைக் கேட்பார்; கிளியைக் கேட்பார்; யானையைக் கேட்பார்; மானைக் கேட்பார்; சோலையைக் கேட்பார்; மலையைக் கேட்பார்.

94. பகற் பொழுதெல்லாம் மங்கையை நாடுவார் போல் மயங்கி நின்று தினைப்புனத்தைச் சுற்றித் திரிந்த முருகவேள், நள்ளிரவில் வேடர் வாழும் குறிச்சியிற் புகுந்து, நம்பி ராசனது குடிசையின் புறத்தே சென்று நின்றார்.

95. அங்கே மங்கை வந்து பெருமானை வணங்கினாள். "ஐயோ! பாவியேன் பொருட்டால், இந்த நள்ளிருட்டில், சிறு தொழில் புரியும் வேடர் சேரியில்

மாத்தவ மடந்தை நிற்ப
வள்ளலை இருளை நோக்கித்
தீத்தொழில் எயினர் கானில்
தீமையாய் விளையும் இன்னே
ஏத்தரும் சிறப்பின் உம்மூர்க்கு
இங்கிவள் தனைக்கொண் டேகிக்
காத்தருள் புரிம் என்றே
கையடை யாக நேர்ந்தாள். 96

முத்துறு முறுவ லாளை
மூவிரு முகத்தி னன்தன்
கைத்தலம் தன்னில் ஈந்து
கைதொழுது இருளை நிற்ப
மெய்த்தகு கருணை செய்து
விளங்கிழாய் நீயெம் பாலின்
வைத்திடு கருணை தன்னை
மறக்கலம் கண்டாய் என்றான். 97

விடைபெற்றே இருளை ஏக
வேலுடைக் கடவுள் அன்ன
நடைபெற்ற மடந்தை யோடு
நள்ளிருள் இடையே சென்று

---

திருவடி வருந்த நடந்து வரலாமா'' என்று பரிவுடன் பேசிப் பணிந்து நின்றாள்.

96. அங்கிலையில் முருகவேளை வள்ளியின் தோழி கண்டு ''எம் ஐயனே! இவ்வேடர்கள் கொடியவர்கள். உம்மைக் கண்டால் தின்மை விளையும். ஆதலால் இம் மங்கையை இப்பொழுதே உமது ஊருக்கு அழைத்துச் சென்று காத்தருள வேண்டும்' என்று கூறி நாயகியை நாயகனிடம் அடைக்கலமாக அளித்தாள்.

97. காலத்தில் உதவி செய்த தோழியைக் கருணையோடு நோக்கினார் முருகவேள். ''மாதே! எம்மிடத்தில் நீ வைத்த கருணையை எந்நாளும் மறவோம்'' என்று திருவாய்மலர்ந்தார்.

98. தோழி விடைபெற்றுச் சென்றாள். முருகவேள்

கடைபெற்ற சிறார் நீங்கிக்
காப்பெலாம் கடந்து காமன்
படைபெற்றுக் குலவும் ஆங்கோர்
பசுமரக் காவுள் சேர்ந்தான். 98

சங்கலை இன்ற செங்கைத்
தனிமகள் கண்ணுள் ஆகி
எங்கணும் நாடிப் பின்னர்
இகுளையை வந்து கேட்பக்
கங்குலின் அவளும் நானும்
கண்படை கொண்ட துண்டால்
அங்கவள் அதற்பின் செய்தது
அறிந்திலன் அன்னாய் என்றாள். 99

வேடுவர் யாரும் ஈண்டி
விரைந்துபோய் வேந்த னோடு
கூடினர் இரலை தன்னைக்
குறித்தனர் நெறிகள் தோறும்
ஓடினர் பொதும்பர் எல்லாம்
உலாவினர் புலங்கள் புக்கு
நாடினர் சுவடு நோக்கி
நடந்தனர் இடங்கள் எங்கும். 100

---

வள்ளியை அழைத்துக்கொண்டு நள்ளிருளிலே நடந்தார்; வேடர் குறிச்சியின் கட்டும் காவலும் கடந்தார்; காதல் விளைக்கும் ஒரு பெருஞ் சோலையிற் சென்று சேர்ந்தார்.

99. (நம்பி ராசன் மனைவி காலையில் எழுந்தாள்.) நங்கையைக் காணாது திகைத்தாள்; எங்கும் சுற்றித் தேடினாள். தோழியை வந்து கேட்டாள். "நேற்றிரவில் வள்ளியும் நானும் கண்ணுறங்கச் சென்றோம். அதற்குப் பின் அவள் செய்த தொன்றும் நான் அறிந்ததில்லை, அம்மா" என்றாள் தோழி.

100. வேடுவர் யாவரும் வந்து கூடினர்; விரைந்து சென்று தம் வேந்தனைக் கண்டனர்; கொம்பு ஊதினர்; பல வழிகளிலும் ஓடித் தேடினர்; சோலைகளையெல்லாம்

கோலொடு சிலையும் வாளும்
　　குந்தமும் மழுவும் பிண்டி
பாலமும் பற்றி வேடர்
　　பலருமாய்த் துருவிச் சென்று
சோலையின் மருங்கு வந்தார்
　　துணுக்கமுற் றுளதென் சிந்தை
மேல்இனிச் செய்வ தென்கொல்
　　அறிகிலேன் விளம்பாய் என்றாள். 101

வருந்தலை வாழி நல்லாய்
　　மால்வரை யோடு சூரன்
உரந்தனை முன்பு கீண்ட
　　உடம்பிடி இருந்த தும்மோர்
விரைந்தமர் புரியச் சூழின்
　　வீட்டுதும் அதனை நோக்கி
இருந்தருள் நம்பின் என்று
　　இறைமகட்கு எந்தை சொற்றான். 102

குறவர்கள் முதல்வன் தானும்
　　கொடுந்தொழில் எயினர் யாரும்
மறிகடல் என்ன ஆர்த்து
　　வார்சிலை முழுதும் வாங்கி

---

சோதித்தனர்; தினைப்புனங்களிற் புகுந்து தேடினர்; காலடித் தடங்களை நோக்கித் தொடர்ந்தனர்.

101. கோலும் வில்லும், குந்தமும் வாளும், மழுவும் பிண்டி பாலமும் கொண்டு பல விடங்களிலும் தேடிய வேடர்கள் முருகவேள் வள்ளியோடிருந்த சோலையை நோக்கி வந்தார்கள். அப்போது மங்கை திடுக்கிட்டாள்; மனங்கலங்கினாள்; "இனிமேல் என்ன செய்வது" என்று வினவினாள்.

102. அதுகேட்ட முருகவேள், "மாதே! மனம் வருந்ாதே; மாயமலையைத் தகர்த்த வேல், சூரன் மார்பைத் துளைத்த வேல் என்னிடம் இருக்கின்றது. உன்னைச் சேர்ந்த வேடர்கள் போர் புரிய வந்தால் அவரை அழிப்போம். நீ நம் பின்னே நின்று அச்செய்கையைப் பார்" என்று அருளினார்.

எறிசுடர்ப் பரிதித் தேவை
எழிலிகள் மறைத்தால் என்ன
முறைமுறை அம்பு வீசி
முருகனை வளைந்து கொண்டார். 103

ஓட்டலர் ஆகிச் சூழ்ந்தாங்கு
உடன்றுபோர் புரிந்து வெய்யோர்
விட்டவெம் பகழி எல்லாம்
மென்மலர் நீர வாகிக்
கட்டழகு உடைய செவ்வேள்
கருணையங் கடலின் மீது
பட்டன பட்ட லோடும்
பைந்தொடி பதைத்துச் சொல்வாள். 104

நெட்டிலை வாளி தன்னை
ஞெரேலென நுமமேற் செல்லத்
தொட்டிடு கையர் தம்மைச்
சுடருடை நெடுவேல் ஏவி
அட்டிடல் வேண்டும் சீயம்
அடுதொழில் குறியா தென்னில்
கிட்டுமே மரையும் மானும்
கேழலும் வேழம் தானும். 105

---

103. நம்பிராசனும் வேடரும் அலைகடல்போல ஆரவாரித்தனர்; வில்லை வளைத்தனர்; சரமாரி பொழிந்தனர்; செங்கதிரோனைக் கருமேகம் மறைந்தாற் போன்று முருகப்பெருமானை வளைந்தனர்.

104. அவர்கள் வெம்மையோடு விட்ட அம்புகள் எல்லாம், கட்டழகு வாய்ந்த கருணையாளன்மீது,மெல்லிய பூப்போல் விழுந்தன. அவ்வம்புகளைக் கண்ட வள்ளி மனம் நடுங்கி,

105. "ஐயனே! இவ் வேடர்களை வேலால் அழித்திடல் வேண்டும். அரிமான் சும்மா இருந்தால் அதனை மரையும் மானும், பன்றியும் யானையும் நெருங்கி விடுமே!"

என்றிவை குமரி செப்ப
எம்பிரான் அருளால் பாங்கர்
நின்றதோர் கொடிமாண் சேவல்
நிமிர்ந்தெழுந்து ஆர்ப்புக் கொள்ளக்
குன்றவர் முதல்வன் தானும்
குமரரும் தமரும் யாரும்
பொன்றினர் ஆகி மாண்டு
பொள்ளெனப் புவியில் வீழ்ந்தார். 106

விழுப்பம துளதண் காவில்
விசாகன்மீண் டருளித் தன்பால்
முழுப்பரி வுடைய நங்கை
முகத்தினை நோக்கி நம்மேல்
பழிப்படு வெம்போர் ஆற்றிப்
பட்டநும் கிளையை எல்லாம்
எழுப்புதி என்ன லோடும்
இனிதென இறைஞ்சிச் சொல்வாள். 107

விழுமிய உயிர்கள் சிந்தி
வீழ்ந்தநம் கேளிர் யாரும்
எழுதிர்என் றருள லோடும்
இருநிலத் துறங்கு கின்றோர்

---

106. என்று சொல்லியபொழுது, எம்பிரான் அருளால் அருகே நின்ற சேவல் ஒன்று, நிமிர்ந்து எழுந்து கொக்கரித்தது. அவ்வொலி செவியில் விழுந்ததும், நம்பி ராசனும், அவன் மைந்தரும், சுற்றத்தாரும் மடிந்து, மாண்டு மண்மேல் விழுந்தார்.

107. விழுமிய சோலையில் விழுந்துபட்ட வேடர்மீது கருணை கொண்டார் முருகவேள். வள்ளி நாயகியை நோக்கி, "நம்மைப் பகைத்துப் போர் புரிந்து இறந்த உன் சுற்றத்தை யெல்லாம் எழுப்புக" என்று அருளிச் செய்தார். அதற்கு இசைந்து நங்கை நாயகனை வணங்கி,

108. "உயிரிழந்த நம் கிளைஞர் எல்லாம் எழுக" என்று அருளினள். அந்நிலையில் உறங்கி எழுந்தவர்போல் நம்பியும் பிறரும் எழுந்தார்கள்.

பழையநல் உணர்வு தோன்றப்
பதைபதைத் தெழுதற் கொப்பக்
குழுவுறு தமர்க ளோடுங்
குறவர்கோன் எழுந்தான் அன்றே. 108

எழுந்திடு கின்ற காலை
எம்பிரான் கருணை வெள்ளம்
பொழிந்திடு வதனம் ஆறும்
புயங்கள்பன் னிரண்டும் வேலும்
ஒழிந்திடு படையும் ஆகி
உருவினை அவர்க்குக் காட்ட
விழுந்தனர் பணிந்து போற்றி
விம்மித ராகிச் சொல்வார். 109

அடுந்திறல் எயினர் சேரி
அளித்திடும் நீயே எங்கள்
மடந்தையைக் கரவில் வௌவி
வரம்பினை அழித்துத் தீரா
நெடுந்தனிப் பழிய தொன்று
நிறுவினை புதல்வர் கொள்ள
விடந்தனை அன்னை ஊட்டின்
விலக்கிடு கின்றார் உண்டோ. 110

---

109. அன்னவர் கண்ணெதிரே முருகப் பெருமான் கருணை பொழியும் ஆறு முகங்களோடும். பன்னிரு கரங்களோடும், வேல் முதலிய பன்னிரு படைகளோடும் தோன்றினார். அக்காட்சியைக் கண்டார் வேடர்; ஆச்சரிய மடைந்தார்; அவரடியில் விழுந்தார்; எழுந்தார்; போற்றினார்.

110. "ஐயனே! வலிமை சான்ற வேடர் சேரியைக் காத்தருளும் மெய்யனே! எங்கள் பெண்ணைக் களவு முறையிலே கவர்ந்தீர்! குலத்தின் வரம்பினை அழித்தீர்! தீராத வசையைத் தந்தீர்! தாயே பிள்ளைக்கு நஞ்சை ஊட்டினால் தடுப்பவர் யார்?

ஆங்கது நிற்க எங்கள்
அரிவையை நசையால் வெளவி
நாங்களும் உணரா வண்ணம்
நம்பெருங் காவல் நீங்கி
ஈங்கிவள் கொணர்ந்தாய் எந்தாய்
இன்னினிச் சிறூர்க் கேகித்
தீங்கனல் சான்றா வேட்டுச்
செல்லுதி நின்னூர்க் கென்றார். 111

மாதுலன் முதலோர் சொற்ற
மணமொழிக் கிசைவு கொண்டு
மேதகு கருணை செய்து
மெல்லியல் தனையும் கொண்டு
கோதிலா முனிவ னோடும்
குளிர்மலர்க் காவு நீங்கிப்
பாதபங் கயங்கள் நோவப்
பருப்பதச் சிறூர் புக்கான். 112

அன்னதோர் வேலை தன்னில்
அறுமுகம் உடைய வள்ளல்
தன்னுழை இருந்த நங்கை
தனையருளோடு நோக்கக்

---

111. அத்தனே! போனது போகட்டும். ஆசையால் எங்கள் பெண்ணை இங்கே கொண்டு வந்தீர்: இனி எங்கள் சிற்றூருக்கு எழுந்தருளி அக்கினி சாட்சியாக இவளை மணந்து உமது ஊருக்குச் செல்லவேண்டும்" என்றார்.

112. மாமனாகிய நம்பிராசன் சொல்லிய வாறே மணம் செய்துகொள்ள இசைந்தார் முருகவேள். உடனே வள்ளி நாயகியை அழைத்துக்கொண்டு, நாரத முனிவ ரோடு நடந்து வேடர் சேரியை அடைந்தார்.

113. மாமனார் மனையில் அமர்ந்தவுடன், அருகே யிருந்த மங்கையை முருகன் அருள் கூர்ந்து நோக்கினார். அப்போது குறக் கோலம் நீங்கிற்று; தெய்வக் கோலம் வந்துற்றது.

கொன்னவில் குறவர் மாதர்
குயிற்றிய கோலம் நீங்கி
மூன்னுறு தெய்வக் கோலம்
முழுதொருங் குற்ற தன்றே. 113

அந்தநல் வேலை தன்னில்
அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னில்
கன்னிகை கரத்தை நல்கி
நந்தவ மாகி வந்த
நங்கையை நயப்பால் இன்று
தந்தனன் கொள்க என்று
தண்புனல் தாரை உய்த்தான். 114

ஆவதோர் காலை தன்னில்
அரியும்நான் முகனும் வானோர்
கோவொடு பிறரும் சூழக்
குலவரை மடந்தை யோடும்
தேவர்கள் தேவன் வந்து
சேண்மிசை நின்று செவ்வேள்
பாவையை வதுவை செய்யும்
பரிசினை முழுதும் கண்டான். 115

---

**114.** நல்ல முகூர்த்தத்தில் நம்பிராசன் கந்தவேள் திருக்கரத்தில் கன்னியின் கரத்தை வைத்து, "எங்கள் மாதவத்தால் வந்த இம் மங்கையை அன்புடன் தந்தேன்; கொள்க" என்று தண்ணீரால் தாரை வார்த்தான்.

**115.** திருமணம் நிகழுங் காலத்தில் திருமாலும், பிரமனும், இந்திரன் முதலிய வானவரும் சூழ்ந்து நிற்க, தேவதேவனாகிய சிவபெருமான் உமா தேவியாரோடு வானிலே நின்று திருக்கண் சார்த்தினர்;

கண்ணுதல் ஒருவன் தானும்
கவுரியும் கண்ணுற் கண்டு
தண்ணளி புரிந்து நிற்பத்
தண்துழாய் முடியோன் ஆதிப்
பண்ணவர் உவகை நீடிப்
பனிமலர் மாரி வீசி
அண்ணலை வழிபட் டேத்தி
அஞ்சலி புரிந்திட் டார்த்தார். 116

அனைய காலையில் அறுமுகன்
எழுந்துநின்று ஆங்கே
குனியும் வில்லுடைக் குறவர்தம
குரிசிலை நோக்கி
வனிதை தன்னுடன் சென்றுயாம்
செருத்தணி வரையில்
இனிது வைகுதும் என்றலும்
நன்றெனா இசைத்தான். 117

அந்த வேலையில் வள்ளிநாயகி
அயில் வேற்கைக்
கந்த வேள்பதம் வணங்கியே
கைதொழுது ஐய
இந்த மால்வரை இயற்கையை
இயம்புதி என்னச்
சிந்தை நீடுபேர் அருளினால்
இன்னன செப்பும் 118

---

116. அருள் புரிந்தார். திருமால் முதலிய தேவர்கள் பேரானந்த முற்று, நறுமலர் தூவி, முருகப்பெருமானை வணங்கித் துதித்து ஆரவாரித்தனர்.

117. அப்போது ஆறுமுகக் கடவுள் எழுந்தார். நம்பிராசனை நோக்கி, " வள்ளியோடு நாம் செருத்தணி மலையில் இருக்க விரும்புகின்றோம் " என்றார். நல்லது என்று நம்பியும் இசைந்தான்.

118. செருத்தணி மலையை வந்து சேர்ந்தபோது, வள்ளியம்மை கந்தவேளடி பணிந்து, " ஐயனே ! இந்த

செங்கண் வெய்யசூர்ச் செருத்தொழி
　　லினும்சிலை வேடர்
தங்க ளிற்செயும் செருத்தொழி
　　லினும்தணிந் திட்டே
இங்கு வந்துயாம் இருத்தலால்
　　செருத்தணி என்றோர்
மங்க லந்தரு பெயரினைப்
　　பெற்றதிவ் வரையே. 119

மந்த ரத்தினும் மேருமால்
　　வரையினும் மணிதோய்
கந்த ரத்தவன் கயிலையே
　　காதலித் ததுபோல்
சுந்த ரக்கிரி தொல்புவி
　　தனிற்பல எனினும்
இந்த வெற்பினில் ஆற்றவும்
　　மகிழ்ச்சியுண்டு எமக்கே. 120

இந்த வெற்பினைத் தொழுதுளார்
　　பவமெலாம் ஏகும்
சிந்தை அன்புடன் இவ்வரை
　　யின்கணே சென்று

---

மலையின் தன்மையைச் சொல்ல வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள். அவள் வேண்டுகோளுக்கு அன்புடன் இசைந்து,

119. "மாதே! திருத்தணிகை என்னும் பெயருடைய இக்குன்றம், நம்மால் செருத்தணி என்ற மங்கலப் பெயர் பெற்றது. செருக்களத்தில் சூரன் செய்த போரும், வள்ளி மலையில் வேடர் செய்த போரும் தணிந்து இங்கு நாம் வந்திருத்தலால் இது செருத்தணி யாயிற்று.

120. மந்தரம் என்னும் மலையும், மேரு மா மலையும் இருப்பினும், சிவபெருமான் கயிலாசமலையை விரும்பியவாறே, இவ்வுலகில் அழகிய மலைகள் பல இருப்பினும் எமக்கு இந்த மலையிலே தனி விருப்பம் உண்டு.

121. இதனைத் தொழுபவர் பாவம் எல்லாம் ஒழியும். மனத்தில் அன்புகொண்டு, இம்மலையை வந்து

முந்த நின்றஇச் சுனைதனில்
விதிமுறை மூழ்கி
வந்து நந்தமைத் தொழுதுளார்
நம்பதம் வாழ்வார். 121

இவ்வரை ஒருசார் தன்னில்
ஈராறுதோள் உடைய எந்தை
மைவிழி அணங்கும் தானும்
மாலயன் உணரா வள்ளல்
ஐவகை உருவில் ஒன்றை
ஆகம விதியால் உய்த்து
மெய்வழி பாடு செய்து
வேண்டியாங் கருளும் பெற்றான். 122

தள்ளரும் விழைவின் மிக்க
தணிகையி னின்றும் ஓர்நாள்
வள்ளியும் தானும் ஆக
மானமொன் றதனிற் புக்கு
வெள்ளியங் கிரியின் பாங்கர்
மேவிய கந்த வெற்பில்
ஒள்ளிணர்க் கடப்பந் தாரோன்
உலகெலாம் வணங்கப் போனான். 123

---

அடைந்து, முகப்பிலுள்ள சுனையிலே முறைப்படி நீராடி நம்மை வழிபடும் அடியார் என்றும் நம் பதத்தில் வாழ்வார்" என்றார்.

122. இத்தகைய தணிகை மலையின் ஒரு பக்கத்தில் அறுமுகப் பிரான் ஈசனுடைய ஐந்துவகை உருவங்களில் ஒன்றான கன்ம சாதாக்கிய வடிவத்தை ஆகம விதிப்படி நிறுவி, வழிபட்டுச் சிவனருள் பெற்றார்.

123. ஒரு நாள், திருத்தணிகை மலையினின்றும் புறப்பட்டு முருகவேளும் வள்ளி நாயகியும் விமானத்தி லேறி வெள்ளியங்கிரியின் அருகே யமைந்த கந்தமா மலையில் சென்று சேர்ந்தார்கள்.

கந்தவெற் பதனிற் சென்று
கடிகெழு மானம் நீங்கி
அந்தமில் பூதர் போற்றும்
அம்பொன் ஆலயத்தின் ஏகி
இந்திரன் மகடூ வாழும்
ஏந்திழை இனிது வாழும்
மந்திரம் அதனிற் புக்கான்
வள்ளியும் தானும் வள்ளல். 124

ஆங்கது காலை வள்ளி
அமரர்கோன் அளித்த பாவை
பூங்கழல் வணக்கம் செய்யப்
பொருக்கென எழுந்து புல்லி
ஈங்கொரு தமியள் ஆகி
இருந்திடு வேனுக் கின்றோர்
பாங்கிவந் துற்ற வாறு
நன்றெனப் பரிவு கூர்ந்தாள். 125

சூர்க்கடல் பருகும் வேலோன்
துணைவியர் இருவரோடும்
போர்க்கடல் கொண்ட சீயப்
பொலன்மணி அணைமேற் சேர்ந்தான்

---

124. விமானத்தை விட்டிறங்கி, இருவரும் அழகிய பொற் கோயிலின் உள்ளே புகுந்து, இந்திரன் புதல்வியாகிய தேவயானை இனிது வாழும் ஆலயத்தை அடைந்தார்கள்.

125. அப்போது வள்ளி நாயகி தேவயானையம்மையின் திருவடிகளை வணங்கினாள். உடனே அவள் எழுந்து, வள்ளியை எடுத்து அணைத்து, " இங்கு தனியளாக இருந்த எனக்கு இன்று ஒரு தோழி வந்து சேர்ந்தது நன்று " என அன்போடு கூறினாள்.

பாற்கடல் அமளி தன்னில்
　　பாவையர் புறத்து வைகக்
கார்க்கடல் பவள வண்ணன்
　　கருணையோ டமரு மாபோல். 126

இந்திரன் அருளும் மாதும்
　　எயினர்தம் மாதும் இவ்வாறு
அந்தரம் சிறிதும் இன்றி
　　அன்புடன் அளவ ளாவிச்
சிந்தையும் உயிரும் செய்யும்
　　செயற்கையும் சிறப்பும் ஒன்றுக்
கந்தமும் மலரும் போலக்
　　கலந்துவே றின்றி உற்றார். 127

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
　　அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
　　குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
　　யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
　　வாழ்கசீர் அடியார் எல்லாம்.

---

126. பாற் கடற் பள்ளியில் திருமகளும் நிலமகளும் இருபுறமிருக்க, மாயவன் அமர்ந்திருக்கும் பான்மைபோல், தேவயானையும் வள்ளியும் இருபுறமிருக்க அரியாசனத்தில் முருகப் பெருமான் எழுந்தருளினர்.

127. வானவர்கோன் பெற்ற மாதும், வேடர் கோன் வளர்த்த மாதும் சிறிதும் வேற்றுமையின்றி, அன்புடன் அளவளாவி, உள்ளமும் உயிரும், செய்கையும் சிறப்பும் ஒன்றாகி, மணமும் மலரும் போலக் கலந்து வாழ்ந்தார்கள்.

தமிழகம்

# "ஊரும் பேரும்"

**ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,**
எழுதியது

"திரு. வி. க." அவர்கள் முகவுரையுடன்

நம்மிற் பலருக்கு நாம் வசிக்கும் ஊரின் பெயர் எக்காரணம்பற்றி வந்தது என்பது தெரியாதிருக்கலாம். முற்காலத்தில் இடப்பட்ட ஊர்களின் பெயர்கள் பிற்காலத்தில் உருவு திரிந்து விட்டிருக்கின்றன. இதனாலும் நாம் திகைக்க நேரும். இந்நூலின் ஆசிரியர் இவ்விதமான வீண் சந்தேகங்களைத் தெரிந்து கொள்ளுதற்கே தமிழ் நாட்டிலுள்ள தொன்மையான ஊர்களின் பெயர் வரலாற்றை அழகாக வரைந்துள்ளார்.

ஒவ்வொரு தமிழன் கையிலும் ஒவ்வொரு, புத்தக சாலையிலும் இருக்கவேண்டிய அரிய நூல் இது.

கலிகோ பைண்ட் : : விலை ரூ. ஐந்து

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

இயற்றிய

# வேறு நூல்கள்

1. வேலும் வில்லும்
2. தமிழகம் - ஊரும் பேரும்
3. ஆனந்தக் குமரன்
4. திருவள்ளுவர் நூல்நயம்
5. திருக்காவலூர்க் கோவில்
6. கந்தபுராணத் திரட்டு
   (1) உற்பத்தி காண்டம்.
7. ௸ (2) அசுர, காண்டம்
   மகேந்திர காண்டம்
8. தமிழ் விருந்து
9. கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள்

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

# திருப்புகழ் விருத்தியுரை

இவ் அரிய நூலில், திருவேரகம் எனும் **சுவாமிமலை**, திருவாவினன்குடி எனும் **பழநி**. திருச்சீரலைவாய் எனும் **திருச்செந்தூர்** ஆகிய 3-திவ்விய ஸ்தலங்களின்மீது **ஸ்ரீமத் அருணகிரிநாதர்** பாடிய திருப்புகழ்ப் பாட்டுகள், அத்திருப்பாடல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை முதலியன மிக்க அழகாய் எழுதப்பட்டு, உயர்ந்த கனமான காகிதத்தில் அழகாய் அச்சிட்டு, கண்கவரும்படி உயர்தர பைண்ட் செய்யப்பட்டது. கிளேஸ் காகிதப் பதிப்பு படங்களுடன் ரூ. 7—8—0. (தபால், ரிஜிஸ்டர் செலவு தனி)

## பத்திரிகை அபிப்பிராயங்கள்

**சுதேசமித்திரன்.**—* முதனூலின் அழகிற் கியைந்ததாயிருக்கிறது, முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

**லோகோபகாரி.**—* இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாக் குறை நெடுநாளாக இருந்துவந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்,

**ஸ்வராஜ்யா.**—* பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

**குமரன்.**—* பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்,

**இந்து சாதனம்.**—* மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கிறது.

**ஸமரஸ போதினி.**—* திருப்புகழுக்கு இதுவரை நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகைய உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்கு விளக்கி எழுதப்பட்டிருக்கின்றது.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4**

ஏற்கனவே வெளிவந்துள்ள காண்டங்கள்

# கந்த புராணத் திரட்டு

(1,453 - பாட்டுகள் கொண்டது பொழிப்புரையுடன்)

---

முதல் புத்தகம் :

## உற்பத்தி காண்டம்

352-பாட்டுகள் விலை ரூ. 1—4—0

---

இரண்டாம் புத்தகம் :

## அசுர காண்டம்
## மகேந்திர காண்டம்

329 பாட்டுகள் விலை ரூ. 1—14—0

---

உங்கள் பிரதிகளுக்கு உடனே எழுதுக.

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

# முருகன் மதுர கீர்த்தனை

பக்திரஸம் ததும்பும்
புதிய தமிழ்ப் பாட்டுகள்

சங்கீத வித்துவான்
மாயூரம் - டி. ஆர். விசுவநாத சாஸ்திரிகள்
இயற்றியவை

கலிகோ பைண்ட் : : விலை ரூபா, 3/-

---

## புகழ்மொழிகளில் சில

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்.— * புத்தகத்தை முற்றிலும் வாசித்துப் பார்த்தேன். அது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது என்று கூறுவது மிகையாகாது. * இப்புத்தகம் தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டு மென்பது என் வேண்டுகோள்.

திருப்பரம்புரம் டி. என். சுவாமிநாதப் பிள்ளை, சீனியர் லெக்சரர், இசைக்கல்லூரி, அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.— * மதுரமாகவே மகிழ் ஊட்டுகின்றது. * தமிழ் வளர்ச்சிக்குத் தக்க சாதனமான இலக்காகவும் இலங்குகின்றது.

திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர்.— * முருகன் மதுர கீர்த்தனங்களில் சங்கீத வித்துவான்கள் பாட அரிய கன நடை கீர்த்தனங்களும், தமிழ் வல்லமையில்லாத சாதாரண ஜனங்களும் ஆளக்கூடிய பக்தி ததும்பிய பாட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. * ஏற்கனவே இவ்வாசிரியர் இயற்றிய கீர்த்தனங்களைப் பலர் பாடி வருகிறார்கள். இந்நூலைத் தமிழ் நேசர்கள் விரும்புவது திண்ணம்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4